24 மணி நேரமும் உடனுக்குடன் செய்திகளை அறிந்துகொள்ள
NEWUTHAYAN.COM

# உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்


பக்கங்கள்: 28
விலை: 30

சுடர் 34 கதிர் 33 மார்கழி 13ஆம் நாள் சனிக்கிழமை 29 டிசெம்பர் 2018 வள்ளுவர் ஆண்டு 2049

### அரசமைப்பின் 9ஆவது சரத்தில் குறிப்பிட்டுள்ளவாறு

# பௌத்தத்துக்கு முன்னுரிமை என்பதில் ஒரு எழுத்துக் கூட மாற்றப்படாது

## கிளிநொச்சிக்கு வருவதற்கு முன்பதாக மகாநாயக்கர்களைச் சந்தித்து ரணில் உறுதி



கண்டி, டிசெ. 29

பௌத்தத்துக்கு முன்னுரிமை வழங்குவதை உறுதிப்படுத்தும், அரசமைப்பின் 9ஆவது சரத்தில் ஓர் எழுத்துக் கூட புதிய அரசமைப்பில் மாற்றப்படாது. மகாநாயக்க தேரர்களை நேற்று நேரில் சந்தித்து தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்க இந்த உறுதிமொழியை வழங்கினார்.

வெள்ள இடர்பாதிப்புக்களை பார்வையிடுவதற்காக கிளிநொச்சிக்கு நேற்று வருவதற்கு முன்னர், கண்டி தலதாமாளிகைக்குச் சென்று வழிபாடுகளில் ஈடுபட்டார். அதனைத் தொடர்ந்து அஸ்கிரிய மற்றும் மல்வத்து பீடங்களின் மகாநாயக்க தேரர்களைச் சந்தித்தார். >> 06

## இரணைமடுக்குள முகாமைத்துவம் வெள்ளப் பேரிடருக்கு காரணமா?

### 'விசாரிக்க மூவர் அடங்கிய குழு வடக்கு ஆளுநரால் நியமனம்

கிளிநொச்சி, டிசெ. 29

கிளிநொச்சி மற்றும் முல்லைத்தீவு மாவட்டங்களில் ஏற்பட்ட வெள்ள இடருக்கு இரணைமடுக் குளத்திலிருந்து நீர் >> 06

## பேரழிவுகள் ஒரே பார்வையில்

**கிளிநொச்சி**

- ★ 24,184 குடும்பங்களைச் சேர்ந்த 74,730பேர் பாதிப்பு
- ★ ஒருவர் உயிரிழப்பு, இருவர் காயம்
- ★ 386 வீடுகள் முழுமையாகச் சேதம், 2,223 வீடுகள் பகுதியளவில் சேதம்
- ★ 189 வீதிகள் பெரியளவில் சேதம்
- ★ 26,400 ஏக்கர் வயல் அழிவு
- ★ 2,400 ஏக்கர் ஏனைய பயிர்கள் அழிவு
- ★ நாளாந்த கூலித் தொழிலாளர்கள் 9ஆயிரம் பேர் பாதிப்பு

**முல்லைத்தீவு**

- ★ 10,104 குடும்பங்களைச் சேர்ந்த 31,923பேர் பாதிப்பு
- ★ 86 வீடுகள் முழுமையாகச் சேதம், 2,297 வீடுகள் பகுதியளவில் சேதம்
- ★ 277 கிலோ மீற்றர் நீளமான வீதிகள் சேதம்
- ★ 9,929 ஏக்கர் வயல் அழிவு
- ★ 4,500 ஏக்கர் ஏனைய பயிர்கள் அழிவு
- ★ 17 படகுகள், 187 வலைகள் வெள்ளத்தில் அடித்துச் செல்லப்பட்டன
- ★ 1,270 மாடுகள், 363 ஆடுகள், 3,363 கோழிகள் சாவு

(5,105)

- பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு தலா 10,000 ரூபா
- நுண்கடனை வசூலிப்பது ஒரு மாதத்துக்கு இடைநிறுத்தம்
- விவசாயக் கடன், சிறுமுயற்சியாளர்களின் கடன்கள் அறவீடு நிறுத்தம்
- இடர்பாதித்த பகுதிகளிலுள்ள பிரதேச சபைகளுக்கு 15 மில்லியன் ரூபா
- சுகாதார நிலமையை ஆராய தெற்கிலிருந்து சிறப்பு மருத்துவக் குழு
- வீடுகளுக்கு சேத மதிப்பீட்டின் அடிப்படையில் நிதி உதவி

# வறுமையிலிருந்த மாவட்டங்களையே வெள்ளப்பேரிடர் துன்பப்படுத்தியுள்ளது

### துரிதகதியில் உதவிகள் வழங்கப்படும் என்று ரணில் கிளிநொச்சியில் அறிவிப்பு

கிளிநொச்சி, டிசெம்பர் 29

வறுமையில் முதலிடங்களிலிருந்த முல்லைத்தீவு மற்றும் கிளிநொச்சி மாவட்டங்களை வெள்ளப் பேரிடர் மீண்டும் துன்பத்துக்குள் தள்ளிவீழ்த்தியுள்ளது. பாதிக்கப்பட்ட மக்கள் விரைவில் மீண்டுவருவதற்கு உடனடியாக அனைத்து உதவிகளும் வழங்கப்படும். இவ்வாறு தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார். வெள்ளப்பெருக்கினால் பெரும் பாதிப்பைச் சந்தித்த கிளிநொச்சி மற்றும் முல்லைத்தீவு மாவட்டங்களை நேரடியாகப் பார்வையிடுவதற்காக தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான குழுவினர் கிளிநொச்சிக்கு நேற்று வருகை தந்தனர். >> 06

## பல்கலை மாணவன் பகிடிவதையால் கழுத்தறுத்து உயிர்துறக்க முயற்சி

### உறவினர்களால் காப்பாற்றப்பட்டு கிளி. மருத்துவமனையில் சேர்ப்பு

கிளிநொச்சி, டிசெ. 29


யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்தின் கிளிநொச்சி வளாகத்தைச் சேர்ந்த பல்கலைக் கழக மாணவன், கழுத்தறுத்து காயங்களுடன் கிளிநொச்சி மருத்துவமனையில் நேற்று இரவு சேர்க்கப்பட்டுள்ளான். பகிடி >> 06

## வடக்கு - தெற்கு என்ற வேறுபாடு இல்லாமல் உதவிகளைத் துரிதமாக வழங்க வேண்டும்

### உலங்குவானூர்தியில் அழிவுகளைப் பார்வையிட்டவாறு அமைச்சர்களிடம் தெரிவித்தார் தலைமை அமைச்சர்

யாழ்ப்பாணம், டிசெ. 29

வடக்கு - தெற்கு என்ற வேறுபாடு இல்லாமல் வெள்ளத்தால் மோசமாகப் பாதிக்கப்பட்டுள்ள வன்னிமக்களுக்கான அனைத்து உதவிகளையும் நாம் விரைவாக வழங்க வேண் >> 23



## டெங்கு நோய்த் தாக்கத்தால் 6வயதுச் சிறுமி பரிதாபச் சாவு

மன்னார், டிசெ. 29

மன்னார் பனங்கட்டிக்கொட்டு கிராமத்தில் டெங்கு நோய்த் தாக்கம் காரணமாக 6 வயதுச் சிறுமி ஒருவர் பரிதாபகரமாக நேற்று உயிரிழந்துள்ளதாக மன்னார் மருத்துவமனை வட்டாரங்கள் தெரிவித்தன.

நிக்சன் நிசாளினி என்னும் சிறுமியே உயிரிழந்தவராவார். >> 23

### வடக்கிலிருந்து

## இராணுவத்தை வெளியேறக்கோரும் அரசியல்வாதிகள் வெள்ளஇடர் மீட்புப் பணிகளில் தலைகாட்டவேயில்லை

### பிரிகேடியர் சுமித் அத்தப்பத்துவின் கண்டுபிடிப்பு

கொழும்பு, டிசெ. 29

கிளிநொச்சி மற்றும் முல்லைத்தீவு மாவட்டங்களில் வெள்ள இடர்களில் சிக்கியுள்ள மக்களை உடனடியாகக் காப்பாற்றும் நடவடிக்கைகளில் ஈடுபட்டது இராணுவத்தினரே. அவர்களை அங்கிருந்து வெளியேறக் கோரும் எந்தவொரு அரசியல்வாதிகளும் உடனடியாக அங்கு வரவில்லை. இவ்வாறு இராணுவப் பேச்சாளர் பிரிகேடியர் சுமித் அத்தப்பத்து தெரிவித்தார். >> 06

## ரணிலை ஆட்சியிலிருத்துவதில் காட்டிய அக்கறையை இடரில் பாதிக்கப்பட்ட மக்களிடம் ஏன் காட்டவில்லை?

### கூட்டமைப்பிடம் கேள்வி எழுப்புகிறது மகிந்த அணி

கொழும்பு, டிசெ. 29

ரணில் விக்கிரமசிங்கவை மீண்டும் ஆட்சியிலிருத்துவதற்குக் காட்டிய அக்கறையை, வன்னியில் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்களிடத்தில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு காட்டவில்லை. இவ்வாறு மகிந்த அணி நாடாளுமன்ற உறுப்பினர் செஹான் சேமசிங்க தெரிவித்தார்.

பொதுமக்கள் முன்னணியின் அலுவலகத்தில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர்கள் சந்திப்பிலேயே மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் >> 23

# மாவன்னல்ல சம்பவம் நாட்டை பிரிப்பதற்கான சதி முயற்சியே

## இப்படிச் சீறுகிறார் குணதாச

கொழும்பு, டிசெ. 29

பிரபாகரன் மூலமாகவும், புதிய அரசமைப்பு ஊடாகவும் நாட்டைப் பிளவுபடுத்தும் முயற்சி தோல்வியடைந்துவிட்டது. இதனையடுத்து இன, மத ரீதியான வன்முறைகளைத் தூண்டி நாட்டைப் பிரிக்கும் முயற்சிகள் இடம்பெறுகின்றன. மாவன்னல்ல சம்பவத்தை இதன் அங்கமாகவே பார்க்கவேண்டியுள்ளது. இவ்வாறு கலாநிதி குணதாச அமரசேகர தெரிவித்தார்.

கொழும்பில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

பிரபாகரன் மூலம் நாட்டைப் பிளவுபடுத்த பன்னாட்டுச் சமூகம் முயற்சித்தது. பிரபாகரன் தோற்கடிக்கப்பட்டதன் ஊடாக அந்தத் திட்டம் தோல்வியடைந்தது. 19ஆவது அரசமைப்புத் திருத்தம் ஊடாக தமது நோக்கத்தை நிறைவேற்ற முயற்சித்தார்கள். கூட்டு அரசிலிருந்து சுதந்திரக் கட்சி வெளியேறியதன் ஊடாக இரண்டாவதுதிட்டமும்தோல்வியடைந்தது.



இரண்டு திட்டங்களும் தோல்வியடைந்தமையால், நாட்டுக்குள் இன, மத வன்முறைகளைத் தூண்டி பிரச்சினைகளை ஏற்படுத்தி பன்னாட்டுச் சமூகம் அமைதிப்படை என்ற பெயரில் நாட்டுக்குள் நுழைய முயற்சிக்கின்றது.

அளுத்கம, பேருவளை, கண்டி திகன வன்முறைகள் இதன் ஓர் அங்கமே. தற்போது மாவன்னல்லையில் இடம்பெற்ற சம்பவமும் இதுபோன்றதொன்றே. மாவன்னல்ல சம்பவம் நன்கு திட்டமிட்டு மேற்கொள்ளப்பட்டுள்ளது.

மேலும், வடக்கு மாகாணத்தில் உள்ள ஆவாக் குழுவை புலிகளின் பிரிவாகவே கருதவேண்டியுள்ளது. வடக்கில் பொலிஸார் ஆவாக் குழுவினராலேயே கொல்லப்பட்டார்கள். (5,31)

---

## மன்னார் புதைகுழி அகழ்வுக்கு உதவுவது தவிர்க்க முடியாதது

### ஆணையாளர் சாலிய பீரிஸ் தெரிவிப்பு

உண்மையை நிலை நிறுத்துவதிலும், நபர்கள் காணாமலாக்கப்பட்ட சூழ்நிலைகளை உறுதிசெய்வதிலும், அவர்களுக்கு நேர்ந்தது என்ன என்பது தொடர்பில் கண்டறிவதிலும் காணாமற்போனோர் அலுவலகம் அர்ப்பணிப்புடன் செயற்பட்டு வருகின்றது. மன்னார் மனிதப்புதைகுழி



யில் இருந்து அகழ்ந்தெடுக்கப்படும் எச்சங்களை புலனாய்வு செய்வதற்கு எமது அலுவலகம் உதவிவருவது தவிர்க்க முடியாது. இவ்வாறு காணாமற்போனோர் பணியகத்தின் ஆணையாளர் சாலிய பீரிஸ் தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் நேற்று விடுத்துள்ள அறிக்கையிலேயே மேற்கண்டவாறு கூறியுள்ளார்.

அதில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:

"2018ஆம் ஆண்டு ஜூலை மாதம் முதல் மன்னார் மனிதப்புதைகுழியில் அகழ்வாராய்ச்சியை மேற்கொண்டு வரும் குழுவின் உணவு, தங்குமிட வசதி என்பவற்றுக்கான நிதியுதவியை எமது பணியகம் வழங்கி வருவதுடன், பருவகால மழை காரணமாக புதைகுழிக்கு மேலுள்ள நிலம் பாதிக்கப்படாமல் இருப்பதற்கான நடவடிக்கைகளையும் மேற்கொண்டுள்ளது.

இந்த ஆய்வுப் பணிகளின் உயர்தரத்தை உறுதிப்படுத்தி, புலனாய்வுச் செயற்பாட்டில் பொதுமக்களின் நம்பிக்கையை உறுதிப்படுத்திக் கொள்ள வேண்டிதன் அவசியத்தையும் உரிய அதிகாரிகளின் கவனத்துக்குக் கொண்டுவந்துள்ளேன். மன்னார் மனிதப்புதைகுழியில் இருந்து அகழ்ந்தெடுக்கப்படும் எச்சங்களை புலனாய்வு செய்வதற்கு எமது அலுவலகம் உதவிவருவது தவிர்க்க முடியாததொன்றாகும்" - என்றார். (5.61)

---

குமார வெல்கமவுக்கு

## எதிர்க்கட்சித் தலைமை பதவியை வழங்குங்கள்

### சபாநாயகரிடம் கோரிக்கை

கொழும்பு, டிசெ. 29

எதிர்க்கட்சித் தலைவராக ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி நாடாளுமன்ற உறுப்பினர் குமார வெல்கமவை நியமிக்குமாறு சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் பாதுகாப்பு இயக்கம், சபாநாயகர் கரு ஜயசூரியவுக்கு கடிதம் அனுப்பி வைத்துள்ளதாக இயக்கத்தின் ஒருங்கிணைப்பாளர் திலங்க வீரகோன் தெரிவித்தார்.

இதுதொடர்பில்அவர்மேலும் தெரிவித்ததாவது:

"எதிர்க்கட்சித் தலைமைப் பொறுப்பை யாருக்கு வழங்குவது என்பது தொடர்பாக தற்போது நாடாளுமன்றத்தில் சிக்கல் நிலமை ஏற்பட்டுள்ளது. ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் நாடாளுமன்ற உறுப்பினர் குமார வெல்கமவை எதிர்க்கட்சித் தலைவராக நியமிக்குமாறு சபாநாயகருக்கு கடிதத்தை அனுப்பி வைத்துள்ளோம்.

பொதுமக்கள் முன்னணியின் உறுப்பினராக இருக்கும் மகிந்தவுக்கு எதிர்க்கட்சித் தலைவராக பதவி வகிப்பதற்கு எந்த அடிப்படை உரிமையும் இல்லை. மகிந்த கடந்த தேர்தலில் சுதந்திரக் கட்சியின் சார்பாக போட்டியிட்டு குருநாகல் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினராகத் தெரிவு செய்யப்பட்டிருந்தார்.

அண்மையில் ஏற்பட்ட அரசியல் நெருக்கடிகளின் பின்னர் மகிந்த, சிறிலங்கா பொதுமக்கள் முன்னணியின் அங்கத்துவம் பெற்றதாக அனைத்து ஊடகங்களிலும் செய்திகள் வெளியாகியிருந்தன. இவ்வாறான பின்னணியில் எதிர்க்கட்சித் தலைவர் பதவியை தனக்கு வழங்குமாறு மகிந்த கோரியுள்ளார். மகிந்தவின் இந்தச் செயலுக்கு நாம் துணை போகமாட்டோம். நாடாளுமன்ற உறுப்பினர் குமார வெல்கமவை எதிர்க்கட்சித் தலைவராக நியமிக்க வேண்டும்.

ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் சார்பில் தேர்தலில் போட்டியிட்டு நாடாளுமன்றத்துக்கு தெரிவாகி தற்போது சிறிலங்கா பொதுமக்கள் முன்னணி அங்கத்துவம் பெற்றுள்ளவர்களுக்கு எதிராக அரச தலைவர் கடுமையான நடவடிக்கை எடுக்க வேண்டும். மகிந்த உள்ளிட்ட நாடாளுமன்ற உறுப்பினர்கள் சிலர் பொதுமக்கள் முன்னணியில் அங்கத்துவம் பெற்றமை வெளிப்படையாக இருக்கின்றபோதும் இதுவரையான காலப்பகுதியில் அவர்களுக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கப்படவில்லை.

தாம் பொதுமக்கள் முன்னணியில் அங்கத்துவம் பெறவில்லை என்று மகிந்த ராஜபக்ச உள்ளிட்டவர்கள் கருத்துத் தெரிவித்து வருகின்றார்கள். ஆனால் இதனை உறுதிப்படுத்த அவர்களிடம் எந்த ஆதாரங்களும் இல்லை.

இந்தச் செயற்பாடுகளுக்கு எதிராக அரச தலைவர் உடனடியாக நடவடிக்கை எடுக்காவிட்டால் தாம் சட்டத்தை நாட வேண்டிய நிலை ஏற்படும்" - என்றார். (5.31)

---

## மகிந்தவுக்கு பதவி இல்லையென்றால் இலங்கை முழுவதும் வன்முறை வெடிக்கும்

### வாசுதேவ எச்சரிக்கை

கொழும்பு, டிசெ. 29

எதிர்க்கட்சித் தலைவர் பதவியில் இருந்த மகிந்த ராஜபக்சவை நீக்க முயற்சித்தால் வன்முறை வெடிக்கும் என்று மகிந்த தரப்பினர் எச்சரித்துள்ளனர்.



கொழும்பில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு "மகிந்த அணி நாடாளுமன்ற உறுப்பினர் வாசுதேவ நாணயக்கார தெரிவித்தார்.

'மகிந்த ராஜபக்ச எதிர்க்கட்சித் தலைவராகியவுடன் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு மற்றும் ஐக்கிய தேசியக் கட்சி என்பன கோபம் அடைந்துள்ளன. மகிந்தவுக்கு எதிர்க்கட்சித் தலைவர் பதவி கிடைக்கவில்லை என்றால், பெரிய கிளர்ச்சி ஏற்படும். முழுமையான ஆட்சி முறை குறித்து நம்பிக்கை இழக்கும் போது பொதுவாக கிளர்ச்சி ஒன்றே ஏற்படும்' - என்றார் வாசுதேவ. (5)

---

## புத்தர் சிலை உடைப்பு விசாரணைகள் துரிதம்

### அமைச்சர் சஜித் தெரிவிப்பு

கொழும்பு, டிசெ. 29

திட்டமிட்ட குற்றச்செயல்களில் ஈடுபடும் குழுவினால், மாவனல்ல உள்ளிட்ட சில பகுதிகளில் புத்தர் சிலைகள் உடைத்து சேதமாக்கப்பட்டமை தொடர்பில் கலாசார மற்றும் தொல்பொருள் திணைக்கள அதிகாரிகளூடாக உடன் விசாரணை நடத்தப்படுவதாக அமைச்சர் சஜித் பிரேமதாச தெரிவித்துள்ளார்.

உடைத்து சேதமாக்கப்பட்ட புத்தர் சிலைகள் தொல்பொருள் பெறுமதிமிக்கவை அல்ல என்று ஆரம்பகட்ட விசாரணைகளில் கண்டறியப்பட்டதாக வீடமைப்பு நிர்மாணத்துறை மற்றும் கலாசார அமைச்சர் சஜித் பிரேமதாச தெரிவித்துள்ளார்.

மக்களால் வழிபடப்பட்டு வந்த புத்தர் சிலைகளை மீள நிறுவுவது முக்கியமானது எனவும் அதற்கான நடவடிக்கையை தாமதமின்றி முன்னெடுப்பதாகவும் அமைச்சர் கூறியுள்ளார்.

இதற்குத் தேவையான நிதி தற்போது மதிப்பீடு செய்யப்பட்டுள்ளதாகவும் எதிர்வரும் வாரங்களுக்குள் இந்த நடவடிக்கைகளை நிறைவு செய்ய எதிர்பார்த்துள்ளதாகவும் அமைச்சர் சஜித் பிரேமதாச வெளியிட்டுள்ள அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. (5)

---

## பேருந்தில் பயணிக்கும் பெண்களை காணொலி எடுத்த நடத்துநர் கைது

### வெளிநாட்டவர்களுக்கு விற்பனை செய்தாராம்

கொழும்பு, டிசெ. 29

காலி - மாத்தறை பிரதான வீதியில் பயணிக்கும் தனியார் பேருந்தின் நடத்துநர், பெண்கள் மற்றும் பாடசாலை மாணவிகளின் அந்தரங்கப் பகுதிகளை சூட்சுமமானமுறையில் காணொலி எடுத்த சந்தேகத்தில் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார். சந்தேகநபரிடமிருந்து இத்தகைய காணொலிகள் அடங்கிய 3 அலைபேசிகள் மீட்கப்பட்டுள்ளன.

நடத்துனரின் மேற்படி செயற்பாடு தொடர்பில் பொலிஸாருக்கு இரகசியத் தகவல் கிடைக்கப் பெற்றுள்ளது. பொலிஸார் நேற்றுத் திடீரென பேருந்தில் பயணித்துள்ளனர். நடத்துநர் காணொலி எடுத்துக் கொண்டிருந்தபோது பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

கைது செய்து அவரிடம் மேற்கொண்டிருந்த விசாரணைகளில், பேருந்தில் பயணிக்கும் பெண்களை ஒளிப்படம் எடுத்தும், அவர்கள் பேருந்தில் ஏறும் இறங்கும் வேளையில் மிகச் சூட்சுமமான முறையில் அந்தரங்கப் பகுதிகளை காணொலி எடுத்தும் அதனை ஹிக்கடுவை கடற்கரைக்கு வரும் வெளிநாட்டவர்களுக்கு விற்பனை செய்து வந்துள்ளதாகவும் தெரியவந்துள்ளது.

சந்தேக நபரை மீட்டிய கொட பொலிஸார், பலப்பிட்டிய நீதிவான் நீதிமன்றில் முற்படுத்தியபோது அவரை பொலிஸ் காவலில் தடுத்து விசாரணைக்குட்படுத்த நீதிவான் உத்தரவிட்டுள்ளார்.

சந்தேகநபர் காணொலிகளை சமூக வலைத்தளங்களில் பதிவேற்றியுள்ளாரா என்ற கோணத்திலும் விசாரணைகள் முடுக்கிவிடப்பட்டுள்ளன. (5,71)

---

## புத்தர் சிலை உடைப்பு 7பேர் இதுவரை கைது

கொழும்பு, டிசெ. 29

மாவன்னல்லபிரதேசத்தில் புத்தர் சிலைகள் உடைக்கப்பட்ட சம்பவங்கள் தொடர்பில் இதுவரை 7பேர் கைது செய்யப்பட்டுள்ளார்கள். இன்னும் இருவர் தேடப்படுகின்றார்கள் என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

மாவனல்லபிரதேசத்தில் கடந்த இரண்டு வாரங்களில் பல இடங்களில் புத்தர் சிலைகள் உடைக்கப்பட்டுள்ளன. இந்தச் சம்பவம் தொடர்பில் சந்தேகத்தில் முஸ்லிம் இளைஞன் ஒருவன் சந்தேகத்தில் கைது செய்யப்பட்டிருந்தார்.

இந்த நிலையில் மேலும் 6பேர் கைது செய்யப்பட்டுள்ளனர். இந்தச் சம்பவத்துடன் தொடர்புடைய சந்தேகத்தில் மேலும் இருவரைத் தேடி வருவதாகவும் பொலிஸார் தெரிவித்துள்ளனர். (5)

## அரசியல் நெருக்கடியின்போது விலை போகவில்லை ஐ.தே.க.

*அமைச்சர் சஜீவ கூறுகின்றார்*

கொழும்பு, டிசெ.29

“நாட்டில் அரசில் நெருக்கடி நீடித்தபோது ஐக்கிய தேசியக் கட்சியினர் பணத்துக்கும், முறையற்ற பதவிகளுக்கும் விலைபோகவில்லை. அனைவரும் ஒன்றிணைந்து நீதித்துறையின் ஊடாக ஜனநாயகத்தை மீண்டும் உறுதிப்படுத்தியுள்ளோம். தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்க, அமைச்சர் சஜித் பிரேமதாச ஆகியோரது தலைமைத்துவத்தின் கீழ் ஐக்கிய தேசியக் கட்சி முன்னேற்றமடையும்.”

இவ்வாறுவிஞ்ஞான,தொழில்நுட்ப மற்றும் ஆராய்ச்சி அமைச்சர் சுஜீவ சேனசிங்க தெரிவித்தார்.

தனது அமைச்சில் அவர் நேற்றுக் கடமைகளைப் பொறுப்பேற்றார். அதன் பின்னர் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவித்தபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:



“ஐக்கிய தேசியக் கட்சி புதிய விடயங்களை வரவேற்கின்றது. 2020ஆம் ஆண்டுக்குப் பின்னர் அரசியல் ரீதியில் நிலையான மாற்றத்தை ஏற்படுத்த வேண்டும். நாட்டின் தலைவராக இனி ஐக்கிய தேசியக் கட்சியைச் சேர்ந்தோரே தெரிவு செய்யப்படுவர்.

அமைச்சர் சஜித் பிரேமதாசவை அரச தலைவர் வேட்பாளராகக் களமிறக்கிப் பலருக்குப் பல விடயங்களைத் தெளிவுபடுத்துவோம். தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்கவின் தலைமைத்துவதில், ஐக்கிய தேசியக் கட்சியே அரசை முன்னெடுத்துச் செல்லும்” - என்றார். (ற)

# எதிர்க் கட்சித் தலைவர் சம்பந்தன் மட்டுமே!

## அமைச்சர் மனோ தெரிவிப்பு

**கொழும்பு, டிசெ.29**

**நாட்டின் தற்போதைய எதிர்க்கட்சித் தலைவர் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தனே. எதிர்த் தரப்பில் அமர்பவர்கள் அனைவரையும் எதிர்க்கட்சித் தலைவராக ஏற்றுக் கொள்ள முடியாது.**

இவ்வாறு தேசிய ஒருமைப்பாடு அரச கரும மொழிகள், சமூக முன்னேற்றம் மற்றும் இந்து சமய அலுவல்கள் அமைச்சர் மனோ கணேசன் தெரிவித்துள்ளார்.

ஆசிரியர்களைப் பாராட்டும் நிகழ்வு நேற்று வெள்ளிக்கிழமை அரச கரும மொழிகள் திணைக்களத்தில் நடைபெற்றது. அதில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

“பொதுத் தேர்தலை நடத்துவதற்கான அவசியம் இல்லை. பொதுத் தேர்தலை நடத்தப் போவதும் இல்லை. ஆனால் விரைவில் மாகாண சபைத் தேர்தல் நடத்தப்படும்.

போர்த்துக்கேயர் ஆட்சி புரிந்தபோது யாழ்ப்பாண இராச்சியம், கண்டி இராச்சியம், கோட்டை, சிதாவாக்கை என நாட்டில் பல்வேறு இராச்சியப் பிரிவுகள் காணப்பட்டன. வேறாக்கப்பட்ட இராச்சியத்தை வெள்ளையர்களே ஒன்றுப்படுத்தினர். அந்த ஒருமித்த நிலை தொடர்ந்து நாட்டில் நிலவ வேண்டும்.



மொழிகளுக்கான முக்கியத்துவத்தை புரிந்து அவற்றுக்கு முக்கியத்துவம் கொடுக்கப்பட வேண்டும். அரசு நிலையற்றது என்பதால் கிடைக்கும் குறுகிய காலத்தில் தேசிய மொழிகளுக்கிடையில் ஒருங்கிணைவை ஏற்படுத்துவதற்கான அனைத்து பணிகளும் முன்னெடுக்கப்படும்” - என்றார். (ற)

## ரணிலிடம் மைத்திரி பாடம் கற்கவேண்டும்

*மேர்வின் கூறுகின்றார்*

கொழும்பு, டிசெ.29

“அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர் மகிந்த ராஜபக்ச ஆகியோரின் அரசியல் சூழ்ச்சியை அமைதியாக சட்டத்தின் ஊடாகத் தோற்கடித்தமை காரணமாகவே மீண்டும் அரச தலைவரால் ரணில் விக்கிரமசிங்க தலைமை அமைச்சராக நியமிக்கப்பட்டார். ரணில் விக்கிரமசிங்கவிடம் அரசியல் இராஜதந்திரங்களை அரச தலைவர் கற்றுக்கொள்ளவேண்டும்.”

இவ்வாறு நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினர் மேர்வின் சில்வா தெரிவித்துள்ளார்.

விஞ்ஞான, தொழில்நுட்ப மற்றும் ஆராய்ச்சி அமைச்சர் சுஜீவ சேனசிங்க நேற்றுத் தனது அமைச்சில் கடமைகளைப் பொறுப்பேற்றுக் கொண்டார். அந்த நிகழ்வில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவித்தபோதே மேர்வின் சில்வா இவ்வாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

“உயர் நீதிமன்று வழங்கிய தீர்ப்பை அடுத்து அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன ஐக்கியதேசியக் கட்சியினரிடம் ஆட்சியை ஒப்படைக்க வேண்டிய நிலமை ஏற்பட்டது. தலைமை அமைச்சராக ரணில் விக்கிரமசிங்க நியமிக்கப்பட்ட பின்னர் அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன பல விமர்சனங்களைத் தொடுத்தார்.

இது நிறைவேற்று அதிகாரம் கொண்ட அரச தலைவருக்கு அழகல்ல. இன்றும் அவர் தனது தனிப்பட்ட வெறுப்புக்களை அரசியலில் முன்னிலைப்படுத்தி வருகின்றார்” - என்றார். (ற)

## தீர்மானம் மிக்க ஆண்டாக அடுத்த ஆண்டு இருக்கும்

*அமைச்சர் சம்பிக்க தெரிவிப்பு*

கொழும்பு, டிசெ.29

நாட்டின் ஆட்சி நிர்வாகம் எவ்வாறு அமைய வேண்டும் என்பதைத் தீர்மானிக்கும் ஆண்டாக 2019ஆம் ஆண்டு மாறியுள்ளது என்று தெரிவித்துள்ளார் பெருநகரங்கள், மேல்மாகாண அபிவிருத்தி அமைச்சர் பாட்டலி சம்பிக்க ரணவக்க தெரிவித்துள்ளார்.



இலங்கை மன்றக் கல்லூரியில் நடைபெற்ற நிகழ்வொன்றில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

“அடுத்த ஆண்டு அரச தலைவர் தேர்தல் கட்டாயம் நடத்தப்பட வேண்டும். அனைத்துக் கட்சிகளும் கலந்து ஆலோசித்து ஒரு நிலைப்பாட்டுக்கு வரும் பட்சத்தில் மாகாணத் தேர்தலை விரைவாக நடத்த முடியும். அதுமட்டுமன்றி நாடாளுமன்றத்தில் நிலையற்ற தன்மை தோன்றுமாயின் பொதுத் தேர்தல் நடத்தப்படுவதும் இன்றியமையாததாகும்.

அடுத்த ஆண்டு ஒரு தேர்தல் ஆண்டாக அமையும். எமது இலக்கு எதுவென நாம் தீர்மானித்துக் கொள்வது அவசியமாகும்” - என்றார். (ற)

## அரசியல் குழப்ப நிலையால் போர்க்குற்றம் மறைந்துள்ளது

*பேராசிரியர் கேட் க்ரோன் குற்றச்சாட்டு*

கொழும்பு, டிசெ.29

இலங்கையில் ஏற்பட்டுள்ள அரசியல் நிலைத்தன்மையின்மை காரணமாக போர்க்குற்றங்கள் தொடர்பிலான பொறுப்புக்கூறல் மறைக்கப்பட்டுள்ளது என்று லண்டன் பல்கலைக்கழகத்தின் அரசியல் விஞ்ஞான திணைக்கள உதவிப் பேராசிரியர் கேட் க்ரோன் பார்மன் குற்றம் சுமத்தியுள்ளார். ஐக்கிய நாடுகள் பற்றிய தகவல்களை வெளியிடும் யூ.என். டிஸ்பெச் இணையத்தளம், கேட் க்ரோன் பார்மன் இவ்வாறு குறிப்பிட்டார் என்று செய்தி வெளியிட்டுள்ளது.

இலங்கையில் போர் நிறைவடைந்து 10 வருடங்கள் கடந்து விட்டன. போரில் மனித உரிமை மீறல்கள் இடம்பெற்றதுடன் 40 ஆயிரத்துக்கும் மேற்பட்ட தமிழர்கள் கொல்லப்பட்டனர். ஆனால் போர்க்குற்றங்கள் தொடர்பில் இதுவரை நீதிக்கு முன் எவரும் நிறுத்தப்படவில்லை என்று அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

தற்போது ஏற்பட்டுள்ள அரசியல் நிலைத்தன்மையின்மை ஊடாக போரின் போது இழைக்கப்பட்ட போர்க்குற்றங்களை இலங்கை அரசு மறைக்கின்றது என்றும் அவர் கூறியுள்ளார். (ற)

## பிள்ளைகளுக்காகப் பிச்சை எடுத்த பெண் கண்டுபிடிப்பு

*வவுனியா மாவட்ட சமூக சேவை அலுவலர் வெற்றிகரம்*

வவுனியா, டிசெ.29

கணவனை இழந்த நிலையில், தனது 4 பிள்ளைகளை வளர்ப்பதற்காக வேறு வழியின்றிக் கால் முடம், வாய் பேச முடியாது என்று கூறி பிச்சை எடுத்து வந்த பெண் ஒருவரை மாவட்ட சமூக சேவை அலுவலர் வெற்றிகரமாகக் கண்டுபிடித்துள்ளார். இனிமேல் பிச்சை எடுக்கக் கூடாது என்று எச்சரித்து அந்தப் பெண் விடுவிக்கப்பட்டார். இந்தச் சம்பவம் வவுனியாவில் நடந்துள்ளது.

மட்டக்களப்பைச் சேர்ந்த பெண் ஒருவர் வவுனியாவில் பிச்சை எடுத்து வந்துள்ளார். அவருக்குக் காலில் உபாதை உள்ளது. எனினும் அவர் கால் முடம், வாய் பேச முடியாது என்று கூறி பிச்சை எடுத்து வந்துள்ளார்.

இவர் வீதிகளில் கைகளுக்குச் செருப்பு அணிந்து அரைந்தவாறு பிச்சை எடுத்து வந்ததை சிலர் சமூக சேவை அலுவலருக்குத் தெரியப்படுத்தினர். அலுவலர் அந்தப் பெண்ணைச் சந்தித்து உரையாடியுள்ளார். அவருக்குச் சக்கர நாற்காலி பெற்றுத் தரப்படும் என்றும் கூறியுள்ளார்.

அந்தப் பெண் வேண்டாம் என்று கூறியுள்ளார். அதனால் சந்தேகம்கொண்ட அந்த உத்தியோகத்தர் பொலிஸாருக்கு அறிவித்துப் பெண்ணை மருத்துவமனைக்குக் கொண்டு சென்றுள்ளார். அப்போது அந்தப் பெண் தான் கதைப்பேன் என்றும், தன்னை மன்னித்து விடவும் என்றும் தெரிவித்துள்ளார். அதையடுத்து மீண்டும் பிச்சை எடுத்தால் நடவடிக்கை எடுக்கப்படும் என்று எச்சரித்து உத்தியோகத்தரால் அந்தப் பெண் விடுவிக்கப்பட்டார்.

அந்தப் பெண்ணின் கணவர் கடற்றொழில் செய்பவர். அவர் 6 ஆண்டுகளுக்கு முன்னர் இறந்துவிட்டார். பெண்ணுக்கு 5 பிள்ளைகள் உள்ளனர். அவர்களில் ஒருவர் திருமணம் செய்துவிட்டார். ஏனைய பிள்ளைகளை வள்ர்க்க வழி தெரியாத அந்தப் பெண் வேறு வழியின்றித் தனக்கு முடம் என்றும், பேச முடியாது என்றும் கூறி பிச்சை எடுத்து வந்துள்ளார். தற்போது தன் பிள்ளைகளை எவ்வாறு வளர்ப்பது என்று தெரியவில்லை என்று அந்தப் பெண் கண்ணீருடன் தெரிவித்துள்ளார். (ற-110)

## பெறுபேறு தொடர்பான வதந்திகள் நிராகரிப்பு

கொழும்பு, டிசெ.29

கல்விப் பொதுத் தராதர உயர்தரப் பரீட்சை பெறுபேறுகளின் வெளியீடு தொடர்பாக ஊடகங்களில் வெளியாகும் வத்ந்திகளைப் பரீட்சைகள் திணைக்களம் நிராகரித்துள்ளது.

பெறுபேறுகள் நேற்றுமுன்தினம் வெளியாகும் என்று ஊடகங்களில் தகவல் வெளியாகியிருந்தது. எனினும் பெறுபேறுகள் நாளைமறுதினத்துக்கு முன்னர் வெளியாகும் என்றும் பரீட்சைகள் திணைக்களம் அறிவித்துள்ளது.

பரீட்சை பெறுபேறுகளை வெளியிடுவதற்கு முன்னர் சில நடைமுறைகளை பின்பற்ற வேண்டியுள்ளது என்று பரீட்சைகள் திணைக்களத்தின் ஆணையாளர் நாயகம் தெரிவித்தார்.

உயர்தரப்பரீட்சை பெறுபேறுகள் டிசம்பர் 27ஆம் திகதியும், சாதாரண தரப் பரீட்சை பெறுபேறுகள் மார்ச் 28ஆம் திகதியும், 5ஆம் தரப் புலமைப்பரிசில் பரீட்சை பெறுபேறுகள் ஒக்ரோபர் 5ஆம் திகதியும் வெளியாகும் என கல்வியமைச்சர் அகில விராஜ் காரியவசம் ஏற்கனவே தெரிவித்தமைக்கு அமைய ஊடகங்களில் செய்திகள் வெளியாகியிருந்தன. (ற)

# வெளிநாட்டுக் குடியுரிமைக்கே வடக்கு, கிழக்கில் குழப்பங்கள்

## கண்டுபிடித்தார் ஹேமகுமார

**கொழும்பு, டிசெ.29**
**போரால் இடம்பெயர்ந்து மேற்குலக நாடுகளுக்குச் சென்றவர்களுக்கு அங்கு குடியுரிமை தொடர்பில் சிக்கல்கள் ஏற்பட்டுள்ளன. அதனால் வடக்கு, கிழக்கில் குழப்பங்களை உருவாக்கும் சதித்திட்டத்தை அடிப்படைவாத அரசியல்வாதிகள் மூலம் சாதிக்க முற்படுகின்றனர். இவ்வாறு குற்றஞ்சாட்டியுள்ளார் மேல் மாகாண ஆளுநர் ஹேமகுமார நாணயக்கார.**

கொழும்பில் நேற்றுமுன்தினம் நடத்திய செய்தியாளர் சந்திப்பிலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.
அவர் மேலும் தெரிவித்ததாவது:
"போரின்போதும், போருக்குப் பின்னரான காலப் பகுதியிலும் நாட்டில் இருந்து புலம்பெயர்ந்து பலர் மேற்குலக நாடுகளில் தற்காலிகக் குடியுரிமை பெற்றுள்ளனர். இலங்கையில் சமாதானச் சூழல் ஏற்பட்டுள்ளதால் அமெரிக்கா, கனடா, பிரிட்டன் போன்ற பல மேற்குலக நாடுகள் அவர்களைத் திருப்பி அனுப்ப நடவடிக்கைகள் எடுத்துள்ளன. அதில் இருந்து தப்புவதற்கு வடக்கு, கிழக்கில் குழப்பங்களைத் தோற்றுவிக்க புலம் பெயர் அமைப்புக்கள் முயல்கின்றன.
வடக்கு, கிழக்கில் உள்ள சில அரசியல்வாதிகள் இந்த நாட்டின் ஒற்றையாட்சியை நாசமாக்கி வடக்கு, கிழக்கைப் பிரித்து தமிழ், சிங்கள, முஸ்லிம் மக்களின் நல்லிணக்கத்தை உடைத்தெறியப் பார்க்கின்றனர். இனவாதத் தீயை மூட்டி அதிகாரத்தைக் கைப்பற்றி அதைச் சாதிக்க முயற்படுகின்றனர்"- என்றார். (ற-10)

# தொடருந்தில் மோதி இருவர் சாவு

கொழும்பு, டிசெ.29
வெள்ளவத்தை, கரையோரப் பாதுகாப்புக் கடற்படை முகாமுக்கு அருகில் பெண் ஒருவர் தொடருந்துடன் மோதுண்டு நேற்றுமுன்தினம் உயிரிழந்துள்ளார் என்று பொலிஸ் ஊடகப் பிரிவு தெரிவித்தது.
மொரட்டுவவைச் சேர்ந்த 42 வயதுப் பெண் ஒருவரே உயிரிழந்துள்ளார் என்று தெரிவிக்கப்பட்டது.
அதேவேளை, வெள்ளவத்தைக் கடலோர வீதிச் சந்திக்கு அருகில் உள்ள தொடருந்துக் கடவைக்கு அருகில் தொடருந்துடன் மோதி ஒருவர் உயிரிழந்துள்ளார் என்று தெரிவிக்கப்பட்டது.
65 வயது மதிக்கத்தக்க ஒருவரே உயிரிழந்துள்ளார். உயிரிழந்தவர் அடையாளம் காணப்படவில்லை என்று பொலிஸார் தெரிவித்தனர். (ற-222)

# பேருந்துக் கட்டணத்தை குறைக்காவிடில் ஆபத்து

## போக்குவரத்து அதிகார சபைத் தலைவர் எச்சரிக்கை

கொழும்பு, டிசெ.29
பேருந்துக் கட்டணங்களைக் குறைக்காத பேருந்து உரிமையாளர்களுக்கு எதிராகச்சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என்று போக்குவரத்து அதிகார சபையின் தலைவர் எச்சரிக்கை விடுத்துள்ளார்.
கட்டணங்களைக் குறைக்காத பேருந்துகள் தொடர்பில் 0112860860 என்ற தொலைபேசி இலக்கத்தை அழைத்து முறையிட முடியும் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.
எரிபொருள்களின் விலைகள் குறைக்கப்பட்டதை அடுத்துப் பேருந்துக் கட்டணங்கள் 4 வீதத்தால் குறைக்கப்பட்டுள்ளன.
எனினும் சில பேருந்துகளில் கட்டணங்கள் குறைக்கப்படவில்லை என்று பொதுமக்களால் முறைப்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. இதுவரை 23 முறைப்பாடுகள் கிடைத்துள்ளன என்று தெரிவிக்கப்படுகின்றது. அதையடுத்தே போக்குவரத்து அதிகார சபைத் தலைவர் இந்த எச்சரிக்கையை விடுத்துள்ளார். (ற)

# கொழும்புத் துறைமுகத்துக்கு சாகல திடீர்க் களப் பணயம்



கொழும்பு, டிசெ.29
துறைமுகங்கள் மற்றும் கப்பல்துறை அமைச்சர் சாகல ரத்னாயக்கா கொழும்புத் துறைமுகத்துக்கு நேற்றுக் கண்காணிப்புப் பயணம் ஒன்றை மேற்கொண்டுள்ளார்.
துறைமுக அதிகார சபைத் தலைவரின் அலுவலகம், ஹாபர் மாஸ்டர் அலுவலகம், ஜய பாலு முனையத்தின் நிர்வாகக் கட்டடம் எனப் பல இடங்களுக்கு அவர் நேரில் சென்றுள்ளார்.
துறைமுகங்கள் மற்றும் கப்பல்துறை மற்றும் தெற்கு அபிவிருத்தி அமைச்சின் செயலர் பராக்கிமர திசாநாயக்க, இலங்கை துறைமுக அதிகார சபையின் முகாமைத்துவ அத்தியட்சகர் அத்துல ஹேவாவித்தாரண, இலங்கை துறைமுக அதிகார சபையின் செயற்பாட்டு அத்தியட்சகர் ஜயந்த பெரேரா உட்பட நிறைவேற்று அதிகாரிகள் அமைச்சரின் களப் பயணத்தில் இணைந்திருந்தனர். (ற-10)

# ரஞ்சித் டி சொய்சாவுக்கு பிணை

கொழும்பு, டிசெ.29
விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்த ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் ரஞ்சித் டி சொய்சா பிணையில் செல்ல அனுமதிக்கப்பட்டுள்ளார்.
அவர் நேற்றுப் பொதுமல்ல நீதிவான் நீதி மன்றில் அவர் முற்படுத்தப்பட்டார். அவரைப் பிணையில் செல்ல நீதிவான் அனுமதித்தார்.
கொடகவெல பிரதேசத்தில் இடம்பெற்ற தாக்குதல் சம்பவம் தொடர்பில் ரஞ்சித் டி சொய்சா கைது செய்யப்பட்டு, விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்தார். (ற)

# இலங்கையில் அவசரமாக இறங்கிய பெரும் வானூர்தி

கொழும்பு, டிசெ.29
உலகின் மிகப் பெரிய பயணிகள் வானூர்தியான எமிரேட்ஸ் ஏ 380 வானூர்தி கட்டுநாயக்க வானூர்தித் தளத்தில் நேற்றுத் தரையிறங்கியது.
கட்டுநாயக்க வானூர்தித் தளம் சீரமைக்கப்பட்ட பின்னர் கண்காட்சி நிமித்தம் இந்த வானூர்தி முன்னர் தரையிறங்கியிருந்தது. தற்போது இரண்டாவது தடவையாகத் தரையிறங்கியுள்ளது.
டுபாயில் இருந்து மெல்பேர்ன் நோக்கி 420 பயணிகளுடனும், 22 பணியாளர்களுடனும் இந்த வானூர்தி பயணித்தது.
வானூர்திப் பணியாளர் ஒருவருக்குத் திடீரென ஏற்பட்ட சுகயீனம் காரணமாகவே வானூர்தி கட்டுநாயக்க வானூர்தித் தளத்தில் தரையிறக்கப்பட்டது.
சுகயீனமுற்ற கணியாளர் நீர்கொழும்பில் உள்ள தனியார் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டார்.
கட்டுநாயக்க வானூர்தித் தளத்தில் சுமார் இரு மணி நேரம் தரித்து நின்ற வானூர்தி பின்னர் தனது பயணத்தைத் தொடர்ந்தது. (ற)



# இலாபமீட்டும் நிறுவனமாக மின்சார சபை மாற்றப்படும்

## அமைச்சர் ரவி தெரிவிப்பு



கொழும்பு, டிசெ.29
இலங்கை மின்சார சபையை இலாமீட்டும் நிறுவனமாக மாற்றிப் பாவனையாளர்களுக்கு உதவிகள் பெற்றுக் கொடுக்க நடவடிக்கை எடுக்கப்படும் என்று மின்சக்தி மற்றும் எரிசக்தி அமைச்சர் ரவி கருணாநாயக்க தெரிவித்துள்ளார்.
மின்சார தொழிற்சங்கப் பிரதிநிதிகளுடன் நேற்று நடத்திய சந்திப்பின்போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.
அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:
இலங்கை மின்சார சபைக்குள் நிலவும் நிதி மற்றும் ஊழியர் முரண்பாடுகளை எதிர்காலத்தில் தீர்ப்பதற்கு எதிர்பார்த்துள்ளோம். இத்தகைய செயற்பாட்டின்போது தொழிற்சங்கங்கள் தமக்கு ஆதரவளிக்க வேண்டும்.
அனைத்துச் செயற்பாடுகளின் இறுதியில் மின்சார சபையை இலாபமீட்டும் நிறுவனமாக மாற்றுவதும், மின் கட்டணங்களைக் குறைத்துப் பாவனையாளர்களுக்கு உதவிகளைப் பெற்றுக் கொடுப்பதுமே தனது பிரதான இலக்கு என்றார். (ற)

# கற்கள் சரிந்து இருவர் காயம்

கொழும்பு டிசெ.29
சிவனொளிபாதமலை யாத்திரைக்குச் சென்ற இரு யாத்திரிகள் கற்கள் சரிந்து வீழ்ந்து காயமடைந்தனர். இந்தச் சம்பவம் நேற்றுமுன்தினம் மாலை 6 மணியளவில் இடம்பெற்றுள்ளது.
தங்காலை மற்றும் கணேமுல்ல பகுதியைச் சேர்ந்த 26, 27 வயதுகளுடைய ஆண் ஒருவரும், பெண் ஒருவருமே இவ்வாறு காயமடைந்துள்ளனர்.
கற்களுக்குள் சிக்கிய இருவர் பலத்த காயங்களுக்குள்ளாகியுள்ளனர். காயமடைந்த இருவரையும் யாத்திரைக்குச் சென்ற சிலர் மஸ்கெலியா மருத்துவமனையில் சேர்த்தனர். அவர்கள் பின்னர் மேலதிக சிகிச்சைக்காக டிக்கோயா கிளங்கன் மருத்துவமனைக்கு மாற்றப்பட்டனர். (ற)

# அழகியல் பாட ஆசிரியர்கள் வேறு பாடத்துக்கு மாறலாம்

## மாகாணக் கல்வித் திணைக்களம் அறிவிப்பு

யாழ்ப்பாணம், டிசெ.29

**வடக்குமாகாணத்தில் உள்ள அழகியல் பாட ஆசிரியர்கள் வேறு பாட வகுதிக்கு மாற்றலாவதற்கு விண்ணப்பிக்க முடியும் என்று மாகாணக் கல்வித் திணைக்களம் அறிவித்துள்ளது.**

வடக்கு மாகாணப் பாடசாலைகளில் அனுமதிக்கப்பட்ட ஆளணிக்கு மேலதிகமாக அழகியல் பாட ஆசிரியர்கள் உள்ளனர். அவர்களுக்குப் பாட வேளைகளை வழங்க அதிபர்களால் முடியாதுள்ளது. சில ஆசிரியர்கள் நியமனத் திகதி முதல் ஆரம்பக் கல்விப் பாடங்களையும், வேறு பாடங்களையும் கற்பிக்கின்றனர். இவர்கள் இடமாற்றலுக்கு விண்ணப்பித்தால் இடமாற்றலை வழங்க முடியாத நிலைமையும் காணப்படுகின்றது.

அழகியல் பாட ஆசிரியர்கள் வேறு சில பாடங்களையும் பகுதியாகக் கற்றிருப்பார்கள். அவர்களை ஆரம்பக் கல்வி மற்றும் வேறு பாட விதானத்துக்கு மாற்றல் செய்யின் ஆசிரியர் வளப் பகிர்வைச் சீர் செய்ய முடியும். இவர்களுக்கு ஆரம்பப் பாடப்பகுதி அல்லது அழகியல் தவிர்ந்த வேறு பாடங்கள் கற்பிப்பதற்கு ஏதுவாக வேறு பாட வகுதிகளுக்கு நியமனம் வழங்க முடியும்.

இந்த நியமனங்களை வழங்குவதற்கு ஊடாக வெற்றிடம் நிலவும் வலயங்களுக்கு இடமாற்றம் செய்யவும் முடியும். பாடசாலை அதிபர்கள் இந்த விடயத்தை ஆசிரியர்களுக்குத் தெரியப்படுத்தி அவர்களின் கோரிக்கையை வலயக் கல்விப் பணிப்பாளர்கள், மாகாணக் கல்வித் திணைக்களத்துக்கு அனுப்ப வேண்டும். பாடமாற்றத்துக்கான கோரிக்கைக் கடிதம், நியமனக் கடிதப்பிரதி, பட்டப்படிப்புச் சான்றிதழ், நேரசூசி போன்ற ஆவணங்களையும் இணைத்து அனுப்ப வேண்டும் என்று தெரிவிக்கப்பட்டது. (ற-7)

### கூட்டுறவுச் சங்க சமாசத்தின் நடமாடும் விற்பனைக் கூடம்

யாழ்ப்பாணம், டிசெ.29

நத்தார் மற்றும் புது வருடப் பிறப்பை முன்னிட்டு வடக்கு மாகாணக் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசத்தால் உண்ணும் உற்பத்திப் பொருள்களின் நடமாடும் விற்பனைக்கூடம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது என்று வடக்கு மாகாணக் கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளர் பொ.வாகீசன் தெரிவித்தார்.

வடக்கு மாகாண கூட்டுறவு அபிவிருத்தித் திணைக்களத்தின் அனுசரணையுடன் நடமாடும் விற்பனைக்கூடம் கடந்த வியாழக்கிழமை ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணம் நகரிலும், நகரை அண்டிய பகுதிகளிலும் நடமாடும் வாகனம் ஊடாகப் பொருள்கள் விற்பனை செய்யப்படுகின்றன. குருநகர், நவாந்துறை, பாசையூர், கொட்டடி போன்ற சந்தைச் சுற்றாடல்களில் விற்பனை செய்யப்படும் என்று தெரிவிக்கப்பட்டது. (ற-17)

### விபத்தில் சிப்பாய் உயிரிழப்பு

கொழும்பு, டிசெ.29

மெதிரிகிரிய, நாகபுர பிரதேசத்தில் நடந்த வாகன விபத்தில் இராணுவச் சிப்பாய் ஒருவர் உயிரிழந்துள்ளார். இந்த் விபத்து நேற்றுமுன்தினம் மாலை நடந்துள்ளது.

இரு உந்துருளிகள் மோதியே விபத்து நடந்துள்ளது. உந்துருளி ஒன்றைச் செலுத்தி வந்த இராணுவச் சிப்பாயே உயிரிழந்துள்ளார்.

இவர் பனாங்கொட இராணுவமுகாமில் கடமையாற்றுகின்றார் என்று பொலிஸார் தெரிவித்தனர். (ற222)

## விளையாட்டுப் பயிற்றுவிப்பாளர் பதவிக்கு தெரிவானோர் நிர்க்கதி

### நியமனத்தை உடன் வழங்கக் கோரிக்கை

மூதூர், டிசெ.29

கூட்டு அரசின் காலத்தில் விளையாட்டுப் பயிற்றுவிப்பாளர் பதவிக்குத் தெரிவானவர்களுக்கு இதுவரை நியமனம் வழங்காது அரசு ஏமாற்றுகின்றது என்று அகில இலங்கை தெரிவுசெய்யப்பட்ட விளையாட்டு வீரர்கள் சங்கம் குற்றஞ்சாட்டியுள்ளது.

அந்தச் சங்கம் விடுத்துள்ள ஊடக அறிக்கையிலேயே இவ்வாறு குறிப்பிடப்பட்டுள்ளது.

அதில் உள்ளதாவது:

கூட்டு அரசில் கல்வி அமைச்சராகப் பதவி வகித்த அகிலவிராஜ் காரியவசத்தால் விளையாட்டுப் பயிற்றுவிப்பாளர் வெற்றிடங்களுக்காக விளையாட்டுத் துறையில் தேசிய, மாகாண ரீதியில் சாதனை புரிந்தவர்களிடம் இருந்து விண்ணப்பங்கள் கோரப்பட்டிருந்தன.

**“ கடந்த ஆண்டு அதற்கான நேர்முகத் தேர்வு, உடற்தகைமைத் தேர்வு என்பவற்றைக் கல்வி அமைச்சு நடத்தியது. விண்ணப்பித்தவர்களில் 3 ஆயிரத்து 850 பேர் தெரிவு செய்யப்பட்டனர். அந்தப் பட்டியல் இந்த ஆண்டு ஜூன் மாதம் மாகாண ரீதியில் வெளியிடப்பட்டிருந்தது.**

கடந்த ஆண்டு அதற்கான நேர்முகத் தேர்வு, உடற்தகைமைத் தேர்வு என்பவற்றைக் கல்வி அமைச்சு நடத்தியது. விண்ணப்பித்தவர்களில் 3 ஆயிரத்து 850 பேர் தெரிவு செய்யப்பட்டனர். அந்தப் பட்டியல் இந்த ஆண்டு ஜூன் மாதம் மாகாண ரீதியில் வெளியிடப்பட்டிருந்தது.

நியமனப் பட்டியல் வெளியாகி 6 மாதங்கள் கடக்கும் நிலையில் இன்னமும் நியமனங்கள் வழங்கப்படாது இழுத்தடிக்கப்படுகின்றன். முன்னர் மாகாண சபைகளைக் காரணம் காட்டி நியமனம் தாமதிக்கப்பட்டது. நாட்டில் ஏற்பட்ட அரசியல் குழப்ப நிலைக்குப் பின்னர் அமைச்சர் அகிலவிராஜ் காரியவசம் இந்த நியமனங்கள் தாமதிப்பதற்கு அரச தலைவரே காரணம் என்று தனது உத்தியோகபூர்வ முகநூல் பக்கத்தில் குறிப்பிட்டிருந்தார்.

இவ்வாறு காரணங்களைக் காட்டி நியமனங்கள் தாமதிக்கப்படும் நிலையில், தெரிவு செய்யப்பட்டவர்கள் மனரீதியாகவும், பொருளாதார ரீதியாகவும் பெரும் பாதிப்புகளை எதிர்கொண்டுள்ளனர்.

நியமனத்துக்குத் தெரிவு செய்யப்பட்டுத் தற்போது அன்றாட வாழ்வியல் சவால்களுக்கு முகம் கொடுத்துவரும் விளையாட்டுப் பயிற்றுவிப்பாளர்களுக்கு உடனடியாக நியமனம் வழங்கத் தற்போதுள்ள அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும். என்றுள்ளது. (ற-40)

கைதடி

### விநாயகர் முன்பள்ளி கலைவிழா நாளை

யாழ்ப்பாணம், டிசெ. 29

கைதடி தென் கிழக்கு விநாயகர் முன்பள்ளியின் கலைவிழா நாளை ஞாயிற்றுக்கிழமை பி.ப. 3 மணிக்கு கைதடி விக்னேஸ்வரா வித்தியாலய மண்டபத்தில் நிலையத் தலைவர் செ.மயூரன் தலைமையில் இடம்பெறவுள்ளது.

இந்த நிகழ்வுக்கு முதன்மை விருந்தினராக யாழ்ப்பாணம் மற்றும் கிளிநொச்சி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ஈ.சரவணபவனும், சிறப்பு விருந்தினர்களாக வடக்கு மாகாணசபை முன்னாள் உறுப்பினர் பா.கஜதீபன், சிவப்பிரகாசம் மகாவித்தியாலய ஆசிரியரும் நாடாளுமன்ற உறுப்பினரின் இணைப்பாளருமான செ.பிரதாப், கைதடி விக்னேஸ்வரா வித்தியாலய அதிபர் நா.கருணாகரன் ஆகியோரும் கலந்துகொள்ளவுள்ளார்கள்.

மதிப்புறு விருந்தினர்களாக கைதடி தென்கிழக்கு கிராம அலுவலர் கு.சிவகுமாரசர்மா, கைதடி தென்கிழக்கு பொருளாதார அபிவிருத்தி அலுவலர் திருமதி து.கோகிலா, கைதடி பொதுநூலக தலைமை நூலகர் திரு. மதிராணி சிவசுப்பிரமணியம், சாவகச்சேரி பிரதேச சபை உறுப்பினர் திருமதி இராசேந்திரம் ஜானகி ஆகியோர் கலந்து சிறப்பிக்கவுள்ளனர். (5)

### ஐயப்பன் கோயில் கொடியேற்றம் இன்று

யாழ்ப்பாணம், டிசெ. 29

கட்டுவன் கரண்டைக்குளம் சிறி ஐயப்பன் கோயில் கொடியேற்றம் இன்று சனிக்கிழமை காலை 10.00 மணிக்கு நடைபெறும்.

இன்றைய தினத்திலிருந்து 10 நாள்கள் ஐயப்பனுக்கு காலையில் வழிபாடுகளும், வீதியுலாவும் நடைபெறும். (5)

## மாம்பழச்செய்கை தென்மராட்சியில் மும்முரம்!

யாழ்ப்பாணம், டிசெ.29

தென்மராட்சியில் ஏற்றுமதிக்காக மாம்பழச் செய்கையை ஊக்குவிப்பதற்குச் சிறப்பான வேலைத் திட்டம் ஒன்று முன்னெடுக்கப்பட்டுள்ளது என்று விவசாய நவீனமயமாக்கல் திட்டத்தின் மாகாணப் பிரதித் திட்டப் பணிப்பாளர் ந.பத்மநாதன் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

“உலக வங்கியின் நிதி உதவியுடன், விவசாய நவீன மயமாக்கல் திட்டம் வடக்கில் முன்னெடுக்கப்பட்டுள்ளது. இந்தத் திட்டத்தின் ஒரு பகுதியாக தென்மராட்சியில் ஏற்றுமதிக்கான மாம்பழச் செய்கை ஆரம்பிக்கப்பட்டுள்ளது. மாம்பழங்களை உற்பத்தி செய்து அவற்றை உள்நாடு மற்றும் வெளிநாடுகளில் சந்தைப்படுத்தி வாழ்வாதாரத்தை உயர்த்திக் கொள்ளும் நோக்குடன் இந்தத் திட்டம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. இந்தத் திட்டத்துக்காக ரொம் இ.ஜே.சி. இன மாம்பழம் அறிமுகம் செய்யப்பட்டுள்ளது. யாழ்ப்பாணம் மாவட்ட விவசாயத் திணைக்களத்தின் ஊடாக இந்த வேலைத் திட்டம் முன்னெடுக்கப்படுகின்றது. மரத்தை நடுகை செய்து 3 ஆண்டுகளில் பயனைப் பெற முடியும்.



இந்தத் திட்டத்துக்காக பயனாளிகள் தெரிவு செய்யப்பட்டு அவர்களுக்குத் தற்போது மரக்கன்றுகள் வழங்கப்பட்டுள்ளன. இதற்காக மாம்பழ உற்பத்தியாளர் சங்கமும் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. அந்தச் சங்கத்தில் அங்கத்துவம் பெறுவதன் ஊடாக உற்பத்தி மற்றும் சந்தைப்படுத்தல் வாய்ப்புக்களை ஏற்படுத்திக் கொள்ள முடியும். 4 பரப்புக் காணியில் சுமார் 40 கன்றுகளை நட முடியும்.

சாவகச்சேரி மற்றும் அதை அண்மித்த பிரதேச செயலகப் பிரிவுகளில் வசிப்போராக இருப்பவர்களும், சுற்று வேலி அமைக்கப்பட்ட 4 பரப்புக்கு மேற்பட்ட வெறுமையான, விவசாயத்துக்கு ஏற்ற நிலப் பரப்பு, நீர் வசதி போன்றவை உள்ளவர்கள் பிரதேச விவசாயப் போதனாசிரியரைத் தொடர்பு கொண்டு இந்தத் திட்டத்தில் இணைந்து கொள்ளலாம்.

மாம்பழ உற்பத்தியில் ஈடுபடுபவர்கள் 3 ஆண்டு காலம் வீணடிக்கப்படும் என்றோ, வாழ்வாதாரம் பாதிக்கப்படும் என்றோ அச்சப்பட வேண்டும். மண் வளத்தைப் பாதுகாக்கும் நோக்குடனும், வாழ்வாதாரத்தை முன்னேற்றவும் கச்சான் போன்ற ஊடு பயிர்ச்செய்கை செய்வதற்கான ஏற்பாடுகளும் உண்டு. மேலதிக விவரங்களை பிரதேச போதனாசிரியர் ஊடாகவும் அல்லது கச்சேரி, நல்லூர் வீதியில் உள்ள விவசாய நவீனமயமாக்கல் செயற்றிட்ட அலுவலகத்திலோ பெற்றுக் கொள்ளலாம்” - என்றார். (ற-7)

### கூட்டுறவுக் கீதம் இசையமைத்து வெளியீடு

யாழ்ப்பாணம், டிசெ.29

வடக்கு மாகாணக் கூட்டுறவு அபிவிருத்தித் திணைக்களத்தின் ஏற்பாட்டில் கூட்டுறவுக் கீதம் இசையமைக்கப்பட்டு வெளியிடப்பட்டுள்ளது.

இசையமைப்பாளர் வதனவாசனின் நெறியாள்கையில் கூட்டுறவுக் கீதத்துக்கு இசை அமைக்கப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணம் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தில் கடந்த வியாழக்கிழமை நடைபெற்ற பரிசில் வழங்கல் விழாவில் இந்தக் கூட்டுறவுக் கீதம் வெளியிடப்பட்டுள்ளது. (ற-17)

### உதவிப் பொருள்களுடன்

# புத்தாண்டு தினத்தில் வருகிறது தொடருந்து

யாழ்ப்பாணம், டிசெ. 29

கிளிநொச்சி மற்றும் முல்லைத்தீவு மாவட்டங்களில் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவிப் பொருட்களை வழங்குவதற்கு புத்தாண்டு தினமான ஜனவரி முதலாம் திகதி உதவிப் பொருள்களை உள்ளடக்கிய பயணிகள் தொடருந்து கிளிநொச்சி நோக்கி வரவுள்ளது.

வெள்ளம் பாதித்த மக்களுக்கு உதவும் மனிதநேயச் செயற்பாட்டில் தொடருந்து நிலைய அதிபர்கள் மற்றும் ஊழியர்களும் பங்கெடுக்கும் நோக்கில் ஜனவரி முதலாம் திகதி உதவிப் பொருள்களை வழங்குவதற்கு கிளிநொச்சி மாவட்டத்துக்கு வரவுள்ளனர்.

இந்தச் செயற்பாட்டில் பங்களிக்க விரும்புவர்கள் தொடருந்து நிலையத்தில் பொருள்களை ஒப்படைக்கலாம் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. அதேவேளை தொடருந்து நிலைய ஊழியர்கள்மற்றும்அதிபர்கள்தம்மால்இயன்ற பொருள்களையும் சேகரித்து வருகின்ற னர். அவர்கள் சேகரித்த உதவிப் பொருள்கள் மற்றும் தொடருந்து நிலையத்தில் ஏனையவர்கள் வழங்கிய உதவிப் பொருள்கள் ஆகியவற்றையும் ஏற்றிக் கொண்டு புறப்படும் தொடருந்து, ஒவ்வொரு தொடருந்து நிலையத்திலும் நின்று அங்கு சேகரிக்கப்படும் பொருள்களையும் ஏற்றிக் கொண்டு கிளிநொச்சியை வந்தடையும்.

ஜனவரி மாதம் முதலாம் திகதி கொழும்பு கல்கிசையில் இருந்து யாழ்ப்பாணம் நோக்கி காலை 6.20 மணிக்கு யாழ் தேவி தொடருந்து புறப்படும். அதே போன்று யாழ்ப்பாணதில் இருந்தும் புறப்படும் தொடருந்திலும் பொருள்கள் சேகரிக்கப்பட்டு அவையும் கிளிநொச்சித் தொடருந்து நிலையத்தில் ஒப்படைக்கப்படும்.

மருதானை, ராகம, கம்பகா, மீரிகம, பொல்காவெல, குருநாகல், கனேவத்தை, மஹோ, கல்கமுவ, அநுராதபுரம், வவுனியா, யாழ்ப்பாணம் ஆகிய முதன்மை தொடருந்து நிலையங்களிலும் ஏனைய தொடருந்து நிலையங்களிலும் உதவிப் பொருள்களை வழங்க விரும்புவர்கள் நாளை மறுதினம் திங்கட்கிழமை வரை கொண்டு சென்று ஒப்படைக்க முடியும் என்று தெரிவிக்கப்பட்டது. (5,7)

## பௌத்தத்துக்கு...

அரசியல் குழப்பங்களின் பின்னர் கடந்த 16ஆம் திகதி தலைமை அமைச்சராகப் பதவியேற்ற பின்னர் முதல்தடவையாக மகாநாயக்கர்களைச் சந்தித்தார். சந்தித்து ஆசிகளைப் பெற்ற பின்னர் ஊடகங்களுக்கு கருத்துக் கூறினார்.

இதன்போது அவர் தெரிவித்ததாவது:

புதிய அரசமைப்பு உருவாக்கம் தொடர்பில் எதிர்க்கட்சிகளுடன் பேச்சு நடத்தவுள்ளேன். நடைமுறையில் உள்ள அரசமைப்பில் பௌத்தத்துக்கு முன்னுரிமை வழங்குவது, பௌத்த மதத்தை காப்பது அரசின் கடமை உள்ளிட்டவற்றை உள்ளடக்கிய 9ஆவது சரத்தில் ஓர் எழுத்துக் கூட புதிய அரசமைப்பில் மாற்றப்படாது. அது அப்படியே தொடரும். ஒற்றையாட்சி முறைமையும் பாதுகாக்கப்படும். இந்த உறுதிமொழிகளை மகாநாயக்க தேரர்களுக்கு வழங்கியுள்ளேன்.

மேலும், மாவன்னலவில் புத்தர் சிலைகள் சேதமாக்கப்பட்டுள்ள விவகாரம் தொடர்பில் விசாரணை நடத்துமாறு பொலிஸார் மற்றும் குற்றப் புலனாய்வுப் பிரிவினருக்கு உத்தரவிட்டுள்ளேன்.

இந்து ஆலயம் ஒன்றும் உடைக்கப்பட்டுள்ளது. அது தொடர்பிலும் விசாரணைகள் நடத்தப்பட்டு அடிப்படைவாதிகளுக்கு எதிராகக் கடுமையான நடவடிக்கை எடுக்கப்படும் - என்றார். (5,10)

## இரணைமடுக்குள...

வெளியேற்றப்பட்ட முறைமைதான் காரணம், இரணைமடுப் பொறியியலாளர்கள் அதற்குப் பொறுப்புகூற வேண்டும் என்று சில தரப்பினர் வலியுறுத்தி வந்த நிலையில், இந்த விவகாரத்தை ஆராய மூவர் அடங்கிய குழுவை வடக்கு ஆளுநர் நேற்று நியமித்துள்ளார்.

### வடக்கிலும், தெற்கிலும்

# இனவாதத் தீயை மூட்டுவதற்கு முயற்சி

### சபாநாயகர் எச்சரிக்கை

கொழும்பு, டிசெ. 29

நாட்டில் மீண்டும் இனவாதத்தைத் தூண்டி வடக்கையும் தெற்கையும் எரிப்பதற்கான முயற்சிகள் அரசியல் நோக்கில் முன்னெடுக் கப்படுகின்றது. இவ்வாறு சபாநாயகர் கரு ஜயசூரியா தெரிவித்துள்ளார்.

சபாநாயகர் கரு ஜயசூரியா சர்வமதத் தலைவர்களையும் அவரின் இல்லத்தில் சந்தித்து கலந்துரையாடலில் ஈடுபட்டபோதே மேற்கண்டவாறு கூறினார்.

'அரசியல் சார்ந்த நலன்களுக்காக இன மற்றும் மதவாதத்தைத் தூண்டும் வகையிலான முயற்சிகள் முன்னெடுக்கப்பட்டு வருவதாக அறியக் கிடைத்திருக்கின்றது. வடக்கையும், தெற்கையும் பிரித்து சச்சரவு ஏற்படுத்த முனையும் அரசியல் பின்னணியுடனான செயற்பாடுகளுக்கு இடம்கொடுக்கக் கூடாது எனக் கேட்டுக்கொள்கின்றேன். 2019ஆம் ஆண்டில் இனவாதம், மதவாதத்தைத் தோற்கடிப்பதே பிரதான குறிக்கோளாக அமைய வேண்டும். அரசியல் நலன்களைப் பெறுவதற்காக பௌத்த விகாரைகள் மற்றும் ஏனைய மதத் தலங்களை இலக்கு வைத்து இன வன்முறைகளைத் தூண்டும் வகையில் முன்னெடுக்கப்படும் செயற்பாடுகளை அனுமதிக்கக் கூடாது. நாடாளுமன்றத்தின் ஜனநாயகத் தன்மையைப் பாதிக்கும் நிறைவேற்றதிகார அரச தலைவர் முறையை நீக்க அனைத்து மதத் தலைவர்களும் ஆதரவு வழங்கவேண்டும்' என்றும் சபாநாயகர் தெரிவித்துள்ளார். (5)

யாழ்ப்பாணப் பல்கலைகழக பொறியியல் பீட விரிவுரையாளர் சுப்பிரமணியம் சிவகுமார் தலைமையில் வடக்கு மாகாண பிரதித் தலைமைச் செயலர் (பொறியியல்) எஸ்.சண்முகநாதன், வடக்கு மாகாண விவசாயப் பணிப்பாளர் சிவகுமார் ஆகியோர் அந்த குழுவில் அங்கம் வகிக்கின்றனர்.

கிளிநொச்சிமாவட்டச்செயலகத்தில்தலைமை அமைச்சர் தலைமையில் நடந்த கலந்துரையாடலின்போதும், இரணைமடு நீர் வெளியேற்றம் மற்றும் பொறியியலாளர்களின் நடவடிக்கை குறித்து குற்றச்சாட்டுக்கள் எழுப்பப்பட்டிருந்தன. கடந்த 21ஆம் திகதி பெய்த கடும் மழையின் போது இரணைமடுக் குளத்தின் நீர் கொள்ளளவு சடுதியாக உயர்ந்த போதும் குளத்தின் வான்கதவுகள் உரிய நேரத்தில் திறக்கப்படாமையால் வெள்ளப் பாதிப்புக்கள் ஏற்பட்டன என்று கருத்து தெரிவிக்கப்பட்டிருந்தது. இதையடுத்தே விசாரணைக்குழு நியமிக்கப்பட்டுள்ளது. (5,214)

## பல்கலை...

வதைகாரணமாகவேமாணவன்உயிர்துறக்க முயற்சித்ததாகக் குற்றம் சுமத்தப்படுகின்றது.

கிளிநொச்சியைச் சேர்ந்த பல்கலைக்கழக மாணவன் மூன்று தினங்களுக்கு முன்னர் பளை மருத்துவமனைக்குச் சிகிச்சைக்குச் சென்றுள்ளான். மருத்துவரிடம், தூக்க வருவதில்லை என்று பயந்தவாறு தெரிவித்துள்ளான். மருத்துவர் மருந்துகளை வழங்கியுள்ளார். மீண்டும் திங்கட்கிழமை மருத்துவமனைக்கு வருமாறு கூறியுள்ளார்.

இந்த நிலையில் நேற்றுமாலை, உறவினர்களிடம் பல்கலைக்கழகத்தில் இடம்பெறும் பகிடிவதை தொடர்பில் கதைத்துள்ளான். அதன் பின்னர் அறைக்குள் சென்று கதவைப் பூட்டிவிட்டு கழுத்தை அறுத்து உயிர்துறக்க முயற்சித்துள்ளான். மாணவனை உறவினர்கள் காப்பாற்றி, பளை மருத்துவமனையில் சேர்ப்பித்தனர். அங்கிருந்து நோயாளர் காவு வண்டி ஊடாக கிளிநொச்சி மருத்துவமனைக்கு மாணவன் உடனடியாகவே மாற்றப்பட்டான். கிளிநொச்சிமருத்துவமனையில்மாணவன் சிகிச்சை பெற்று வருகின்றான். (5,6,26)

## இராணுவத்தை...

அவர் மேலும் தெரிவித்ததாவது:

"வெள்ள இடர் ஏற்பட்டமையைத் தொடர்ந்து விரைந்து மக்களை மீட்கும் பணிகளில் இராணுவத்தினர் ஈடுபடுத்தப்பட்டனர். வெள்ளத்தினால் அதிகளவில் பாதிப்புக்கு உள்ளான




# மட்டக்களப்பில் சேகரிக்கப்பட்ட உதவிப் பொருள்கள் வன்னிக்கு

மட்டக்களப்பு, டிசெ. 29

கிளிநொச்சி மற்றும் முல்லைத்தீவு மாவட்டங்களில் பேரிடரில் பாதிக்கப்பட்ட மக்களுக்கு வழங்குவதற்காக மட்டக்களப்பு மாவட்டத்தில் சேகரிக்கப்பட்ட உதவிப் பொருள்கள் மாவட்டச் செயலரிடம் நேற்றுக் கையளிக்கப்பட்டன.

மட்டக்களப்பு மாவட்டச் செயலகத்தின் ஒருங்கிணைப்பில் வன்னியில் பேரிடரினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு வழங்குவதற்காக உதவிப் பொருள்கள் சேகரிக்கப்பட்டன.

கடந்த 24ஆம் திகதி ஆரம்பமான இந்தப் பணி நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை நிறைவடைந்தது. சேகரிக்கப்பட்ட உணவுப் பொருள்கள் மட்டக்களப்பு வெபர் மைதானத்தில் வைத்து மாவட்டச் செயலரிடம் நேற்றுக் கையளிக்கப்பட்டன.

கன்னங்குடா பொதுமக்கள், மட்டக்களப்பு மாவட்ட கூட்டுறவுத் திணைக்களம், கோட்டைமுனை விளையாட்டுக் கழகம், நம்பிக்கையாளர் சபைத் தலைவர்கள், உறுப்பினர்கள், வாழைச்சேனை பிரதேச சபை, மட்டக்களப்பு வர்த்தக சங்கம், எழுகதிர் ஏழைகள் வாழ்வின் உதயம், கிரான், ஓட்டமாவடி பிரதேச செயலகங்கள், உள்பட பல நிறுவனங்கள் சுமார் 25 இலட்சம் ரூபா பெறுமதியான உலர் உணவுப் பொருள்களை மாவட்டச் செயலர் மா.உதாயகுமாரிடம் உத்தியோகபூர்வமாகக் கையளித்தார்கள்.

இவை உடனடியாகவே வன்னிப் பிரதேசத்துக்கு அனுப்பி வைக்கப்படவுள்ளன. (5)

கிளிநொச்சி மாவட்டத்தில் சுமார் 300 இராணுவத்தினரும், முல்லைத்தீவு மாவட்டத்தில் சுமார் 150 இராணுவத்தினரும் மீட்பு பணிகளில் ஈடுபடுத்தப்பட்டனர். மக்களை மீட்பதற்கான சிறப்புப் படகுச்சேவை ஊடாகவும் இராணுவத்தினர் மீட்புப் பணிகளை முன்னெடுத்தனர்.

வெள்ளஇடரின் பின்னர் அந்தப் பகுதி மக்களைப் பிரதிநிதித்துவப்படுத்துகின்ற, அதே வேளை இராணுவத்தினரை அங்கிருந்து வெளியேறுமாறு கூறுகின்ற அரசியல்வாதிகள் உடனடியாக விரைந்து, நிலமைகளை ஆராய்ந்திருக்கவில்லை. அரசியல்வாதிகள் உடனடியாக பயணம் மேற்கொள்ளாமையை உறுதிப்படுத்தும் வகையில் ஊடகங்களிலும் செய்திகள் வெளியாகியிருந்தன. அதனை அடிப்படையாகக் கொண்டே வெள்ள இடரின் போது இராணுவத்தினரின் உடனடி மீட்பு நடவடிக்கைகள் தொடர்பில் சுட்டிக்காட்டியிருந்தேனே தவிர எந்தவொரு அரசியல்வாதிகளையும் தனிப்பட்ட ரீதியில் தாக்கும் நோக்கமில்லை" - என்றார். (5,61)

## வறுமையிலிருந்த...

கிளிநொச்சி மாவட்டச் செயலகத்தில் சகல தரப்புக்களையும் உள்ளடக்கிய கூட்டம் இடம்பெற்றது.

வெள்ளப்பாதிப்பால் இரண்டுமாவட்டங்களிலும் ஏற்பட்ட சேத விவரங்கள் காட்சிப்படுத்தப்பட்டன. நாடாளுமன்ற உறுப்பினர்களாலும், பாதிப்பு விவரங்கள் எடுத்துக் கூறப்பட்டன. அதிகாரிகளாலும் அதற்குரிய விளக்கங்கள் வழங்கப்பட்டன.

இங்கு கருத்துத் தெரிவித்த தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்க,

கடந்த வாரத்தில் கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்டங்களில் ஏற்பட்ட பெரிய வெள்ளம் காரணமாக சுமார் 38 ஆயிரம் குடும்பங்கள் பாதிக்கப்பட்டுள்ளன. வீடுகள், விவசாயம் மற்றும் சிறு வர்த்தகங்கள், சுயதொழில்கள் பாதிக்கப்பட்டுள்ளன. கிளிநொச்சி மற்றும் முல்லைத்தீவு மாவட்டங்கள் பொருளாதார நிலையில் பின்னிலையில் உள்ள மாவட்டங்களாகும். இந்த வெள்ளப் பாதிப்பு அவர்களை மிகவும் பாதித்துள்ளது. இவர்களுக்கான உதவிகளை வழங்கி அபிவிருத்தியை மீண்டும் ஆரம்பிக்க எதிர்பார்க்கிறோம்.

இந்தப்பாதிப்பிலிருந்துமக்களைப்பாதுகாத்து அவர்களுக்கான அடிப்படை வசதிகளை ஏற்படுத்திய இரண்டு மாவட்ட செயலர்கள், பிரதேச செயலர்கள், அதிகாரிகள் முப்படையினர், பொலிஸார் மற்றும் தன்னார்வத் தொண்டு நிறுவனங்கள் மற்றும் மதத் தலைவர்கள் மற்றும் உதவிகளை வழங்கியவர்கள் உள்ளிட்ட அனைவருக்கும் அரசு என்ற அடிப்படையில் நன்றி தெரிவிக்கிறேன்.

வெள்ளம் தொடர்பான ஆபத்து இன்னும் குறையவில்லை. நாம் அனைவரும் அவதானமாக இருக்க வேண்டும். வெள்ளத்தால் வீடுகள் பாதிக்கப்பட்ட அனைத்துக் குடும்பங்களுக்கான பத்தாயிரம் ரூபா வழங்கப்படும். இந்த நிதியை நாளை மறுதினம் திங்கட்கிழமைக்குள் வழங்குமாறு இரண்டு மாவட்டங்களின் மாவட்டச் செயலர்களுக்கும் பணிப்புரை



விடுக்கின்றேன். இதற்காக முதல்கட்டமாக 130 மில்லியன் ரூபா வழங்கப்பட்டுள்ளது.

வீடுகளுக்குத் திரும்ப முடியாதவர்கள் 3 நாள்கள் தங்கியிருப்பதற்கு அனுமதி வழங்கப்படும். தங்கி இருப்பவர்களுக்கு சமைத்த உணவுகள் வழங்குவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளவும். பாதிக்கப்பட்ட மக்களுக்கு 15 நாள்களுக்கு தேவையான உலருணவுப் பொதிகளை வழங்குவதற்கும் நடவடிக்கை மேற்கொள்ளப்படும். கூரை விரிப்பு மற்றும் கூரைத்தகடுகள் வழங்க நடவடிக்கை எடுக்கிறோம். சுகாதாரம் தொடர்பிலும் கவனம் செலுத்துகிறோம். சில மாதங்களுக்கு நுண்கடன் வசூலிப்பையும் நிறுத்துகின்றோம். வங்கிகள் வழங்கிய கடன்கள் அறவிடுவது தற்காலிகமாக நிறுத்தப்படும். அது தொடர்பில் விரைவில் கலந்துரையாடி இறுதித் தீர்வு எட்டப்படும்.

விவசாயம் கடுமையாகப் பாதிக்கப்பட்டுள்ளது. கால்நடைகள் இறந்துள்ளன. வியாபார நிலையங்கள் பாதிக்கப்பட்டுள்ளன. இவற்றை கட்டியெழுப்ப உதவவுள்ளோம். வீடு மற்றும் சொத்திழப்புக் காப்புறுதியூடாக இழப்பீடு வழங்க நடவடிக்கை எடுக்கிறோம். வீதிகள் பாதிக்கப்பட்டுள்ளன. பிரதேச சபைகள் ஊடாக மதிப்பீடுகள் பெற்று அவற்றை பிரதேச சபையுடன் இணைந்து மறுசீரமைப்போம். ஒவ்வொரு துறைசார் அமைச்சர்களையும் இங்கு அனுப்புகின்றேன். அவர்கள் இங்குள்ள பாதிப்புக்களை மதிப்பீடு செய்து உதவிகளை வழங்குவார்கள் - என்றார். (5,6,105,214)



யாழ்ப்பாணம் தொல்புரம் கலாலயத்துக்கு இலகுவாக பொருத்தக்கூடிய கலையரங்கத்துக்கு தேவையான பொருள்கள் கடந்த திங்கட்கிழமை கலாலயத்தில் வைத்து வழங்கப்பட்டன. கலைநிகழ்வுகள், அரங்கேற்றம் போன்றவற்றைச் செய்யக்கூடிய கலை அரங்கு ஒன்றை அமைத்து தருமாறு மாகாண சபையின் முன்னாள் உறுப்பினர் சபா.குகதாஸிடம் கோரிக்கை விடப்பட்டது. இதனையடுத்து அவர் தனது நிதியில் இருந்து இலகுவாக பொருத்தக்கூடிய.கலையரங்கதினை வழங்கியுள்ளதாக கலாலயத்தின் தலைவர் செல்லையா உதயச்சந்திரன் தெரிவித்தார். (ஐ– 63)

## போர்க்கால சூழ்நிலையில்
# வடக்கின் கூட்டுறவுத்துறை மக்களுக்கு அளப்பரிய சேவைகளை வழங்கியது
## யாழ்ப்பாணப் பிரதேச செயலர் தெரிவிப்பு

**யாழ்ப்பாணம்,டிசெ.29**

**கடந்த போர்க்கால சூழ்நிலையின்போது வடக்கின் கூட்டுறவுத்துறை மக்களுக்கு அளப்பரிய சேவைகளை மேற்கொண்டது. இந்தக் கூட்டுறவின் மூலம் மக்கள் அதிக நன்மையடைந்தனர் என்று யாழ்ப்பாணப் பிரதேச செயலர் பொ.தயானந்தன் தெரிவித்தார்.**



யாழ்ப்பாணம், பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம் நடத்திய ஒளிவிழாவும்,வருடாந்த பரிசளிப்பு நிகழ்வும் நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை சங்கத்தின் கேட்போர் கூடத்தில் தலைவர் என்.எஸ்.சத்தியதாசன் தலைமையில் இடம்பெற்றது.

நிகழ்வில் முதன்மை விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது;

"வடக்கு மாகாண கூட்டுறவு அபிவிருத்தித் திணைக்களம் கூட்டுறவு செயற்பாடு குறித்தான புதிய திட்டங்களை நடைமுறைப்படுத்தியும் வருகின்றது. திணைக்களத்தின் திட்டங்கள், ஆலோசனைகளை சங்கங்கள் நடைமுறைப்படுத்தவேண்டும். வியாபார நடவடிக்கைகளை அதிகரிப்பதற்கு புதிய திட்டங்கள் ஊடான பலதரப்பட்ட செயற்பாடுகளைச் சங்கங்கள் நடைமுறைப்படுத்த வேண்டும்.

மிகவும் குறைந்த வருமானம் பெற்றுக் கொள்ளும் இந்தக் கூட்டுறவுப் பணியாளர்கள் இவ்வாறு தமது சுயநெறிப்பாடுகளை அதிகரித்துக் கூடிய வேதனம்பெறுவதற்கும் முயற்சிக்கவேண்டும்.

தற்போதுகூட அதிக விடயங்களை மேற்கொண்ட பணியாளர்களுக்கு இந்த ஊக்குவிப்புப் பரிசுகள் வழங்கி வைக்கப்பட்டன. இந்த ஊக்குவிப்புக் கொடுப்பனவுகள் சகலரும் பெற்றுக்கொள்ளும் வகையில் சங்கம் அதிக வருமானம் அடைய ஒன்றுசேர்ந்து ஒற்றுமை பலத்துடன் சேவையாற்ற வேண்டும்.

கடந்தகாலப் போரால் வடக்கில் கூட்டுறவு பெரிதும் பாதிக்கப்பட்டது. இந்தக் கூட்டுறவை பழைய நிலைக்குக் கொண்டுவர சகலரும் முயற்சிக்கவேண்டும். கடந்த காலத்தில் உருவாக்கப்பட்ட பழைய கூட்டுறவுச் சட்டத்தைக்கூட திருத்தியமைக்க வேண்டும். பலமிக்க ஒரு கூட்டுறவு அமைய வடக்கின் கூட்டுறவுத்துறை மிளிர சகல கூட்டுறவாளர்களும் அதற்கு ஒத்துழைக்க வேண்டும் - என்றார்.

நிகழ்வில் புனித யாகப்பர் ஆலய பங்குத் தந்தை அருட்பணி சாள்ஸ் ஜஸ்ரின் ஆசியுரை வழங்கினார்.

தொடர்ந்து வரவேற்பு நடனம், கிறிஸ்து பாலன் பிறப்பை முன்னிட்டான நடனம் என்பன இடம்பெற்றன. சங்கத்தில் அதிக வியாபாரம் மேற்கொண்டு வருமானத்தை ஈட்டிக்கொடுத்த பணியாளர்களுக்கும் ஊக்குவிப்பு பரிசில்கள் வழங்கி வைக்கப்பட்டன நிகழ்வில் யாழ்ப்பாண மாநகரசபையின் பிரதி முதல்வர் து.ஈசன், மாநகரசபை உறுப்பினர்களான கலாநிதி நா.தனேந்திரன், கி.ஜெயசீலன் ஆகியோர் கலந்து கொண்டனர். (ஐ-17)

## வருடாந்த மாநாடும் ஊக்குவிப்பு வழங்கலும்

யாழ்ப்பாணம்,டிசெ.29

அகில இலங்கைத் திருவள்ளுவர் மகா சபையின் 69 ஆவது வருடாந்த மாநாடும்,கல்விசாரா ஊக்குவிப்பு வழங்கலும் தெல்லிப்பழை மணியகாரன் வீதியில் உள்ள இ.கணேசலிங்கத்தின் இல்லத்தில் நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு சபையின் தலைவர் நாகன் கிருஷ்ணபிள்ளை தலைமையில் நடைபெறும். இதன்போது 2019 ஆம் ஆண்டுக்கான பொதுக்கூட்டமும் புதிய நிர்வாகத் தெரிவும் இடம்பெறவுள்ளன.

நிகழ்வில் முதன்மை விருந்தினராக ஓய்வு பெற்ற அரச நில அளவையாளர் சீனி பாலேந்திரா கலந்துகொள்ளவுள்ளார். (ஐ)

## மரநடுகை நிகழ்வு



யாழ்ப்பாணம்,டிசெ. 29

யாழ்ப்பாண நகரை பசுமையாக்கும் வேலைத்திட்டத்தின் மூன்றாம் கட்ட மரநடுகை நிகழ்வு வடக்கு மாகாண ஆளுநர் றெஜினோல்ட் குரே தலைமையில் நேற்று முன்தினம் மாநகரப் பகுதியில் ஆரம்பித்து வைக்கப்பட்டது.

வடக்கு மாகாண ஆளுநரின் ஏற்பாட்டில் யாழ்ப்பாணம் மாநகரசபை , யாழ்ப்பாண மாவட்ட இராணுவ கட்டளைத் தலைமையகம் , விவசாய திணைக்களம் , யாழ்ப்பாண மாவட்ட செயலகம் , மரக் கூட்டுத்தாபனம் ஆகியன இணைந்து மரநடுகையில் ஈடுபட்டன.

நிகழ்வில் வடக்கு மாகாண அவைத் தலைவர் சி.வி.கே.சிவஞானம், வடக்கு மாகாணத்தின் முன்னாள் எதிர்க்கட்சித் தலைவர் தவராசா, யாழ்.மாநகர பிரதி முதல்வர்து. ஈசன் ஆளுநரின் செயலர் இளங்கோவன், யாழ்.மாநகர ஆணையாளர் ஜெயசீலன் உட்பட விவசாயத் திணைக்களம், மாவட்டச் செயலகம், மரக்கூட்டுத்தாபனம் போன்றவற்றின் அதிகாரிகளும் கலந்து கொண்டனர். (ஐ-17,7)

## கடற்றொழிலாளர்களது பிரச்சினைக்கு தீர்வவைப் பெற்றுத் தருமாறு கோரிக்கை

யாழ்ப்பாணம்,டிசெ.29

காலநிலை சீர்கேடுகளால் பாதிப்புறும் கடற்றொழிலாளர்களது வாழ்வாதார பிரச்சினைக்கு தீர்வவைப் பெற்றுத் தருமாறு பருத்தித்துறை முனைக் கடற்றொழிலாளர் சங்கம் நாடாளுமன்ற உறுப்பினர் டக்ளஸ் தேவானந்தாவிடம் கோரிக்கை விடுத்துள்ளனர்.

யாழ்ப்பாணத்தில் உள்ள ஈ.பி.டி.பி கட்சியின் தலைமை அலுவலகத்துக்கு நேற்றுச் சென்ற கடற்றொழிலாளர் சங்கப் பிரதிநிதிகள் செயலாளர் நாயகம் டக்ளஸ் தேவானந்தாவிடம் தாம் எதிர்கொள்ளும் பிரச்சினைகள் தொடர்பில் கலந்துரையாடினர் என்று கட்சியால் வெளியிடப்பட்ட ஊடக அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது

துற்போது நாட்டின் காலநிலை ஒவ்வொரு வருடமும் மாற்றங்கண்டு வருகின்றது. இதனால் எமது பகுதி கடற்றொழிலாளர்கள் ஒவ்வொரு மாதமும் தொழில் செய்வதில் பல பிரச்சினைகளை எதிர்கொண்டு வருகின்றோம் இதற்கு ஒரு தீர்வைப் பெற்றுத்தர வேண்டும் என்று சங்கத்தினர் கோரிக்கை விடுத்தனது.

பிரதிநிதிகளின் கோரிக்கைகள் மற்றும் பிரச்சினைகளை கேட்டறிந்துகொண்ட செயலாளர் நாயகம், தற்போது எம்மிடம் உடனடித் தீர்வுகளை பெற்றுத்தருவதற்கான அதிகாரங்கள் குறைந்தளவாகவே காணப்படுகின்றது. துறைசார் தரப்பினரது கவனத்துக்கு பிரச்சினைகளை கொண்டுசென்று தீர்வுகளை பெற்றுத்தருவதற்கான முயற்சிகளை மேற்கொள்வதாகவும் அவர் உறுதியளித்தார். (ஐ)

## சான்றிதழ் வழங்கும் நிகழ்வு

சாவகச்சேரி, டிசெ 29

மும்மொழிக் கற்கை நிலையத்தினால் சிங்கள மொழிப் பயிற்சி வகுப்புகளில் பங்குபற்றியோருக்கான சான்றிதழ் வழங்கும் நிகழ்வு சாவகச்சேரி நகரசபை பொன்விழா மண்டபத்தில் நாளைமுற்பகல் 10 மணிக்கு நடைபெறும். வடக்கு மாகாண கல்வி அமைச்சின் கீழ் இயங்கும் மும்மொழிக் கற்கை நிலையத்தினால் அலுவலகங்களில் கடமையாற்றும் ஆரம்ப வகுதி அலுவலர்களுக்கு நடத்தப்பட்ட 50 மணித்தியாலய சிங்கள மொழிப் பயிற்சி வகுப்புகளில் பங்குபற்றியோருக்கான சான்றிதழ்களே வழங்கப்படவுள்ளன என்று வடமாகாண கல்வி பண்பாட்டலுவல்கள் விளையாட்டுத் துறை மற்றும் இளைஞர் விவகார அமைச்சின் பிரதிக் கல்விப் பணிப்பாளர் நா.கந்ததாசன் அறிவித்துள்ளார். (ஐ-9)

## புத்தகக் கடையில் தீ
### பெறுமதியான காகிதாதிகள் நாசம்

யாழ்ப்பாணம், டிசெ. 29


புத்தகக் கடையொன்று திடீரென தீப்பிடித்ததில், அங்கிருந்த பல இலட்சம் பெறுமதியான காகிதாதிகள் எரிந்து நாசமாகியுள்ளதாகப் பொலிஸார் தெரிவித்தனர்.

இந்தச் சம்பவம் யாழ்ப்பாணம் அச்சுவேலிப் பகுதியில் நேற்று அதிகாலை இடம்பெற்றது.

குறித்த புத்தகக் கடையை நேற்று முன்தினம் மாலை பூட்டிவிட்டு உரிமையாளர் சென்றுள்ளார்.இனையடுத்து இன்று அதிகாலை கடை திடீரெனத் தீப்பிடித்து எரிந்துள்ளதை அவதானித்த அயலவர்கள் தீயணைப்பு பிரிவினருக்குத் தகவல் வழங்கியதையடுத்து அங்கு விரைந்த தீயணைப்புப் பிரிவினர் தீயைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவந்துள்ளனர்.

எனினும் அங்கிருந்த காகிததாதிகள் முற்றுமுழுதாக எரிந்துள்ளன. இதில் பல இலட்சம் ரூபா பெறுமதியான பொருள்கள் நாசமாகியுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

தீ ஏற்பட்டதற்கான காரணங்கள் இதுவரையில் கண்டறியப்படவில்லையெனவும், சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருவதாக அச்சுவேலிப் பொலிஸார் தெரிவித்தனர். (ஐ-8)



# நெடுந்தீவுப் பாதீடு மீண்டும் தோல்வி

யாழ்ப்பாணம், டிசெ.29

நெடுந்தீவு பிரதேச சபையின் அடுத்தாண்டுக்கான பாதீடு இரண்டாவது தடவையாக நேற்றும் தோற்கடிக்கப்பட்டது.

நெடுந்தீவுப் பிரதேச சபையின் அமர்வு சபா மண்டபத்தில் தவிசாளர் ரொஸாந் தலைமையில் நேற்று நடைபெற்றது.

இந்த அமர்வில் சபையின் அடுத்தாண்டுக்கான திருத்தம் செய்யப்பட்ட பாதீடு தவிசாளரால் சபையில் முன்வைக்கப்பட்டது. எனினும் உறுப்பினர்கள் சிலர் பாதீட்டுக்கு எதிர்ப்புத் தெரிவித்தனர். ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சி உறுப்பினர்கள் 6 பேரும், சுயேட்சைக் குழுவின் உறுப்பினர்கள் 2 பேரும் பாதீட்டுக்கு எதிராக வாக்களித்தனர். தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு உறுப்பினர்களும், ஐக்கிய தேசியக் கட்சி உறுப்பினர்களுமாக 5 பேர் ஆதரவாக வாக்களித்தனர். 2019 ஆம் ஆண்டுக்கான பிரதேச சபையின் பாதீடு கடந்த 18ஆம் திகதி சபையில் சமர்ப்பிக்கப்பட்டது. அதன்போதும் பாதீடு தோற்கடிக்கப்பட்டது. திருத்தங்களுடன் அடுத்த அமர்வில் பாதீடு சமர்ப்பிக்கப்படும் என்று தவிசாளர் தெரிவித்திருந்தார். நேற்றுத் திருத்தங்களுடன் சமர்ப்பிக்கப்பட்ட பாதீடும் தோற்கடிக்கப்பட்டது. (ற-8)



## வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவிகள் வழங்கல்

கிளிநொச்சி,டிசெ.29

பூநகரிப் பிரதேச செயலகத்துக்குட்பட்ட பல்லவராயன்கட்டு ஜெயபுரம் தும்புருவில் பகுதியில் வெள்ளத்தால் பாதிப்புற்று ஜெயபுரம் மகாவித்தியாலயத்தில் தங்கியுள்ள 49 குடும்பங்களுக்கு உலர் உணவுப்பொதிகள் நேற்று வழங்கி வைக்கப்பட்டன. பூநகரி சமூக அபிவிருத்திச் சங்கம் கனடா அமைப்பினர் இவ்வுதவியினை வழங்கினர்.

இதன்போது பூநகரி பிரதேச சபையின் உப தவிசாளர், பிரதேச சபையின் உறுப்பினர்கள், இலங்கைத் தமிழரசுக் கட்சியின் முழங்காவில் பிரதேச அமைப்பாளர், கட்சியின் கிளிநொச்சி மாவட்ட ஊடக இணைப்பாளர் யோ.தனராஜ் ஆகியோர் கலந்து கொண்டனர். (ஐ-222)



ஒட்டுசுட்டான் பிரதேச செயலர் பிரிவில் உள்ள முத்துஐயன்கட்டுமுத்துவிநாயகர்புரம்கிராமங்களில் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு மட்டக்களப்பு முனைப்பு நிறுவனத்தால் நேற்று முன்தினம் உதவிப்பொருள்கள் வழங்கிவைக்கப்பட்டன. (ஐ – 500)

## 'ஓட்டோ'வில் சென்று குப்பை வீசினால் தகுந்த நடவடிக்கை


### எச்சரிக்கின்றார் சங்கத்தின் தலைவர்

வீதிகளில் குப்பைகளை வீசுவதற்காக கழிவுகளை ஏற்றிச் செல்லும் முச்சக்கர வண்டிகள் இனம்கானப்பட்டு சங்கத்தினாலும் தகுந்த நடவடிக்கைக்கு உட்படுத்தப்படும் என்று முச்சக்கர வண்டிச் சங்கத்தின் தலைவர் இராமணி விஜயராசா தெரிவித்தார்.

யாழ்ப்பாணக் குடாநாட்டில் வீடுகள், உணவகங்கள் , வர்த்தக நிலையங்களின் கழிவுகளை இரவு நேரங்களில் ஏற்றிச் சென்று மக்கள் நடமாட்டம் குறைந்த நேரத்தில் போட்டுவிட்டுச்செல்லும் செயல்பாடுகளுக்கு முச்சக்கர வண்டிகளின் உதவியை நாடும் சமயம் சங்கத்தின் பதிவில் உள்ள முச்சக்கர வண்டிகள் அவ்வாறான செயற்பாடுகளில் ஈடுபட வேண்டாம்.

அவ்வாறு ஈடுபடும் சந்தர்ப்பத்தில் தற்போது இரவுவேளைகளில் மாநகர சபையினால் திடீர் சோதனையில் அகப்பட்டாலோ அல்லது மறைகாணிகளில் அடையாளப்படுத்தப்பட்டு சட்ட நடவடிக்கைக்குச் உட்பட்டாலோ சங்கம் பொறுப்புச் ஏற்க மாட்டாது.

அதேநேரம் இனம் காணப்படும் முச்சக்கர வண்டிகளின் பயண வழித்தட அனுமதிகள் குறிப்பிட்ட காலத்துக்கு இடைநிறுத்தப்படும். ஏனெனில் கடந்த இரு நாள்களாக யாழ்ப்பாண நகரில் இரவு நேரத்தில் மேற்கொண்ட திடீர் சோதனையின்போது பல முச்சக்கர வண்டிகளும் அகப்பட்டுள்ளமை தொடர்பில் எமது கவனத்துக்கும் கொண்டு வந்துள்ளனர். அது தொடர்பிலும் கவனம் செலுத்துகின்றோம் . எனவே இவ்வாறான சம்பவங்களில் ஈடுபடும் ஒரு சில முச்சக்கர வண்டிச் சாரதிகளும் இச் செயலில் ஈடுபட வேண்டாம். எனக் கேட்டுக்கொள்கின்றேன். என்றார். (ஐ-105)



யாழ்ப்பாணம் மாநகர பிரதேசத்தில் டெங்கு நோய்கள் இனங்காணப்படும் நோயாளர்கள் வசிக்கும் வீடுகள் மற்றும் அயற்புறங்கள் அனைத்துக்கும் உடனடியாகவே புகை விசிறும் பணி மாநகர சபையால் முன்னெடுக்கப்படுகின்றது.

இதற்காக யாழ்ப்பாண போதனா மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்ட நோயாளர்களில் டெங்கு என இனங்காணப்படும் நோயாளர்கள் விவரங்கள் பிராந்திய சுகாதாரத் திணைக்களத்துக்கு அறிவிக்கப்படும். திணைக்களம் சுகாதார அலுவலர் ஊடாக குறித்த பணியை மேற்கொண்டுவருகின்றது. (ஐ105)

வெள்ளப் பாதிப்பு காரணமாக அதிகளவிலான மக்கள் பாதிக்கப்பட்ட முல்லைத்தீவு மற்றும் கிளிநொச்சி ஆகிய மாவட்ட மக்களுக்கு ஒரு தொகுதி உதவிப் பொருள்கள் நேற்று முன்தினம் வழங்கி வைக்கப்பட்டன. புதுக்குடியிருப்பு, தேவிபுரம் இடைத்தங்கல் முகாமில் உள்ள 102 குடும்பத்துக்னருக்கு உலர் உணவுப் பொருள்கள் அடங்கிய பொதியும் ,60 குடும்பங்களுக்கு நுளம்பு வலையும் ,சிறுவர்களையும் ,நோயாளர்களையும் கொண்ட குடும்பத்துக்கு பால்மாவும் வழங்கப்பட்டன. மன்னார் பொது விளையாட்டு மைதானத்தில் கடந்த திங்கட்கிழமை முதல் மன்னார் மாவட்டத்தில் தன்னார்வம் மிக்க இளையோர்களினால் ஆரம்பிக்கப்பட்ட உதவிப் பொருள்கள் சேகரிக்கும் பணிகள் நிறைவடைந்த நிலையில் நேற்றுமுன்தினம் குறித்த பொருட்கள் முல்லைத்தீவுக்கு கொண்டு செல்லப்பட்டன. மன்னார் மாவட்ட இளைஞர்கள் குழு மற்றும் துளிர் உதவும் கரங்கள் இணைந்து மன்னார் மக்கள் மன்றத்தினூடாக குறித்த உதவிகளை நேரடியாகச் சென்று கையளித்தனர். (ஐ- 56)





முல்லைத்தீவு மாவட்டத்தில் வெள்ளத்தினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு காரைநகர் சமூக மேம்பாட்டு கழகமும் சிவகௌரி சனசமூக நிலைய இளைஞர்களும் இணைந்து உதவிப் பொருள்களை வழங்கி வைத்தனர். முல்லைத்தீவு மாவட்டத்தில் அதிகம் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட வசந்தபுரம் மன்னாகண்டல் பகுதியில் இருந்து இடம்பெயர்ந்து இடைத்தங்கல் முகாமில் தங்கவைக்கப்பட்டுள்ள மக்களுக்கு பகிர்ந்தளிக்கப்பட்டது. (ஐ- ரி3)

அண்மையில் பெய்த அடை மழை காரணமாக பாதிக்கப்பட்ட முல்லைத்தீவு மாவட்டத்தைச் சேர்ந்த மக்களுக்கு ஒரு பகுதி உலர் உணவுப் பொருள்களை கடந்த செவ்வாய்க்கிழமை புத்தூரில் உள்ள 'உறவுக்கு உதவும் கரங்கள்' அமைப்பு வழங்கியுள்ளது. புதுக்குடியிருப்பு பிரதேச செயலர் ஊடாக பாதிக்கப்பட்ட மக்களுக்கு இந்த உதவிப் பொருள்கள் வழங்கப்பட்டன என்று உதவும் கரங்கள் அமைப்பினர் தெரிவித்துள்ளனர். (ஐ)



## பொதுக் கூட்டம்

தெல்லிப்பழை,டிசெ.29

தெல்லிப்பழை செஞ்சலனை ஞான வைரவர் ஆலயத்தின் வருடாந்த பொதுக்கூட்டம் நாளை ஞாயிற்றுக்கிழமை மாலை 4 மணிக்கு ஆலய முன்றலில் இடம்பெறவுள்ளது.

நிகழ்வில் அடுத்த ஆண்டுக்கான நிர்வாக சபைத் தெரிவு இடம்பெறவுள்ளதுடன் இவ்வாண்டின் நிர்வாக சபையின் ஆவணங்கள் கையளிப்பும் இடம்பெறும் என ஆலய நிர்வாக சபை அறிவித்துள்ளது. (ஐ)

▸▸ ▸▸ ▸▸ ▸▸ ▸▸ ▸▸

யாழ்ப்பாணம்,டிசெ.29

நீர்வேலி கந்தசுவாமி ஆலயத்தின் வருடாந்த பொதுக்கூட்டம் நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு ஆலய மண்டபத்தில் பரிபாலன சபையின் தலைவர் நடராசா தலைமையில் நடைபெறும்.

கூட்டத்தில் புதிய நிர்வாக சபைத் தெரிவும் இடம்பெறும் என்று ஆலய பரிபாலன சபையினர் தெரிவித்துள்ளனர். (ஐ-17)

## கற்றல் உபகரணங்கள் வழங்கல்

யாழ்ப்பாணம்,டிசெ.29

அரியாலைப் பிரதேசத்தில் வறுமை நிலையில் உள்ள குடும்பங்களைச் சேர்ந்த மாணவர்களுக்குகற்றல்உபகரணங்கள்வழங்கும்நிகழ்வு அரியாலைஸ்ரீபார்வதிவித்தியாலயத்தில்இன்று சனிக்கிழமை முற்பகல் 9 மணிக்குத் தலைவர் சு.சண்முகரட்ணம்தலைமையில்இடம்பெறும். அரியாலை அபிவிருத்திச் சங்கம் இந் நிகழ்வை ஏற்பாடு செய்துள்ளது.

நிகழ்வில் முதன்மை விருந்தினர்களாக யாழ்ப்பாணக்கோட்டக்கல்விப்பணிப்பாளர்எப்.எக்ஸ். அன்ரன், நல்லூர்கோட்டக்கல்விப்பணிப்பாளர் சி. தேவகுமாரன் ஆகியோரும், சிறப்பு விருந்தினராகஅ.உபயசேகரமும்கலந்துகொள்ளவுள்ளனர்.

தரம் 4 இல் தெரிவுசெய்யப்பட்ட 13 மாணவர்களுக்கும், தரம் 5 இல் தெரிவுசெய்யப்பட்ட 17 மாணவர்களுக்கும், தரம்10இல்தெரிவுசெய்யப்பட்டுள்ள 19 மாணவர்களுக்கும் கற்றல் உபகரணங்கள் வழங்கப்படவுள்ளன.

2018 ஆம் ஆண்டு ஜி.சி.ஈ சாதாரணதரப் பரீட்சையில் சித்திபெற்ற மாணவர்கள், 2018 ஆம் ஆண்டு தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில் சித்திபெற்ற மாணவர்கள் ஆகியோரும் இதன் போது மதிப்பளிக்கப்படவுள்ளனர். (ஐ)



சாவகச்சேரி பொதுச் சந்தையில் அமைந்துள்ள குபேர கணபதி ஆலயத்தின் சங்காபிசேக நிகழ்வு கடந்த செவ்வாய்க்கிழமை முற்பகல் 10 மணியளவில் இடம்பெற்றது. (ஐ-9)

## ஓய்வூதியர்பட்டியல் அனுப்பி வைப்பு

வரணி,டிசெ.29

தென்மராட்சிபிரதேசசெயலகஓய்வூதியர்களின் டிசெம்பர் மாத சம்பளப் பட்டியல் தொடர்பான விவரம் சகல பயனாளிகளுக்கும் கடந்தவாரம் பிரதேசசெயலரினால்அனுப்பிவைக்கப்பட்டுள்ளது.

அந்தப் பட்டியலில் அவர்கள் பெறும் சம்பளம் தொடர்பாக முழுவிபரங்களும் தெரியப்படுத்தப்பட்டுள்ளன.

இதன் பிரகாரம் 2019 ஆம் ஆண்டில் ஜனவரி மாதம்10 ஆம்திகதியும், பெப்ரவரி, மார்ச், ஏப்ரல், நவம்பர் ஆகிய மாதங்களில் 8 ஆம் திகதியும், மே, ஜூன், ஜூலை, செப்ரெம்பர், டிசெம்பர் ஆகிய மாதங்களில் 10 ஆம் திகதியும், ஓகஸ்ட் 9 ஆம் திகதியும் ஒக்டோபர் 4 ஆம்திகதியும்ஓய்வூதியர்கள்சம்பளத்தைபெற்றுக்கொள்ளமுடியும்என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஐ-122)

### கர்ப்பிணியிடம் தாலி அபகரிப்பு:

# அடையாள அணிவகுப்புக்காக இருவர் மறியலில் வைப்பு

சாவகச்சேரி,டிசெ.29

**எட்டு மாதக் கற்பிணியைத் தாக்கி அவர் அணிந்திருந்த தாலிக்கொடியை அபகரித்துச் சென்றனர் என்ற குற்றச்சாட்டில் இருவரை அடையாள அணிவகுப்புக்காக விளக்கமறியலில் வைக்குமாறு சாவகச்சேரி நீதிமன்றினால் கடந்த புதன்கிழமை உத்தரவிடப்பட்டது.**

சாவகச்சேரி மருத்துவமனையில் கடந்த திங்கட்கிழமை நடைபெற்ற கர்ப்பவதிகள் சிகிச்சையில் (கிளினிக்) கலந்துகொள்வதற்காக இந்தக்கர்ப்பிணிப்பெண் நடந்து சென்றுள்ளார்.

உந்துருளியில் வந்த இருவர் மீசாலை சிற்றம்பலம் வீதியில் வைத்து கர்ப்பிணியைத் தாக்கி வீழ்த்தி விட்டு காலால் அவரது உடலைமிதித்துதாலிக்கொடியை அபகரித்துக்கொண்டு உந்துருளியில் தப்பிச் சென்றுள்ளனர்.

தாக்கியதிலும் தள்ளி வீழ்த்தியதிலும் வயிற்றில்வலிஏற்பட்டகர்ப்பிணிப்பெண்சாவகச்சேரிமருத்துவமனையில்சேர்க்கப்பட்டார். இந்நிலையில்மருத்துவமனைப்பொலிஸாரிடம்முறைப்பாடுசெய்தபெண் உந்துருளியின் இலக்கத்தையும் வழங்கியுள்ளார். இதனையடுத்து பொலிஸார் உந்துருளியின் இலக்கத்தை அனைத்து பொலிஸ் நிலையங்களுக்கும் அறிவித்திருந்தனர்.

கடந்த செவ்வாய்க்கிழமை கடமையில் இருந்த பொலிஸார் கேரதீவு -நாவற்குழி வீதியில் குறித்த இலக்க உந்துருளி வந்த போது அதனை மறித்து அதில் வந்தவர்களைக் கைது செய்தனர்.

பொலிஸாரின் தொடர் விசாரணையில் மேலும்ஒருவரைக்கைதுசெய்தனர். இந்த இருவரும்யாழ்ப்பாணம்கொட்டடி, குருநகரைச்சேர்ந்தவர்கள்எனவும்தெரிவிக்கப்பட்டது.

சந்தேகநபர்கள் இருவரும்ஒருவாரத்துக்கு முன்னர் மீசாலை சிற்றம்பலம் வீதியில் நடந்து வந்த ஆசிரியை அணிந்திருந்த தங்கச் சங்கிலியை அபகரித்துச் சென்றனர் எனவும் தெரிவிக்கப்பட்டது.

கர்ப்பிணியிடம் தாலிக்கொடியையும், ஆசிரியரிடம் தங்கச்சங்கிலியையும் அபகரித்தார்கள் என்ற இரு குற்றச்சாட்டுடன் கடந்த புதன்கிழமை சாவகச்சேரி நீதிமன்ற நீதிவான்முன்னிலையில்முற்படுத்தப்பட்டனர்.

வழக்கு விசாரணையின் பின் இருவரையும் எதிர்வரும் ஜனவரிமாதம் 8 ஆம்திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறும் உத்தரவிட்டு அன்றைய தினம் அடையாள அணிவகுப்பில் நிறுத்த ஏற்பாடுகள் மேற்கொள்ளுமாறும் பொலிஸாருக்கு உத்தரவிடப்பட்டது.

சந்தேக நபர்களில் ஒருவர் கடந்த வருடம் வரணிப் பகுதியில் தம்பதியினரை வீட்டினுள் கட்டிவைத்து தாக்கிவிட்டு அங்கிருந்த நகைகள் மற்றும் பணம் திருடிச் சென்ற நால்வரில் ஒருவர் எனவும் இவர் நீதிமன்றினால் ஒத்தி வைக்கப்பட்ட சிறைத் தண்டனை விதிக்கப்பட்டவர் என வழக்கினைப் பார்வையிட வந்தவர்கள் தெரிவித்தனர்.

மற்றவருக்கு யாழ்ப்பாணம், மல்லாகம்நீதிமன்றங்களில்வழக்குகள்உள்ளனஎனவும் தெரிவிக்கப்பட்டது. (ஐ-9,105)

## குருதிக்கொடைநிகழ்வு

வடமராட்சி,டிசெ.29


வடமராட்சி மாலுசந்தி மைக்கல் விளையாட்டுக் கழகத்தின் ஏற்பாட்டில் குருதிக்கொடை வழங்கும் நிகழ்வு கழக மண்டபத்தில் இன்று காலை 8.30 மணி தொடக்கம் 1.30 மணி வரை நடைபெறும்.

கிளிநொச்சி கொக்காவில் பகுதியில கடந்த ஜனவரிமாதம்9ஆம்திகதி இடம்பெற்றவாகனவிபத்தில் உயிரிழந்த ஜெயச்சந்திரன், அருண், சிந்துஜன், கிருஸ்ணரூபன் ஆகியோரின் நினைவாக இந்தக் குருதிக்கொடை நிகழ்வு இடம்பெறவுள்ளது. (ஐ-124)



கொடிகாமம் நகரத்துக்கு என ரூபா 5 லட்சம் நிதி ஒதுக்கீட்டில் வீதி விளக்குகள் பொருத்தும் பணி நேற்றுமுன்தினம் சாவகச்சேரி பிரதேச சபைத் தவிசாளர் க. வாமதேவன் தலைமையில் இடம்பெற்றது

கொடிகாமம் நகரப்பகுதியில் சந்தியில் நான்கு திசைகளுக்கும் ஒவ்வொன்று 14 ஆயிரம் ரூபா செலவில் சாவகச்சேரி பிரதேசசபை உபதவிசாளர் செ. மயூரன், சாவகச்சேரி பிரதேச சபை உறுப்பினர் தெய்வேந்திரம்பிள்ளை ஆகியோர் இணைந்து சாவகச்சேரி பிரதேச சபையின் மின் இணைப்பாளர்இ.சாந்தரூபனின்மேற்பார்வையில் 40 எல்.ஈ.டி வீதி விளக்குகள் பொருத்தப்பட்டன. (ஐ-159)



யாழ்ப்பாணம் குருநகர் இறங்குதுறை பகுதி, மற்றும் கடல்த் தொழிலை அண்டிய பகுதிகளின் வீதிகளுக்கு வீதி விளக்குகள் பொருத்தப்பட்டுள்ளன. யாழ்ப்பாண மாநகர சபை உறுப்பினர் சாந்தரூபனால்குருநகர்மீனவத் தொழிலாளர்கள்சார்பாகஜே.மக்மிலனிடம்கடந்தபுதன்கிழமை வழங்கப்பட்டுமாநகரசபைமின்சார இணைப்புசேவையாளர்களினால்பொருத்தப்பட்டன. (ஐ-159)

## மதிப்பளிப்பு நிகழ்வு

சாவகச்சேரி,டிசெ.29

தென்மராட்சி கல்வி வலய முன்பள்ளிகளின் ஆசிரியர்களுக்கான மதிப்பளிப்பு நிகழ்வுதென்மராட்சி கலை மன்ற கலாசார மண்டபத்தில் நேற்று முற்பகல் 9 மணிக்கு வலய முன்பள்ளி அலகினரின் ஏற்பாட்டில் இடம்பெற்றது.

வலயக் கல்வி முகாமைத்துவப் பிரதிக் கல்விப் பணிப்பாளர் அ.பிறேமதாஸ் தலைமையில் நடைபெற்றநிகழ்வில்முதன்மைவிருந்தினராக வலயக்கல்விப் பணிப்பாளர் சு.சுந்தரசிவம் கலந்துகொண்டார்.

நிகழ்வில் தென்மராட்சி வலயத்துக்கு உட்பட்டநாவற்குழி, கொடிகாமம், வரணி, மிருசுவில், மீசாலை, சாவகச்சேரி, மட்டுவில், கச்சாய், ஆகிய 8 குடும்ப முன்பள்ளிகளின் 94 முன்பள்ளிகளைச் சேர்ந்த132 ஆசிரியர்கள் முதன்மை விருந்தினரால் மதிப்பளிக்கப்பட்டனர். (ஐ-159,9)

## சீருடைக்கான வவுச்சர் வழங்கல்

யாழ்ப்பாணம், டிசெ.29

யாழ்பாணம் கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரியில் கல்வி பயிலும் மாணவர்களுக்கான இலவசச் சீருடை வவுச்சர் நாளைமறுதினம் காலை 8 மணிக்கு பாடசாலையில் வழங்கப்படவுள்ளது.

எனவே அனைத்து மாணவர்களும் தமக்கான சீருடை வவுச்சரை பெற்றுக் கொள்ளுமாறு பாடசாலை அதிபர் கேட்டுக்கொண்டுள்ளார். (ஐ)



## கிளிநொச்சியில்

# வெள்ளத்தால் அழிந்த பயிர்களின் மதிப்பீடு அடுத்த வாரம் வெளிவரும்

### மாவட்ட விவசாயப் பணிப்பாளர் தகவல்

கிளிநொச்சி, டிசெ.29

**வெள்ளப்பெருக்கில் அழிவடைந்த பயிர்கள் தொடர்பான விவரங்களைச் சேகரிக்கும் பணிகள் இடம்பெறுகின்றன. அடுத்த வாரமே பாதிப்புக்களின் விவரம் தெரியவரும் என்று கிளிநொச்சி மாவட்ட விவசாயப் பணிப்பாளர் தெரிவித்தார்.**

வடக்கு மாகாணத்தில் கடந்த சில தினங்காகப் பெய்த கடும்மழையால் கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்டங்கள் பெரும் பாதிப்பை எதிர்கொண்டுள்ளன. அந்த மாவட்டத்தைச் சேர்ந்த மக்கள் இடம்பெயந்ததுடன், வாழ்வாதாரங்களும் அழிவடைந்துள்ளன. சிறுபோகச் செய்கை, மற்றும், தோட்டங்கள் என்பனவும் சேதங்களுக்கு உள்ளாகின. அடுத்து என்ன செய்வது என்று தெரியாது மக்கள் பெரும் சோகத்தில் உறைந்துள்ளனர். இவ்வாறான நிலையில் பாதிக்கப்பட்ட மக்களுக்கு பலரும் உதவிப்பொருள்களை வழங்கிவருகின்றனர். பாதிக்கப்பட்டவர்கள், இடம்பெயர்ந்தவர்கள், தேமடைந்த வீடுகள் போன்ற தகவல்களை அந்த மாவட்டங்களின் இடர்முகாமைத்துவப் பிரிவினர் வழங்கியுள்ளனர். எனினும் விவசாயத்தில் ஏற்பட்ட பாதிப்புகள், அழிவடைந்த பயிர்களின் சேதவிவரம் போன்றன இதுவரை வெளியாகவில்லை. இது தொடர்பில் கிளிநொச்சி விவசாயப் பணிப்பாளர் அற்புதச் சந்திரனைத் தொடர்பு கொண்டு கேட்டபோதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

"கிளிநொச்சியில் விவசாயத்திலும் பெரும் பாதிப்புகள் ஏற்பட்டுள்ளன. அது தொடர்பான முழுமையான விவரங்கள் திரட்டப்படுகின்றன. முழுவிவரங்களையும் திரட்டிய பின்னர்தான் எவ்வளவு பாதிப்பு ஏற்பட்டுள்ளது என்று தெரியவரும். அவரசமாக விவரங்களை வெளியிட்டால் பாதிக்கப்பட்ட பலர் தவறவிடப்படுவர். எனவே அடுத்தவாரமளவில் அந்த முழுமையான விவரங்கள் வெளியிடப்படும் "என்று விவசாயப் பணிப்பாளர் மேலும் தெரிவித்தார். (21)

## வெடுக்குநாறிச் சுடலையை விடுவிக்குமாறு மக்கள் கோரிக்கை

முல்லைத்தீவு,டிசெ.29

ஒட்டுசுட்டானில் உள்ள வெடுக்குநாறிச்சுடலை என அழைக்கப்படும் மயானத்துக்குள் 2008 ஆம் ஆண்டு காலப்பகுதியிலிருந்து இராணுவத்தினர் பதுங்கு குழிகளை அமைத்தும் கட்டடங்களை அமைத்தும் தம்வசமாக்கியுள்ளனர்.

மக்கள் இறந்தவர்களை புதைக்கவோ அல்லது எரிக்கவோ பத்து கிலோமீற்றர் தூரம் செல்லவேண்டிய் துர்ப்பாக்கிய நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளனர். தற்போது அரச தலைவரின் வேண்டுதலுக்கமைய வடக்கு மாகாணத்தில் மக்களின் காணிகள் விடுவிக்கப்பட்டு வருகின்றன. அதனடிப்படையில் எமது பாவனைக்காக மயானக் காணியையும் விடுவித்து, இறந்தவர்களின் உடல்களைப் புதைக்கவும், எரிக்கவும், ஆவனசெய்ய வேண்டுமென மக்கள் வேண்டுகின்றனர். (500)



## முகநூல் மூலம் ஒன்றிணைந்து பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவி

கிளிநொச்சி,டிசெ.29

கிளிநொச்சி மற்றும் முல்லைத்தீவு மாவட்டங்களில் கடந்த நாள்களில் ஏற்பட்ட கடும் வெள்ள இடரினால், பல்லாயிரக்கணக்கில் பாதிக்கப்பட்ட மக்களுக்கு, முகநூல் மூலம் இளைஞர்கள் ஒன்றிணைந்து உதவிகள் வழங்கியுள்ளனர்.

பாதிக்கப்பட்ட மக்களுக்கு கரம் கொடுக்கவென பல்வேறு நாடுகளிலும், புலம்பெயர்ந்து வாழும் தமிழர்கள், தாயகத்தில் உள்ள இளைஞர்களுடன் முகநூல் வழியில் தன்னிச்சையாக ஒன்றிணைந்து ஓர் குழுமத்தை உருவாக்கி அதனூடாக உடனடி இடர் உதவித் திட்டங்களை வழங்கி வருகின்றனர்.

முல்லைத்தீவு மாவட்டத்தில் பேராறு, பண்டாரவன்னியன் கிராமம், வசந்தபுரம் மற்றும் வள்ளிபுனம்ஆகிய பகுதிகளைச் சேர்ந்த குடும்பங்களுக்கும், கிளிநொச்சி மாவட்டத்தில்பிரமந்தனாறு, தம்பிராசபுரம், குமாரசாமிபுரம், உருத்திரபுரம் மற்றும் பாரதிபுரம் உள்ளிட்ட பகுதிகளைச் சேர்ந்த குடும்பங்களுக்கும் மொத்தமாக 6 இலட்சத்து 55 ஆயிரத்து 405 ரூபாய் நிதியில், அவசர அத்தியாவசிய பொருள்கள் மற்றும் உலர் உணவு உள்ளிட்ட உதவிப் பொருள்கள் கடந்த 23, 24 ஆம் திகதிகளில் வழங்கி வைக்கப்பட்டுள்ளன.



## தெருமின் விளக்குகள் பொருத்தப்பட்டன

மன்னார்,டிசெ.29

அமைச்சர் ரிசாட் பதியூதீனின் நிதி ஒதுக்கீட்டின் கீழ் கொள்வனவு செய்யப்பட்ட 10 இலட்சம் ரூபாய் பெறுமதியான ஒரு தொகுதி தெரு மின் விளக்குகள் பொருத்தப்பட்டுள்ளன.

மன்னார் பிரதேச சபையின் தலைவர் எம்.முஜாஹிர் தலைமையில் நேற்று முன்தினம் மன்னார் பிரதேச சபை பிரிவுக்குட்பட்ட பேசாலை பகுதியில் உள்ள தெரு மின் கம்பங்களில் பொருத்தப்பட்டன. (56)

### இடர் முகாமைக்காக

## முல்லைத்தீவுடன் இணைந்த மன்னார்,திருகோணமலை

முல்லைத்தீவு,டிசெ.29

வெள்ள இடர் காரணமாக பாதிக்கப்பட்ட முல்லைத்தீவு,கிளிநொச்சி மாவட்டங்களின் இழப்புக்களை அறிக்கையிடுவதற்கு மன்னார்,திருகோணமலை மாவட்ட இடர் முகாமைப்பிரிவினரும் ஒன்றிணைந்துள்ளனர்.


முல்லைத்தீவு மாவட்டத்தில் கடந்த நாள்களாக பெய்த கடும் மழை காரணமாக, மக்கள் இடம்பெயர்ந்து 11 இடைத்தங்கல் முகாம்களில் தங்க வைக்கப்பட்டுள்ளனர்.

இந்த நிலையில் இடர் விவரங்களை கிராமஅலுவலர் ஊடாக, பிரதேச செயலகம், இடர் முகாமைத்துவ மத்திய நிலையத்திடம் புள்ளிவிவர தகவல்களை வழங்கிவருகின்றனர்.

முல்லைத்தீவு மாவட்டத்தின் முழுமையான வயல் நிலங்கள், மேட்டு நிலப் பயிர்செய்கை கால்நடைகள்,வீதிகள்,வீடுகள்,கிணறுகள் என மக்களின் பாதிப்பு விபரங்களை அறிக்கையிடுவதற்காக திரட்டும் நடவடிக்கையில் முல்லைத்தீவு மாவட்ட இடர் முகாமைத்துவ மத்திய நிலையம் ஈடுபட்டுள்ளது.

இவர்களுக்குத் துணையாக மன்னார் மாவட்டத்தின் இடர் முகாமைத்துவ மத்தியநிலையத்தின் உதவிப்பணிப்பாளர் கே.திலீபனும், திருகோண மலை மாவட்டத்தின் இடர் முகாமைத்துவ மத்திய நிலையத்தின் உதவிப்பணிப்பாளர் கே.சுகுண தாசனும் முல்லைத்தீவு மாவட்ட இடர் முகாமைத்துவ மத்திய நிலையத்துடன் இணைந்து பணியாற்றுகின்றனர்.

கடந்த 27 ஆம் திகதி காலை முல்லைத்தீவு மாவட்ட மேலதிகமாவட்டச் செயலர் கோ.தனபாலசுந்தரத்தை சந்தித்து விட்டு, மாவட்ட இடர் முகாமைத்துவ உதவிப்பணிப்பாளர் எஸ்.லிங்கேஸ்வரகுமாருடன் இணைந்து தகவல் திரட்டும் பணிகளை மேற்கொண்டுவருகின்றனர். (ரி3)



## பாதிக்கப்பட்ட மக்களுக்கு சுகாதார சேவைகள்

முல்லைத்தீவு,டிசெ.29

ஒட்டுசுட்டான் பகுதியில் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கான சுகாதார சேவைகளை முல்லைத்தீவு மாவட்ட சுகாதார சேவைச் சங்கத்தினர் மேற்கொண்டு வருகின்றனர்.

அவர்களுடன் இணைந்து, ஒட்டுசுட்டான் பிரதேச மருத்துவசேவைப் பணியாளர்களும் செயற்பட்டுவருகின்றனர். (500)

## 15 இலட்சம் பெறுமதியான பாலைக் குற்றிகள் பறிமுதல்

முல்லைத்தீவு,டிசெ.29

ஒட்டுசுட்டான் பகுதியிலிருந்து முல்லைத்தீவு மாங்குளம் வீதியூடாக, அனுமதியின்றி மரங்கள் ஏற்றிச்செல்லப்படுவதாகப் பொலிஸாருக்குக் கிடைத்த தகவலுக்கமைய 15 இலட்சம் பெறுமதியான பாலைமரக் குற்றிகள் கைப்பற்றப்பட்டுள்ளன.

ஒட்டுசுட்டான் பொலிஸார் விரைந்து சென்று,10ஆம் கட்டைப் பகுதியில் டிப்பர் வாகனத்துடன் பிடிக்க முற்பட்ட போது,சாரதி உட்பட அனைவரும் தப்பி ஓடியுள்ளனர்.

தமது தீவிர முயற்சியில் ஒருவர் பிடிபட்டுள்ளார் எனப் பொலிஸார் தெரிவித்தனர். பிடிபட்டவரை விசாரணைக்காக தடுத்துவைத்து நீதிமன்றத்தில் முற்படுத்தவுள்ளதாகவும் பொலிஸ்பொறுப்பதிகாரி தெரிவித்தார். சம்பவம் கடந்த 25 ஆம் திகதி இடம்பெற்றது. (500)



## மாற்றுவலுவுள்ளோர் சங்கத்தினரால் 3 ஆயிரத்து 500 பேருக்கு உதவி

கிளிநொச்சி,டிசெ.29

கிளிநொச்சி மாவட்ட மாற்றுவலுவுள்ளோர் சங்கத்தினரால் வெள்ள இடரால் பாதிக்கப்பட்ட 3 ஆயிரத்து 500 க்கும் அதிகமானோருக்கு உதவிகள் வழங்கப்பட்டுள்ளன.

மாற்று வலுவுள்ளோர் சங்கத்தின் தலைவர் சரவணனின் வேண்டுகோளுக்கு அமைவாக, புலம்பெயர் உறவுகளின் உதவியுடன் பாதிக்கப்பட்ட மக்களுக்கான உதவிகள் வழங்கப்பட்டு வருகின்றன. உடனடியாக மக்களுக்கு தேவையான அத்தியாவசிய உலருணவுகள், உள்ளிட்ட பொருள்கள் வழங்கப்பட்டு வருகின்றன.

17 முகாம்களைச் சேர்ந்த 3ஆயிரத்து 500 க்கு மேற்பட்ட மக்களுக்கு உதவிகள் வழங்கப்பட்டுள்ளன.

கிணறுகள் சுத்தம் செய்தல் உள்ளிட்ட உதவிகளை வழங்கவும் மாற்று வலுவுள்ளோர் சங்கம் நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றது என சங்கத்தின் தலைவர் தெரிவித்தார். (214)

# வாள்களுடன் கொள்ளையர்கள் அட்டகாசம் குடும்பத்தினரைத் தாக்கி நகைகள் கொள்ளை

மன்னார்,டிசெ. 29

**நானாட்டான் உயிலங்குளம் பிரதான வீதியில் அமைந்துள்ள சூரியகட்டைக்காடு கிராமத்தில் வியாபாரா நிலையத்துடன் அமைந்துள்ள வீடொன்றில் கத்தி, கோடரி போன்ற கூரிய ஆயுதங்களுடன் வந்த ஐந்துக்கும் மேற்பட்ட முகமூடி அணிந்த கொள்ளையர்கள் குடும்பத்தில் உள்ளவர்களை தாக்கிவிட்டு தங்க நகைகளைக் கொள்ளையடித்துச் சென்றுள்ளனர்.**


இந்தச் சம்பவம் நேற்று அதிகாலை மூன்று மணியளவில் நடைபெற்றுள்ளது. தாலிக் கொடி,மோதிரங்கள், காதணிகள் உட்பட பதினெட்டுப் பவுணுக்கும் அதிகமான நகைகளும் விலை உயர்ந்த கைத்தொலைபேசியும் கொள்ளையடிக்கப்பட்டதாகவும்,வந்தவர்கள் சிங்கள மொழியில் உரையாடியதாகவும் பாதிக்கப்பட்டவர்கள் தெரிவித்தனர்.

இது பற்றி மேலும் தெரியவருவதாவது;

ஒரு வாரத்தின் முன் சிறிய பொமேரியன் நாய் காணாமல் போயிருந்தது. அது சிறிய சத்தம் கேட்டாலும் குரைத்து சத்தம் போடும் நாம் அந்த விடயத்தை பெரிதாக எடுக்கவில்லை.

நேற்றையதினம் நத்தார் ஒளிவிழா முடிந்ததும் உறக்கத்துக்கு சென்றுவிட்டோம். திடீரென சத்தம் கேட்டு கண் விழித்தபோது நான்கு ஐந்து முகமூடி அணிந்தவர்கள் கதவுகளை உடைத்துக்கொண்டு உள்ளே வந்தனர். மகனை தடியினால் தாக்கிய பின், எம் அனைவரையும் ஓரிடத்தில் அமருமாறு சிங்கள மொழியில் கூறினார்கள். சிலர் அறைகளை வேகமாக சோதனையிட்டு நகைகளை எடுத்தார்கள். சிலர் கடைய்ய உடைத்து மா, சீனி பைக்கற்றுகளையும், மூடையாக கட்டி எடுத்தவர்கள். அதனை கொண்டுபோகாமல் வீட்டின் பின்புறம் விட்டுச் சென்றுள்ளனர்.

தங்க நகைகளுடன் சில கவரிங் நகைகளும் இருந்தது. கவரிங்கை விட்டு தங்க நகைகளை மட்டுமே எடுத்து சென்றுள்ளனர். வந்தவர்கள் வீட்டின் பின்புற முள்வேலிகளை குறடுகளால் வெட்டியே வந்துள்ளார்கள். ஆனால் இவை அனைத்தும் சொற்ப நேரத்துக்குள் நடந்து முடிந்தது. இறுதியாக மீண்டும் 'நேரம் சரி' என்று சிங்கள மொழியில் தெரிவித்தனர் என்று வீட்டு உரிமையாளர்கள் தெரிவித்தனர்.



சம்பவம் குறித்து முருங்கன் பொலிஸில் முறைப்பாடு செய்யப்பட்டதை அடுத்து வீட்டுக்கு பலத்த பொலிஸ் பாதுபாப்பு போடப்பட்டுள்ளது.

மேலதிக விசாரணைகளை மேற்கொள்வதற்காக தடயவியல் திணைக்களத்திற்கு தகவல் அனுப்பப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

சம்பவத்தில் ஈடுபட்டவர்கள் உந்துருளியை விட்டுவிட்டு சென்றுள்ளார்கள் என்பது குறிப்பிடத்தக்கது. (213-60)



## கல்குவாரி வரியை அதிகரிக்க கோரிக்கை

யாழ்ப்பாணம், டிசெ.29

வவுனியா, சிங்களப் பிரதேச சபைக்கு உட்பட்ட பகுதிகளில் கல்குவாரிகளுக்கான வரியையும், போக்குவரத்து அனுமதிப் பத்திரக் கட்டணத்தையும் அதிகரிக்க அனுமதிக்க வேண்டும் என்று பிரதேச சபைத் தலைவர் சி.பி. அலகல்ல வடக்கு மாகாண ஆளுநரிடம் கோரிக்கை விடுத்துள்ளார்.

நேற்றுக்காலைவடக்கு ஆளுநரைபிரதேச சபைத் தலைவர், செயலர், உறுப்பினர்கள் சந்தித்துக் கலந்துரையாடினர். அதன் போதே அவர் இந்தக் கோரிக்கையை முன்வைத்தார்.

கோரிக்கையைஆராய்ந்தவடக்குஆளுநர், இந்தக் கோரிக்கை தொடர்பான விரிவான அறிக்கை ஒன்றைச்சமார்ப்பியுங்கள் என்று சபையின்செயலருக்குப்பணிப்புரைவிடுத்தார்.

பிரதேச சபைக்கான உழவு இயந்திரங்கள் பற்றாக்குறை, ஜே.சி.பி. ஒன்றைக்கொள்வனவுசெய்தல், உப அலுவலகங்கள் அமைப்பதற்கான நிதி வழங்கல் தொடர்பாகவும் இந்தக் கலந்துரையாடலில் கலந்துரையாடப்பட்டது.

உள்ளூராட்சி ஆணையாளர் பற்றிக் டிறஞ்சன், முதலமைச்சர் அமைச்சின் பதில் செயலர் சரஸ்வதி மேகநாதன், ஆளுநரின் செயலர் எல். இளங்கோவன் ஆகியோரும் கலந்துரையாடலில் கலந்து கொண்டனர். (ற-8)

## 'கால அதிர்வுகள்' நூல் வெளியீடு

வவுனியா, டிசெ.29

மூத்த ஊடகவியலாளர் பொன்னையா மாணிக்கவாசகத்தின் "கால அதிர்வுகள்" நூல் வெளியீட்டுநிகழ்வு இன்று பிற்பகல் 2 மணிக்கு வவுனியா வாடி வீடு கலாசார மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

வவுனியா கல்வியியல் கல்லூரியின் ஓய்வு நிலை முதல்வர் கே. சிதம்பரநாதன் தலைமையில் நடைபெறவுள்ள இந்த நிகழ்வில், வீரகேசரி நாளிதழின் ஆசிரியர் எஸ். சிறிகஜன் முதன்மை விருந்தினராகக் கலந்து கொண்டு சிறப்புரை யாற்றவுள்ளார்.

மூத்த ஊடகவியலாளர் வீ. தனபாலசிங்கம் நூலை வெளியிட்டு உரையாற்றுவார். நூலின் முதற் பிரதியை வவுனியா கவிதாஸ்ரோர் உரிமையாளரும் பிரபல வர்த்தகருமாகிய அ. தணிகாசலம் பெற்றுக் கொள்வார்.

யாழ். பல்கலைக்கழகத்தின் அரசறிவியல் துறைத் தலைவர் கே. ரீ. கணேசலிங்கம் மதிப்பீட்டுரை வழங்குவார். தொடர்ந்து நூலாசிரியர் பொன்னையா மாணிக்கவாசகம் ஏற்புரையாற்றுவார். (110)



## அரியாலை சுதேசியம் அமைப்பால் உதவிப் பொருள்கள் வழங்கல்

முல்லைத்தீவு.டிசெ.29

முல்லைத்தீவு மாவட்டத்தில் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு யாழ்ப்பாணம் அரியாலை சுதேசியம் அமைப்பினரால் வெள்ள இடர் உதவிப் பொருள்கள் வழங்கப்பட்டுள்ளன.

சுதேசியம் அமைப்பினுடைய திருநாள் கொண்டாட்ட நூற்றாண்டு விழாவின்நினைவாக அரியாலை வாழ் உள்ளூர் மற்றும் புலம்பெயர் உறவுகளால் இந்த வெள்ள உதவிப் பொருள்கள் வழங்கப்பட்டுள்ளன.

முல்லைத்தீவில் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட பகுதிகளில், கனகரத்தினபுரத்தில் 110 குடும்பங்களைச் சேர்ந்த 411 பேருக்கும், மாங்குளத்தில் 65 குடும்பங்களைச் சேர்ந்த 247 பேருக்கும், பனிக்கன்குளத்தில் 43 குடும்பங்களுக்கும் உணவுப் பொருள்கள் வழங்கிவைக்கப்பட்டுள்ளன. (246)

## வெள்ள இடரால் பாதிக்கப்பட்டவர்களுக்கு வடக்கு முன்னாள் முதலமைச்சர் உதவி

கிளிநொச்சி.டிசெ.29

கிளிநொச்சி மயில்வாகனபுரம் இந்துத் தமிழ்க் கலவன் பாடசாலையில் வெள்ள இடரால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு கடந்த 26 ஆம் திகதி, வடமாகாணசபை முன்னாள் முதல்வரால் உலருணவுப்பொருள்கள் வழங்கப்பட்டுள்ளன.

உதவி வழங்கும் நிகழ்வில் கருத்துத் தெரிவித்த முன்னாள் முதலமைச்சர் கிளிநொச்சி மற்றும் முல்லைத்தீவு மாவட்டங்களுக்கு மேலும் உலர் உணவுகளை வழங்க உத்தேசித்துள்ளதாகவும், தற்காலிகமான அவர்களின் இன்றையநிலையைக் கடந்துசெல்லவே எமது உதவிகள் வழங்கப்படுகின்றன என்றும், உதவிகளுடன் நின்றுவிடாமல் அவர்கள் தங்களைத் தாங்களே பாதுகாத்துக் கொள்ளும் நிலைவர வேண்டும். அதற்கு தன்னம்பிக்கை சுய முயற்சி அவசியம் என்றும் தெரிவித்தார்.






*வடக்கின் பொருளாதார அபிவிருத்திக்கான சமூக நிறுவனத்தினரால், வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு ஒருதொகுதி உதவிப் பொருள்கள் வழங்கப்பட்டுள்ளன.*

*மாங்குளம் நீதிபுரம் மக்களுக்கு உதவிபுரியும் நோக்குடன், அமைக்கப்பட்ட இந்த நிறுவனத்தினரால் நேற்று முன்தினம் இந்த உதவிகள் வழங்கப்பட்டுள்ளன. (74)*

வரவு -செலவுத் திட்டம்

## இரண்டாவது தடவை வெற்றி பெற்ற வினோதம்

பச்சிலைப்பள்ளி பிரதேச சபையின் வரவு செலவு திட்டம் இரண்டாவது தடவையில் மேலதிக ஒரு வாக்கினால் வெற்றி பெற்றது.

பிரதேச சபையின் அமர்வு நேற்றுக் காலை 9 மணியளவில் தவிசாளர் சுப்பிரமணியம் சுரேன் தலைமையில் இடம்பெற்ற அமர்வில் 2019 ஆம் ஆண்டுக்கான வரவு- செலவுத் திட்டம் ஏற்கனவே தோற்கடிக்கப்பட்ட நிலையில் நேற்றையதினம் இரண்டாவது முறையாக சமர்ப்பிக்கப்பட்டு வாக்கெடுப்பிற்கு விடப்பட்டது.

தமிழ் தேசிய கூட்டமைப்பின் சார்பில் 6 பேரும், தமிழ் தேசிய மக்கள் முன்னணி சார்பில் 1 வாக்கும் ஆதரவாக வழங்கப்பட்டது. எதிராக கேடய சின்ன உறுப்பினர்கள் 4 பேரும், சுதந்திரக்கட்சி மற்றும் ஈ.பி.டி.பி. கட்சியினைச் சேர்ந்த உறுப்பிரனர்களும் வாக்களித்தனர். ஆதரவாக 7 வாக்கும், எதிராக 6 வாக்கும் கிடைத்தது 1 வாக்கினால் வரவு செலவு திட்டம் நிறைவேற்றப்பட்டது. (6)

# 48 ஆயிரத்து 914 ஏக்கர்களில் வவுனியாவில் பயிர்ச்செய்கை

## மாவட்டகமநல அபிவிருத்தி உதவிஆணையாளர் விஜியகுமார் தெரிவிப்பு

வவுனியா,டிசெ.29

**வவுனியா மாவட்டத்தில் 2018 மற்றும் 2019 ஆம் ஆண்டுகளுக்கான பெரும்போகத்துக்காக 42 ஆயிரத்து 902 ஏக்கர்களில் பயிர் செய்வதாக இலக்கு நிர்ணயிக்கப்பட்டிருந்த போதும்,மேலதிகமாக 6 ஆயிரம் ஏக்கர் பயிரிடலுடன், 48ஆயிரத்து 914 ஏக்கர் பயிர்ச் செய்கைமேற்க்கொள்ளப்பட்டுள்ளது.**

கைவிடப்பட்ட காணிகளில் மீளப்பயிர் செய்கை மேற்கொண்டுள்ளதுடன், மழைவீழ்ச்சியும் சாதகமாக அமைந்துள்ளது.

மத்திய நீர்ப்பாசனத்துக்கு உட்பட்ட 6 ஆயிரத்து 529 ஏக்கர் வயல் காணிகளும், மாகண நீர்ப்பாசனத்தின் கீழ் 5 ஆயிரத்து 585 ஏக்கர் வயல் காணிகளும், கமநல அபிவிருத்தித் திணைக்களத்தின் கீழ் உள்ள 661 குளங்களில், 29ஆயிரத்து 800 ஏக்கரும், 7ஆயிரம் ஏக்கர் அளவிலான மானாவாரிப் பயிர்ச் செய்கை அடங்கலாக 48 ஆயிரத்து 914 ஏக்கர் வயல் காணிகளில் பயிர்ச் செய்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இந்த வகையில் விவசாயிகள் 29 ஆயிரத்து 895 ஏக்கருக்குரிய உரமானியத்தை பெற்றுள்ளனர். ஏனைய விவசாயிகள் உரமானியத்தை பெற்றுக் கொள்ளவில்லை.

தேவையான உரங்கள் கமநல நிலையங்களில் உள்ளன. எனவே உரிய காலத்தில் விவசாயிகள் விவசாய கடமைகளை மேற்கெண்டு 19ஆயிரத்து19 ஏக்கருக்குரிய உரமானியங்களை பெற்றுக்கொள்ள வேண்டும்.

இதேவேளை கடந்த காலங்களில் வவுனியாவில் ஏற்பட்ட மழை காரணமாக 3ஆயிரத்து 588.75 ஏக்கர் வயல் நிலங்கள் அழிவுக்குள்ளாகியுள்ளன. இது தொடர்பான விபரங்களை திரட்டி விவசாய அமைச்சு மற்றும் கமநல காப்புறுதி சபைக்கு சமர்பித்துள்ளோம். இதேவேளை யானையினால் 17 ஏக்கர் காணிகள் அழிக்கப்பட்டுள்ளன எனவும் தெரிவித்தார். (110)



# தொழிலாளர் மதிப்பளிப்பு நிகழ்வு

வவுனியா,டிசெ.29

வவுனியா நகரசபையின் தொழிலாளர்நலன் புரிச்சங்கத்தின் ஏற்பாட்டில் விருதுவழுங்கும் நிகழ்வும், தொழிலாளர் மதிப்பளிப்பு நிகழ்வும் நேற்றுக் காலை 10 மணிக்கு வவுனியா நகரசபை கலாசார மண்டபத்தில் நடைபெற்றன.

நிகழ்வில் நகரசபையில் நீண்டகாலம் பணியாற்றிய மூத்த தொழிலாளர்கள் மதிப்பளிக்கப்பட்டதுடன், திறமையான தொழிலாளர்களுக்கு விருதுகள் வழங்கப்பட்டது.

நிகழ்வில் விருந்தினர்களாக நகரசபை தலைவர் இ. கௌதமன், பிரதேசச்பையின் தலைவர் து.நடராயசிங்கம், ஜனநாயக மக்கள்காங்கிரசின் இணைப்பாளர் பிரசாத், நகரசபைஉறுப்பினர்கள்,சுகாதார ஊழியர்கள் எனப் பலரும்கலந்து கொண்டனர். (110)

## 9 வயதுச் சிறுவனிடம்

# குளோரின் கரைக்க கொடுத்த சுகாதார உத்தியோகத்தர்கள்

## விசாரணைகள் முன்னெடுக்கப்படுவதாக அதிகாரிகள் தகவல்

முல்லைத்தீவு, டிசெ.29

வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட கிணறுகளுக்கு கிருமி கொல்லி மருந்துகள் இடும் செயற்பாடுகள் முல்லைத் தீவில் இடம்பெறுகின்றன. குளோரின் கிருமி நாசினியை 9 வயதுச் சிறுவனைக் கொண்டு கரைத்து கிணற்றில் ஊற்றுமாறு சுகாதார உத்தியோகத்தர்களால் தெரிவிக்கப்பட்ட சம்பவம் தொடர்பான விசாரணைகள் இடம்பெறுவதாக மாங்குளம் பொதுச் சுகாதாரப் பரிசோதகர் விஜய ஐங்கரன் தெரிவித்தார்.

சம்பவம் பற்றித் தெரியவருவதாவது;

முல்லைத்தீவு ஒட்டுசுட்டான் பிரதேச செயலர் பிரிவில் உள்ள இந்துபுரம் கிராமத்தில் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட கிணறுகளுக்கு கிருமி கொல்லிகள் இடும் செயற்பாடு சுகாதார உத்தியோகத்தர்களால் முன்னெடுக்கப்பட்டுள்ளது.

நேற்று முன்தினம் வியாழக்கிழமை வீடு ஒன்றுக்குச் சென்ற உத்தியோகத்தர்கள் இருவர் வீட்டில் இருந்த 9 வயதுசிறுவனைக்கொண்டு குளோரின் கிருமி நாசினியைக் கரைத்துள்ளனர். சிறுவனின் பெற்றோர் வீட்டில் இல்லாத நேரம் இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது. கிருமி நாசினிகளை அந்தச் சிறுவன் வெற்றுக் கைகளால் கரைத்தான் என்றும். கரைத்த குளோரினை சிறுவனே கிணற்றில் ஊற்றினான் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

வீட்டுக்கு வந்த பெற்றோரிடம் சிறுவன் விடயத்தைக் கூறியுள்ளான். பெற்றோர்களால் முல்லைத்தீவு மாவட்டச் செயலருக்கு சம்பவம் தெரியப்படுத்தப்பட்டது.

விசாரணை மேற்கொண்ட முல்லைத்தீவு மாவட்டச் செயலர் சம்பவம் தொடர்பில் விசாரணை அறிக்கையை சமர்ப்பிக்குமாறு பொதுச்சுகாதாரப்பரிசோதகருக்கு நேற்று முன்தினம் உத்தரவிட்டார்.

மாங்குளம் பொதுச் சுகாதாரப் பரிசோதகர் விஜய ஐங்கரன் நேற்றுக் காலை சம்பவம் இடம்பெற்ற பகுதிக்குச் சென்று விசாரணைகளை மேற்கொண்டார். சம்பவம் தொடர்பில் 9 வயது சிறுவனிடம் வினவினார். பெற்றோருடன் தொடர்புகொண்டும் சம்பவம் தொடர்பில் விசாரித்தார்.

“குளோரின் இடப்படும்போது முகத்துக்கு முகமூடி அணிந்துகொள்ளுமாறும், கையுறைகளைப் பயன்படுத்துமாறும் கடமையில் ஈடுபடுத்தப்பட்ட ஊழியர்களுக்குஆலோசனைவழங்கப்பட்டது. அவர்களையே அப்பணிகளைச் செய்யுமாறும் பணித்திருந்தோம். எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பொதுமக்களை குறித்த செயற்பாட்டில் ஈடுபடுத்தப்படக் கூடாது என்பது தொடர்பில் அவர்களிற்கு போதுமான அறிவுறுத்தல் வழங்கப்பட்டது. எனினும் குறித்த சம்பவம் இடம்பெற்றுள்ளமை விசாரணைகளில் உறுதியாகியுள்ளன. அந்த இரு உத்தியோகத்தர்கள் மீதும் நடவடிக்கை மேற்கொள்ளப்படும். இந்த விசாரணை அறிக்கை மாவட்டச் செயலருக்கு அனுப்பப்படும் என்று பொதுச் சுகாதாரப் பரிசோதகர் தெரிவித்தார். (21.6)



மயிலிட்டி திருப்பூர் இளைஞர் நற்பணி மன்றத்தால் ,கிளிநொச்சி பிரமந்தனாறு பகுதி மக்களுக்கு வெள்ள இடர் உதவிப் பொருள்கள் வழங்கி வைக்கப்பட்டுள்ளன.

# வன்னிப்பிரதிப் பொலிஸ்மா அதிபர் அலுவலகத்தில் வருடாந்த கிறிஸ்மஸ் நிகழ்வு

வவுனியா,டிசெ.29

வவுனியா இறம்பைக்குளம் ஈஷி மிஷன் ஆலயத்தினால் வருடா வருடம் வன்னிப்பிரதிப் பொலிஸ்மா அதிபர் அலுவலகத்தில் மேற்கொள்ளப்பட்டு வரும் கிறிஸ்மஸ் நிகழ்வு இவ்வருடமும் மூன்றாவது முறையாக நேற்று முன்தினம் மாலை 4.30 மணியளவில் வன்னிப்பிரதிப் பொலிஸ்மா அதிபர் வளாகத்தில் இடம்பெற்றது.

இந்நிகழ்வில் வன்னிப் பிராந்தியத்திலுள்ள பொலிஸ் நிலையங்களில் கடமையாற்றும் பொலிஸார் தமது குடும்ப உறுப்பினர்களுடன் கலந்துகொண்டதுடன் அவர்களின் பிள்ளைகளுக்கு ஈஷி மிஷன் ஆலயத்தினரால் கற்றல் உபகரணங்கள் வழங்கிவைக்கப்பட்டன.



# எலிக்காச்சலுக்கான தடுப்பு மருந்துகள் வழங்கல்

கிளிநொச்சி, டிசெ. 29

வெள்ளத்தினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு,எலிக்காச்சலுக்கான தடுப்பு மருந்துகள் வழங்கப்பட்டு வருவதாக பிராந்திய தொற்று நோய் பொறுப்பு மருத்துவர் நிமால் அருமைநாதன் தெரிவித்தார்.

கிளிநொச்சி மாவட்டத்தில் ஏற்பட்ட வெள்ளப்பெருக்கு காரணமாக மக்கள் குடிமனைகளில், வெள்ளம் நிரம்பியுள்ளதால், மக்கள் இடம்பெயர்ந்து பொது இடங்களில் தங்க வைக்கப்பட்டுள்ளனர். இவர்களுக்கான சுகாதார தேவைகள் மாவட்ட சுகாதார துறையினரால் முன்னெடுக்கப்பட்டன.

தற்போது வெள்ளம் படிப்படியாக குறைந்து வரும் நிலையில் மக்கள் தமது இருப்பிடங்களுக்குச் செல்கின்றனர்.

வெள்ளம் ஏற்பட்டமையால் எலிக்காச்சலுக்கான தாக்கம் அதிகரித்து காணப்படும் என்பதனால்,. மக்களுக்கான தடுப்பு மருந்துகள் வழங்கப்பட்டு வருகின்றன.

அந்த வகையில் வழங்கப்படும் உரிய குளிசையினை சாப்பிட்ட பின்னர் இரண்டு குளிசைகளை எடுக்க வேண்டும் எனவும், குளிசை குடித்தவுடன், வாந்தி மற்றும் குமட்டல் போன்றவை வருவதற்கான வாய்ப்புக்கள் இருப்பதாகவும் அதனை நிறுத்துவதற்கு ஒரு குவளை நீர் அருந்த வேண்டும். அதனை அடுத்து ஒரு வாரத்தின் பின் மீண்டும் இரு குளிசைகள் எடுக்க வேண்டும் என பொறுப்பு மருத்துவ அதிகாரி தெரிவித்தார். (6)



# கற்றல் கருவிகள் வழங்கல்

முல்லைத்தீவு,டிசெ.29

மாணவர்களின் கற்றல் செயற்பாட்டை ஊக்கிவிப்பதற்காக வெளிச்சம் இளையோர் அமைப்பினால் ஒரு தொகுதி கற்றல் கருவிகள் வழங்கப்பட்டுள்ளன.

கொழும்பில் வசிக்கும் செல்வரூபனின் நிதியுதவியில் வெளிச்சம் இளையோர் அமைப்பினூடாக இந்த கற்றல் கருவிகள் வழங்கிவைக்கப்பட்டுள்ளன.

மேலும் 110 மாணவர்களுக்கு வழங்குவதற்கும் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

நேற்று முல்லைத்தீவு முள்ளியவளை, புதறிக்குடாப் பகுதியில் அமைந்துள்ள பொதுநோக்கு மண்டபத்தில் உதவிவழங்கல் நிகழ்வு நடைபெற்றது. (246)

### மட்டக்களப்பில் காணி விடுவிப்பு

# மகாவலிக்கு 5.3ஏக்கர் மக்களுக்கு 3.2ஏக்கர்

### அரச தலைவரின் பணிப்பில் நடவடிக்கை

மட்டக்களப்பு.டிசெ.29

**மட்டக்களப்பு மாவட்டத்தில் இராணுவத்தினர் கையகப்படுத்தியிருந்த காணிகளில் 8.5 ஏக்கர் அளவிலான காணிகள் அரச தலைவரின் பணிப்பின்பேரில் தேசிய நல்லிணக்கம் கருதி இராணுவத்தால் விடுவிக்கப்பட்டன.**

வடக்குக் கிழக்கில் இராணுவத்தினர் கையகப்படுத்தியிருக்கின்ற தமது காணிகளை விடுவிக்குமாறு கோரித் தமிழ்மக்கள்போராட்டங்கள்பவற்றை முன்னெடுத்து வருகிறார்கள். இந்த நிலையில் மட்டக்களப்பு மாவட்டத்தில் பாதுகாப்புப் படைகள் பயன்படுத்தி வந்த காணிகளில் எட்டரை ஏக்கர் காணிகள் அரச தலைவரின் பணிப்புக்கு அமைய நேற்று முன்தினம் விடுவிக்கப்பட்டன. இதில் மக்களுக்குச் சொந்தமானதாக 3.2 ஏக்கர் அளவிலான காணிகளும், மிகுதி மகாவலி அதிகாரசபைக்குமாகக் கையளிக்கப்பட்டது. இந்தக் காணிகளை விடுவிக்கும் நிகழ்வு மட்டக்களப்பு மாவட்ட செயலகத்தில், மட்டக்களப்பு மாவட்ட மேலதிக அரசஅதிபர் திருமதி. சுதர்சினி ஸ்ரீகாந் தலைமையில் நடந்தது. கிழக்கு மாகாண இராணுவக் கட்டளைத் தளபதியால் கிழக்கு மாகாண ஆளுநர்ரோஹிதபோகல்லாகமவிடம் குறித்தகாணிகள்உத்தியோகபூர்வமாகக்கையளிக்கப்பட்டன. இதில்மட்டக்களப்பு- கிரான்குளம், ஓந்தாச்சிமடம், கொக்கட்டிச்சோலை ஆகிய பகுதி இராணுவமுகாம்கள் அமைந்திருந்த மக்களின்காணிகள்மற்றும்தோணிதாண்டமடுவில்இராணுவமுகாம்அமைந்திருந்த காணிகள் ஆகியவை இராணுவத்தால்விடுவிக்கப்பட்டு, ஆளுநரிடம் ஒப்படைக்கப்பட்டன. அதை ஆளுநர் மாவட்ட மேலதிக அரச அதிபர், மகாவலிஅதிகாரசபையிடம்கையளித்தார். மட்டக்களப்புமாவட்டத்தில்65ஆயிரம் ஏக்கர் காணிகள் இராணுவத்தினரின் வசமிருப்பதும், அதில்10ஆயிரம்ஏக்கர்களைவிடுவிப்பதாகஇராணுவம்கூறியிருந்ததும் குறிப்பிடத்தக்கது.




## கள்ளியந்தீவில்சிலர்ஆர்ப்பாட்டம் இராணுவ ஊடகப்பிரிவு தகவல்

அம்பாறை.டிசெ.29

அம்பாறை திருக்கோயில் பிரதேச செயலர் பிரிவில் அமைந்திருக்கின்ற கள்ளியந்தீவுஇராணுவமுகாமை அகற்ற வேண்டாம் என்று கோரிஅந்தப்பிரதேசத்தைச் சேர்ந்தவர்களில் சிலர் குறித்த முகாமுக்கு முன்பாகக் கவனவீர்ப்புப் போராட்டத்தை முன்னெடுத்தனர் என்று இராணுவ ஊடகப் பிரிவு தெரிவித்தது.

இதுதொடர்பில்மேலும்தெரியவருவதாவது:

கள்ளியந்தீவில் இராணுவ முகாம் ஒன்று மக்கள் மத்தியில் இருந்து வருகிறது. இந்தப் பிரதேசத்தில் இடர்கள் ஏற்படும் சமயங்களில் இராணுவம் விரைந்து வந்து தங்களுக்குச் சேவைகளை ஆற்றியுள்ளதாகவும், முகாமை அகற்றுவதால் போதைப்பொருள்பாவனையாளர்களால் அச்சுறுத்தல் ஏற்படும் என்றும், இராணுவத்தினர் வெளியேறினால், தமக்குப் பாதுகாப்பு இல்லாமல் போகும் எனவே இராணுவத்தினரதுசேவைதமக்குத் தேவை என்று குறிப்பிட்டுக் குறித்த பகுதியைச் சேர்ந்த சிலரால் போராட்டம்ஒன்றுமுன்னெடுக்கப்பட்டது.



நன்றி: நிமால் ஜெயசாந்த

## ரணிலை வாழ்த்திய பதாகை சேதம்

கொழும்பு. டிசெ.29

அரசியல் குழப்பத்தின் முடிவில் ரணில் விக்கிரசிங்க தலைமை அமைச்சராகப் பதவியேற்றதை முன்னிட்டு ரணிலைச் சித்திரிக்கும் வகையிலமைந்த பெயர்ப் பலகையொன்று நாவலப்பிட்டிநகரில்வைக்கப்பட்டிருந்தது. இனந்தெரியாதவர்களால் சேதப்படுத்தப்பட்டது. இதுதொடர்பில் நாவலப்பிட்டிப் பொலிஸார் விசாரணை களை ஆரம்பித்தனர். வியாழக்கிழமை இரவு இந்தப் பெயர்பலகை சேதப்டுத்தப்பட்டதாகப் பொலிஸார்தெரிவித்தனர்.

நாவலப் பிட்டி நகரசபையின் அனுமதியோடும் நகரசபையின் ஏற்பாட்டில் பொருத்தப் பட்டிருந்த பெயர்ப் பலகையே இவ்வாறு சேதபடுத்தப்பட்டது. இது குறித்து நாவலப்பிட்டி நகரசபையின் சார்பில் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடுசெய்யபட்டதாகவும், இதுவரையிலும் எவரும் கைது செய்யபடவில்லை எனவும் பொலிஸார் மேலும் தெரிவித்தனர்.

## விபத்துக்குள்ளாகிய நபரை நசித்துக் கொன்றது லொறி

பதுளை.டிசெ.29

பஸ்ஸுமோட்டார்சைக்கிளும்விபத்துக்குள்ளாகியதால், மோட்டார் சைக்கிளைச் செலுத்திச் சென்ற நபர் தூக்கி வீசப்பட்டு அவர் மீது மணல் லொறி ஏறியது. இதனால் அவர் சம்பவ இடத்திலேயே சாவடைந்தார் என்று பதுளைப்பொலிஸார் தெரிவித்தனர்.

பதுளை-மஹியங்கனைமுதன்மைவீதியின்தல்தென 21வது மைல் கல்லருகே, கடந்த புதன்கிழமை இந்தச் சம்பவம் இடம்பெற்றது. பதுளை மீகாகியுல என்ற இடத்தைச் சேர்ந்த 59 வயதுடைய எல்.ஏ. தயானந்த என்ற குடும்பத் தலைவரே இதில் சாவடைந்தார். இது தொடர்பில் தெரியவருவதாவது;

பதுளையிலிருந்து மஹியங்கனை நோக்கிச் சென்றுகொண்டிருந்த தனியார் பஸ்ஸை தல்தென 21ஆவது மைல்கல் அருகே குறித்த மோட்டார் சைக்கிள் முந்திச் செல்லமுற்பட்டபோது பஸ்சும் மோட்டார் சைக்கிளும் விபத்துக்குள்ளாகின. இதனால்மோட்டார்சைக்கிளைச் செலுத்திச்சென்றவர் தூக்கிவீசப்பட்டார். அவர்மீது எதிர்திசையில் பயணித்த மணல் லொறி ஏறியது. இதனால் அவர்சம்பவஇடத்திலேயேநசிந்துசாவடைந்தார். இந்த விபத்துக் குறித்து பதுளைப் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டனர். தனியார் பஸ் சாரதியையும், மணல்ஏற்றிச்சென்றலொறிச்சாரதியையும்கைதுசெய்தனர்.

## சேவையாற்றக்கூடிய அமைச்சு இல்லாவிடினும் ஐக்கிய தேசியக் கட்சிக்கே ஆதரவளிப்போம்

### நாடாளுமன்ற உறுப்பினர் இராதாகிருஸ்ணன் தெரிவிப்பு

நுவரேலியா, டிசெ.29

மக்களுக்குச் சேவை செய்யக்கூடியதான அமைச்சுக் கிடைக்காது விடினும் தொடர்ந்து எங்களுடைய ஆதரவு ஐக்கிய தேசியக் கட்சிக்கே வழங்கப்படும் என முன்னாள் கல்வி இராஜாங்க அமைச்சரும் தமிழ் முற்போக்குக் கூட்டணியின் பிரதித் தலைவரும் நுவ்ரெலியாமாவட்டநாடாளுமன்றஉறுப்பினருமான வேலுசாமி இராதாகிருஸ்ணன் தெரிவித்தார். செய்தியாளர்கள் நேற்றைய தினம் அவரிடம் எழுப்பிய கேள்விகளுக்குப் பதில்அளிக்கும்போதே அவர்இவ்வாறுகுறிப்பிட்டார். இதுபற்றிஅவர்மேலும்தெரிவித்ததாவது:



அரசியல்குழப்பத்தின்போதுஐக்கியதேசியக் கட்சிக்கு மலையக மக்கள் முன்னணி தனது ஆதரவை வழங்கியது. இதன்போது நாம் ரணில்விக்கிரமசிங்கவோடுநடத்தியபேச்சில் அமைச்சரவை மதிப்புள்ள அமைச்சுப் பதவி ஒன்றையும் பிரதி அமைச்சுப் பதவி ஒன்றையும்மலையக மக்கள் முன்னணிக்குத்தருவதாக ஏற்றுக் கொண்டார். எனக்குக் கல்வி இராஜாங்கஅமைச்சைக்கோரியிருந்தோம். ஆனால்அவர்எனக்கு அமைச்சரவை மதிப்பு அற்ற அமைச்சு ஒன்றை வழங்குவதாகத் தெரிவித்தார். அதை ஏற்றுக் கொண்டோம். தற்பொழுது அது தொடர்பில் இழுபறி ஏற்பட்டுள்ளது. ஏதோ ஒரு புதிய அமைச்சை உருவாக்கித்தருவதற்கு முயற்சி செய்துவருவதாகக் கேள்விப்படுகின்றேன். அப்படி ஒரு நிலைமைஏற்பட்டால்நான்அமைச்சுப்பதவிகளைப் பெற்றுக் கொள்ள மாட்டேன். எதிர்க் கட்சிக்குச் சென்று அமரவும் மாட்டேன். தொடர்ந்தும்எங்களுடையஆதரவைஐக்கிய தேசியக் கட்சிக்கே வழங்குவதற்குத் தீர்மானித்துள்ளோம். அமைச்சராக இருந்து கொண்டுஅதன்பயன்களைஅனுபவிப்பதைவிட மக்களுக்குச் சேவை செய்ய வேண்டும் என்பதே எனது நோக்கமாகும். எனவே அவ்வாறான அமைச்சுப் பதவி கிடைக்காத பட்சத்தில்மலையக மக்கள் முன்னணி அமைச்சுப் பதவியைப் பொறுப்பேற்காது - என்றார்.

## கபிலநிறத் தண்டுத் தத்தியால் பாதிப்பு

### மட்டக்களப்பு விவசாயிகள் கவலை

மட்டக்களப்பு.டிசெ.29

மட்டக்களப்பு மாவட்டத்தில் மேற்கொள்ளப்பட்டுள்ளபெரும்பொகவேளாண்மைச்செய்கையில்முன்னெப்போதும்இல்லாதஅளவுக்குக்கபில நிறத் தண்டுத் தத்தியின் தாக்கம் அதிகரித்துள்ளதாக விவசாயிகள் கவலை தெரிவித்தனர். மட்டக்களப்பு -படுவாங்கரைப் பகுதியில் மேற்கொள்ளப்படும் பெரும்போக வேளாண்மைச் செய்கையில் பயிர்களில் மஞ்சள் நிறமுடைய ஒருவித நோயும், அதிகளவு களைகளும் காணப்படுவதாகவும், கபில நிறத் தண்டுத் தத்தியின் (அறக் கொட்டி) தாக்கம் பெரிய பிரச்சினையாகக் காணப்படுவதாகவும் அவர்கள் கவலை வெளியிட்டனர்.


பலவகையானகிருமிநாசினிகளைவிசிறிய போதும் அவற்றைக் கட்டுப்படுத்த முடியாதுள்ளதால்தாம்அதிகநட்டத்தைஎதிர்நோக்க வேண்டியுள்ளதுஎன்றும்அவர்கள்கவலை வெளியிட்டனர்.

# தொடர்ந்து குமுறுகின்றது எரிமலை சுனாமி தாக்கும் ஆபத்தும் நீடிக்கிறது

## இந்தோனேசியாவில் எச்சரிக்கை

ஜகார்த்தா.டிசெ.29

இந்தோனேசியாவின் மேற்கு ஜாவாத் தீவில் உள்ள அனாக் கிரகடாவ்என்றஎரிமலைகடந்தசனிக்கிழமைவெடித்தது. இதனால்அந்தப் பகுதி முழுவதும் அதிர்ந்து குலுங்கியது. பின்னர் சிறிது நேரத்தில் அங்கு சுனாமி அலைகள் எழுந்து தெற்கு சுமத்ரா மற்றும் மேற்கு ஜாவாத் தீவுகளைக் கடுமையாகத் தாக்கின. அந்த எரிமலை தொடர்ந்து குமுறியபடி இருப்பதால் மீண்டும் சுனாமி ஏற்படுவதற்கான வாய்ப்புகள் உள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.



அனாக் கிரகடாவ் எரிமலைக் குமுறலால் ஏற்பட்ட சுனாமி அலைகளில் சிக்குண்டுசாவடைந்தவர்களின்எண்ணிக்கை ஐந்நூறை எட்டியிருந்தது. 400க்குஅதிகமானோர்காயமடைந்ததுடன், 154பேர்காணாமல்போயிருந்தனர். இந்தோனேசியாவில் சீரற்ற காலநிலை தொடர்வதால் பொதுமக்களைக்கடற்கரையிலிருந்துஒருகிலோ மீற்றர்தூரம்வரைவிலகியிருக்கும்படி அறிவிக்கப்பட்டிருந்தது.இந்தச்சுனாமி அலைகள் எழுவதற்குக் காரணமான அந்த எரிமலை தொடர்ந்து வெடித்து வருவதால் அதன் நெருப்புக் குழம்பு உயரமாகக் குவிந்துள்ளதாகச் செய்திகள் வெளியாகி உள்ளன. அந்த எரிமலை தொடர்ந்து குமுறிக் கொண்டே இருப்பதால், மீண்டும் மற்றுமொரு சுனாமிதாக்கலாம்என்பதைக்கவனத்தில் கொண்டு அந்த எரிமலையைச் சூழ்ந்தபகுதிகளில்வசிக்கும்மக்களை அந்தஇடத்தைவிட்டுவிலகிச்செல்லும்படி எச்சரிக்கைவிடுக்கப்பட்டுள்ளது. கடலுக்கு அடியிலும், தரைப் பகுதியிலும் நில அதிர்வுகளுக்கு இன்னும் வாய்ப்புகள் உள்ளன. என்று இந்தோனேசியாவின் அரச இடர் முகாமைத்துவத்திணைக்களம் மக்களுக்குத்தகவல்தெரிவித்துள்ளது.



## மாணவர்களைநிர்வாணமாக வெயிலில்நிறுத்தியகொடுமை

### ஆந்திராவில்சம்பவம்

ஆந்திரா. டிசெ.29

ஆந்திர மாநிலம் சித்தூரில் பாடசாலைக்குத் தாமதமாகவந்தமாணவர்களைநிர்வாணமாக வெயிலில்நிற்கவைத்தசம்பவம்ஒன்றுபதிவாகியுள்ளது. இந்த விவகாரத்தில் அந்தப் பாடசாலையின் தலைமை ஆசிரியர் மற்றும் ஆசிரியை ஆகியோர் கைது செய்யப்பட்டனர். ஆந்திர மாநிலம் சித்தூர் மாவட்டம் புங்கனூரில் உள்ள தனியார் பாடசாலையிலேயே இந்தச் சம்பவம்நடந்தது. கடந்தபுதன்கிழமை காலை 3ஆம் வகுப்பில் படிக்கும் 6 மாணவர்கள் பாடசாலைக்குத் தாமதமாக வந்துள்ளனர். அவர்கள் வீட்டுப் பாடமும் செய்திருக்கவில்லைஇதனால் ஆத்திரம் அடைந்த வகுப்பு ஆசிரியை 6 மாணவர்களின் ஆடைகளையும் கழற்றி பள்ளித்திடலில்நிர்வாணமாகவெயிலில்அண்ணளவாக 2மணி நேரம் நிற்க வைத்தார்.

இதையறிந்து சம்பவ இடத்துக்கு விரைந்த புங்கனூர் பொலிஸார் தலைமை ஆசிரியர், ஆசிரியை ஆகியோரைக்கைதுசெய்தனர். பின்னர் பாடசாலைக்கு முன்பாக மாணவர்களின் உறவினர்களும்,

பாரதீய ஜனதாக் கட்சியிரும் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். இதனால் இந்தப் பாடசாலையின் உரிமத்தை நீக்குவதற்கு உரிய அதிகாரியால் உத்தரவிடப்பட்டது.

பெல்ஜியத்தின்பிரஸல்நகரத்தில்பிரான்ஸின் எரிபொருள் விலை உயர்வுக்கு எதிராகப் போராட்டம் நடந்தது. அதில் பெண் ஒருவர்மீது கண்ணீர்ப் புகையைப் பொலிஸார்வீசுகின்றனர். அந்தப்பெண் தவறேதும் செய்யவில்லை, போராட்டத்தில் ஈடுபடவில்லை, போராட்டக் காரர்களைப்போல அவர் மஞ்சள் அங்கி அணியவில்லை என்று சுட்டிக்காட்டியும் கூட பொலிஸார் அவர் மீது கண்ணீர்ப் புகையைத் தொடர்ந்து வீசினர். இதை ரெய்டர்ஸ் செய்திச் சேவையின் செய்தியாளர் ஒருவர் படம்பிடித்தார்.



## கர்ப்பவதி விவகாரம்

# குருதிக்கு சொந்தக்காரன் உயிரை மாய்க்க முயற்சி

தமிழகம்.டிசெ.29

சவூதி அரேபியா செல்வதற்காக நுழைவிசைவு பெறவேண்டி அதற்கான மருத்துவப் பரிசோதனைக்குச் சென்றபோது தன்னுடைய குருதியில் எச்.ஐ.வி. தொற்றிருப்பது அந்த இளைஞனுக்குத் தெரியவந்துள்ளது. அதற்கு முன்னர் தான் கொடையளித்த குருதி தன்னுடைய உறவினரான குறித்த கர்ப்பவதிக்கு ஏற்றப்பட்டுவிடும் என்று விரைந்து அதைத் தெரியப்படுத்திய இளைஞன், தன்னுடைய குருதி கர்ப்பவதிக்கு ஏற்றப்பட்டதையறிந்து மனம்நொந்து தன்னுடைய உயிரை மாய்ப்பதற்கு முயற்சித்துள்ளதாகஇந்தியஊடகங்கள் செய்தி வெளியிட்டன. சாத்தூரைச் சேர்ந்த கர்ப்பவதிக்குஎச்.ஐ.வி. குருதிஏற்றப்பட்டமையானது அந்த இளைஞர், தான் தானம்செய்த குருதி கர்ப்பவதிக்குஏற்றப்பட்டதைவெளியே சொன்னதாலேயே வெளிச்சத்துக்குவந்துள்ளதுஎன்றுஇந்திய ஊடகங்கள்மேலும்செய்திவெளியிட்டன. அந்த இளைஞரின் மனிதாபிமானத்தால் கர்ப்பவதிக்குஉயர்தரசிகிச்சைவழங்கப்படுகிறது. வயிற்றிலுள்ள குழந்தைக்கு எச்.ஐ.வி பரவாமல் தடுக்கத் தமிழ்நாடு சுகாதாரத் துறை நடவடிக்கை எடுத்துள்ளது. அவரது கணவருக்கும் எச்.ஐ.வி. பரிசோதனை செய்து, அவருக்கு எச்.ஐ.வி. இல்லை என்று நிரூபிக்கப்பட்டுள்ளது. இந்தவகையில்அந்தஇளைஞர் 3 பேரின் உயிரைக் காப்பாற்றியுள்ளார். அந்தஇளைஞருக்கும், மதுரை அரச மருத்துவமனையில்சிகிச்சைவழங்கப்படுகிறது. இந்தச் சம்பவம் பற்றி குறித்த இளைஞனின் உறவினர் ஒருவர் கூறியதாவது:


"சின்னவயதில் இருந்தேஅவன் என் வீட்டில்தான் வளர்ந்தான். சரியாகப் படிக்கவில்லை. அதனால், சிவகாசிபட்டாசுகம்பெனியில் வேலைக்குச் சேர்த்துவிட்டோம். அவனுக்குஅந்தவேலையில் பிடித்தம் இல்ல. சில மாதமாவேவெளிநாடுசெல்லமுயற்சி செய்தான். சவூதி செல்ல வாய்ப்புக் கிடைத்தது. இந்த நிலையில்தான் இவன் குருதி கொடுத்தான். எச்.ஐ.வி. இருந்திருந்தால் அப்போதே சொல்லியிருப்பார்களே. ஆனால், எல்லாம்சரியாக இருந்தது என்றார்கள். நாங்களும் மருமகளை அழைத்துக் கொண்டு வீட்டிற்கு வந்துவிட்டோம். இவனும், வெளிநாடு செல்வதற்கானஏற்பாட்டில்இருந்தான். மதுரையில் மருத்துவப் பரிசோதனைக்குச் சென்றான். அங்குதான், அவனுக்கு எச்.ஐ.வி. இருப்பது தெரியவந்தது. உடனே, எங்களிடம் சொல்லாமல் சிவகாசி மருத்துவமனைக்குச் சென்று தான் வழங்கிய குருதியில் எச்.ஐ.வி. இருக்கிறது என்று கூறியுள்ளான். 18 வயதுப்பையன். எந்தத்தவறும் செய்யாதவன். அவனுக்குஇந்த நோய் எப்படி வந்ததென்று தெரியவில்லை என்றார்.

# அத்திலாந்திக் பெருங்கடலை பீப்பாய் மூலம் கடக்கும் முதியவர்

பாரீஸ்.டிசெ.29



பிரான்ஸைச் சேர்ந்த 71வயது மதிக்கத்தக்க ஒருவர் அத்திலாந்திக் பெருங்கடலை ஓர் உருளை வடிவ பேரல் (பீப்பாய்) மூலம் கடக்கத் தொடங்கியுள்ளார். படகுகளில்பொருத்தப்படும் வெளியிணைப்பு இயந்திரங்கள் இல்லாமல், பெருங்கடலின் நீரோட்டங்களைப்பயன்படுத்திஇவர் இந்தகொள்கலன்மூலம்4ஆயிரத்து 500 கிலோ மீற்றர் தூரத்தைக் கடக்கப்போகிறார். பிரான்ஸைச் சேர்ந்த ஜீன்ஜாக்குவஸ் சவின் தனது இந்தப் பயணத்தை ஸ்பெய்னின் கேனரி தீவுகளில் ஒன்றான எல் ஹியர்ரோ தீவில் இருந்து ஆரம்பித்துள்ளார். அடுத்த மூன்று மாதங்களுக்குள் அவர்கரீபியன்தீவுகளை அடைவார் எனஎதிர்பார்க்கப்படுகிறது. இவர்தயாரித்துள்ளகொள்கலனுக்குள்உறங்குவதற்குத் தனி இடம் உள்ளது. சமையலறைமற்றும்பொருள்களைவைப்பதற்கும் இடம் ஒதுக்கப்பட்டுள்ளது. அத்திலாந்திக்கடலடியின்நீரோட்டங்கள் குறித்து கடலியலாளர்கள் அறிவதற்காக, இவர் தான் செல்லும் வழியில் குறிப்பான்களைப் போட்டுவிட்டுச் செல்வார் என்கிறார். இவர் இராணுவ பராசூட் வீரராகவும், விமானியாகவும் பணியாற்றியவர் என்பது குறிப்பிடத்தக்கது.



# ரொட்டி விலை உயர்வு


## சூடானில் தொடர்கிறது போராட்டம் 19 பேர் சாவு - பலர் காயம்

**கார்த்தூம்.டிசெ.29**
**மத்திய ஆபிரிக்க நாடான சூடானில் ரொட்டியின் விலை உயர்ந்துள்ளது. இந்த விலை உயர்வுக்கு எதிராக அந்த நாட்டு மக்கள் போராட்டத்தில் ஈடுபட்டனர். மக்களின் போராட்டத்தின்போது ஏற்பட்ட வன்முறைகளில் இதுவரை 19 பேர் சாவடைந்ததாகத் தகவல் வெளியாகி உள்ளது.**





அசீடா என்னும் கோதுமை ரொட்டி, கிச்ரா என்னும் சோள மாவு ரொட்டி, குராசா என்னும் மைதா மாவு ரொட்டி என்பன சூடானின் முதன்மை உணவுகள். அங்கு ரொட்டிஉற்பத்திக்கான அரச கொடுப்பனவுகள் நிறுத்தப்பட்டதால், ரொட்டிவிலைகடுமையாக உயர்ந்தது. இது அந்த நாட்டு மக்களிடையே கடும் கொந்தளிப்பை ஏற்படுத்தியது. ரொட்டி விலைஉயர்வுக்குஎதிர்ப்புத்தெரிவித்து சமூக ஆர்வலர்கள், எதிர்க்கட்சியினருடன் இணைந்து மக்கள் போராட்டம் நடத்தி வருகின்றனர். கடந்த 19ஆம் திகதிக்குப் பின்னர் ரொட்டி விலை உயர்வுக்கு எதிரான அவர்களின் போராட்டம் அதிகரித்தது. போராட்டக்காரர்கள் பல்வேறுபகுதிகளில்வீதிமறியலில்ஈடுபட்டு வருகின்றனர். அத்துடன், கடைகளைச் சூறையாடி அங்குள்ள பொருள்களைக் கொள்ளையடித்துச்செல்வதும்அதிகரித்துள்ளது. போராட்டக்காரர்களைஒடுக்குவதற்குக்கலவரத்தடுப்புப்பிரிவுப்பொலிஸார் கடும் நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளனர். இதனால்போராட்டக்காரர்களுக்கும் பொலிஸாருக்குமிடையே மோதல் ஏற்பட்டது. இதில் இதுவரை 19 பேர் சாவடைந்ததாக அந்த நாட்டுஅரசுஅறிவித்தது. சாவடைந்தவர்களில் 2 பேர் பாதுகாப்புப் படையினர், 17பேர் பொது மக்கள். பலர் காயமடைந்தனர். இந்தநிலையில்போராட்டக்காரர்களுக்கு ஆதரவாக பத்திரிகையாளர் சங்கமும்சூடானின்தலைநகர்கார்த்தூம் உள்ளிட்ட சில பகுதிகளில் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டது. தொடர்ந்து போராட்டத்தை அதிகப்படுத்த வேண்டும் என்றும், பொதுமக்கள்வீதிக்குவந்துபோராட வேண்டும் என்றும் சமூக ஆர்வலர்கள் மற்றும்எதிர்க்கட்சிகள்அழைப்புவிடுத்து வருகின்றன. அந்த நாட்டு அதிபர் ஓமர் அல் பஷீர் தலைமையிலான அரசை அகற்றும்வரை போராட்டத்தைத் தொடரவேண்டும் என்றும் அங்கு மக்களிடையே குரல்கள் எழுந்துள்ளன. இதனால் அங்கு அதிகளவு பொலிஸார் குவிக்கப்பட்டுள்ளன்ர்.




## அமெரிக்காவில் வீசிய பனிப்புயலால் வானூர்திச் சேவைகள் நிறுத்தம்

வோஷிங்டன்.டிசெ.29
அமெரிக்காவில் பனிப்புயல் வீசியதால் நூற்றுக்கணக்கான வானூர்திகள்பயணப்படாமல்நிறுத்திவைக்கப்பட்டன. இதனால் விடுமுறைக்காக வெளியூர் செல்வதற்குத் திட்டமிட்டிருந்த பயணிகள் சிரமத்துக்குள்ளாகினர். அமெரிக்காவில் தற்போது குளிர்காலம் என்பதால் பனியின் தாக்கம் அதிகமாக உள்ளது. வீதிகளில்பனிசூழ்ந்துகாணப்படுவதால்வாகனங்களைவீதியில் செலுத்த முடியாதுள்ளது. அதிக அளவில் பனி படர்ந்து வீதிகள் பல மூடப்பட்டுள்ளன. இந்த நிலையில் அவ்வப்போது பனிப்புயலும் வீசிவருகிறது. இதனால்மக்கள்வெளியேநடமாட முடியாதநிலை ஏற்பட்டுள்ளது. இந்த நிலையில் நேற்று மத்திய அமெரிக்காவின் பல்வேறு பகுதிகளில் கடுமையான பனிப்புயல் வீசியது. இதன் காரணமாக 800 வானூர்திகளின் பயணவழிகள் இடைநிறுத்தப்பட்டன. வடக்குடகோட்டாவில்உள்ளபார்கோவானூர்தி நிலையம் முழுமையாக மூடப்பட்டது.




## பள்ளிக் குழந்தைகளின் பாதுகாப்புக்காக சீனாவில் 'மைக்ரோசிப்' சீருடைகள்

பீஜிங்.டிசெ.29
சீனாவில்பாடசாலைக்குழந்தைகள் அணியும் சீருடையில்நுண்சில்லுப்பொருத்தப்பட்டுள்ளது. சீனாவின் தென் பகுதியிலுள்ள குயிஷூ மற்றும்குயான்ஸிமாகாணங்களில்படிக்கும்குழந்தைகளின் சீருடை அதி நவீன மயமாக்கப்பட்டுள்ளது. குழந்தைகள் அணியும் சீருடையில் நுண்சில்லுப் பொருத்தப்பட்டுள்ளது. குழந்தைகள் அணியும் சீருடையின் தோள்பகுதியில் இது வைத்துத் தைக்கப்பட்டது. குழந்தைகள் பள்ளியில்நுழைந்தவுடன் இவ்வாறு பொருத்தப்பட்டுள்ள நுண் சில்லு கள் அவர்களை ஒளிப்படம், காணொலிஎடுப்பதற்குஉதவி புரியும். மேலும்குழந்தைகள் காணாமல்போனாலோ அல்லது வகுப்பறையை விட்டு வெளியேறினாலோ வகுப்பறையில் அலாரம் அடிக்கும். இதன்மூலம்குழந்தைகளின் நடவடிக்கையைக் கண்காணிக்க முடியும். ஆசிரியர் பாடம் நடத்தும் போது குழந்தைகள் தூங்கினால் கூட அலாரம் அடிக்கும். இவை தவிர இதற்கென அலைபேசியில்உருவாக்கப்பட்டசெயலி மூலம் பெற்றோர் வீட்டில் இருந்தபடியே தங்களது குழந்தைகளின்நடவடிக்கையைக் கண்காணிக்க முடியும். இதற்குச் சீனாவில் பெரிய அளவில் வரவேற்பு கிடைத்துள்ளது.
கடந்த நவம்பர் மாதத்தில் இருந்து இந்த நடைமுறை பின்பற்றப்பட்டுவருகிறது.



## ஐஸ்லாந்தில் வீதி விபத்து சுற்றுலா சென்ற மூவர் சாவு

லண்டன்.டிசெ.29
ஐஸ்லாந்தில் மகிழுந்து ஒன்று விபத்துக்குள்ளானதில் பிரிட்டனைச் சேர்ந்த ஒரே குடும்பத்தைச் சேர்ந்த 3 பேர் சாவடைந்தனர். பிரிட்டனைச்சேர்ந்தஒரேகுடும்பத்தைச்சேர்ந்த7பேர், விடுமுறையைக் கொண்டாடுவதற்காக ஐஸ்லாந்து நாட்டுக்குச் சென்றனர். அங்கிருந்து மகிழுந்து ஒன்றில் சுற்றுலா நிமித்தம்அவர்கள்பயணம்மேற்கொண்டனர். பரந்தமணல் சமவெளியான ஸ்கெய்தரசந்தூரில் உள்ள குறுகிய பாலம் அமைந்துள்ள பகுதியில் சென்றபோது, அவர்கள் பயணித்த மகிழுந்துகட்டுப்பாட்டைஇழந்துவிபத்துக்குள்ளானது. இந்த விபத்தில் 2பெண்கள்மற்றும்ஒரு குழந்தை என 3 பேர் சாவடைந்தனர். நால்வர் பலத்த காயமடைந்தனர். உயிருக்கு ஆபத்தான நிலையில் மீட்கப்பட்ட அவர்கள், உலங்கு வானூர்தி மூலம் தலைநகர் ரேக்ஜாவிக்கில் உள்ள மருத்துவமனைக்குக் கொண்டு செல்லப்பட்டனர். அவர்களின் நிலை கவலைக்கிடமாக இருப்பதாகத் தகவல் வெளியாகி உள்ளது. வீதியில் ஈரப்பதம் அதிகமாக இருந்ததால் சறுக்கி விபத்து ஏற்பட்டிருக்கலாம்என ஐஸ்லாந்துப்பொலிஸார் தெரிவித்தனர்.



உண்மை - நேர்மை - அஞ்சாமை

உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

தலைமையகம்: 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்

செய்தி : 021 493 0000
விளம்பரம் : 021-493 1111
விநியோகம் : 021-493 2222, 021 - 492 7450

செய்தி : uthayanprint@gmail.com கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com

# நிரந்தர மீட்சிக்கான வழி வகை அவசியம்!

கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்டங்களில் வெள்ளத்தால் பாதிக்கப்பட்டவர்களின் எண்ணிக்கை லட்சத்தைத் தாண்டிவிட்டது. 3 ஆயிரம் மில்லியன் (300 கோடி) ரூபாய் இழப்பு ஏற்பட்டுள்ளது என்று மதிப்பிடப்பட்டுள்ளது.

பனையால் விழுந்தவனை மாடேறி மிதித்ததைப் போன்று, இன அழிப்புக் கொடும் போரின் பாதிப்பிலிருந்து இப்போதுதான் மெல்ல மெல்ல தலையை நிமிர்த்த முயற்சிக்கும் மக்களையே இயற்கையும் மீண்டும் மோசமாக வஞ்சித்துள்ளது.

இந்த மக்கள் போரில் எல்லாவற்றையுமே இழந்தவர்கள். மிஞ்சுவதற்கு எதுவும் அற்ற வகையில் அனைத்தையும் பறிகொடுத்துவிட்டு உயிரை மட்டுமே கையில் ஏந்தி வந்தவர்கள். ஏதுமற்ற சூனியத்திலிருந்தான் தமது வாழ்க்கையை மீளக்கட்டியெழுப்பினார்கள். பழைய நிலைக்கு முழுமையாக மீள்வதற்கிடையில் பட்ட காலிலேயே பட்டிருக்கின்றது.

வன்னியின் வருமானம் ஈட்டும் முக்கிய வழிகளான விவசாயம் மற்றும் கால்நடை வளர்ப்பு இரண்டுமே மோசமாகப் பாதிக்கப்பட்டுள்ளன. பாதிக்கப்பட்ட இரண்டு மாவட்டங்களும் ஏற்கனவே இலங்கையின் வறுமை மட்டத்தில் மிக உயரத்தில் இருப்பவை. வறுமை குடிகொள்வதாயின் வேலைவாய்ப்பின்மை இங்கு அதிகம் என்பதைச் சொல்லித்தான் தெரியவேண்டும் என்பதில்லை.

இப்போது ஏற்பட்டுள்ள வெள்ளம் இந்த நிலையை இன்னும் மோசமாக்கவே செய்யும். போரால் பாதிக்கப்பட்ட இந்த மாவட்டங்களை இயல்பு நிலைக்கு மீட்டு, மற்றைய மாவட்டங்களுடன் வருமானத்திலும் தொழில் வாய்ப்பிலும் சமநிலையை அடைவதற்கான சிறப்புத் திட்டம் எதுவும் கொழும்பு அரசினால் கடந்த காலங்களில் முன்வைக்கப்படவில்லை.

உடனடி உதவிகள், வீட்டுவசதிகள் எனகுறைந்தளவிலான உதவித் திட்டங்கள் கொழும்பு அரசினால் முன்னெடுக்கப்பட்டன என்பதை மறுப்பதற்கில்லை என்கிற போதும் போர் முடிந்து 10 ஆண்டுகளாகியும் அந்த மக்களின் வாழ்க்கைத் தரம் இலங்கையின் ஏனைய மக்களின் வாழ்க்கைத் தரத்திற்கு இணையானதாக மாறுவதற்கான சிறப்புக் கவனம் எதுவும் கொழும்பு அரசால் செலுத்தப்படவில்லை.

மகிந்த ராஜபக்சவின் ஆட்சிக் காலத்தில் அத்தகைய கோரிக்கைகள் வெளிப்படையாகவே எதிர்க்கப்பட்டன. மாவட்டத்தின் உட்கட்டுமானத்தைத் தரமுயர்த்தினால் போதுமானது என்கிற எண்ணத்துடன்கூடிய பெருந் திட்டங்கள் மட்டுமே அந்தக் காலப் பகுதியில் முன்னெடுக்கப்பட்டன. அத்தகைய வீதி அபிவிருத்தி மற்றும் அரசகட்டடங்களின் அபிவிருத்திகளால் மக்களின் வாழ்க்கைத்தரத்தை உயர்த்துவதற்கான வாய்ப்புகள் கிடைத்தன என்று சொல்ல முடியாது. இதனை அரச புள்ளி விவரங்களே சுட்டி நிற்கின்றன.

இந்த நிலையில் வெள்ளமும் அந்த மக்களைப் புரட்டிப் போட்டிருப்பது பெரும் துன்பியல் நிகழ்வு. வெள்ள இடருதவி என்கிற பெயரில் தற்காலிக உதவிகளின் மீது மட்டும் கவனம் செலுத்தப்படுவது இப்போதைக்கு அவசியமானாலும், இந்த மக்கள் தமது இயல்பு வாழ்வுக்குத் திரும்புவதற்கான சிறப்புத் திட்டங்கள் செயற்படுத்தப்படுவது மிக அவசியம்.

அரசியல் தலைவர்கள் உலங்குவானூர்திகளின் மூலம் காணும் வெள்ளப் பாதிப்பு மட்டுமே கணக்கில் எடுக்கப்படமுடியாதது என்பது புரிந்துகொள்ளப்பட வேண்டும். புற்றுநோய் போன்று ஏற்கனவே பரவியிருக்கும் பாதிப்பையும் சேர்த்துக் குணமாக்கும்போதுதான் கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்ட மக்கள் தமது இயல்பு வாழ்வுக்குத் திரும்ப முடியும் என்பதை தலைவர்கள் கவனத்தில் எடுத்து துரிதமாக அதற்கு வேண்டியவற்றைச் செய்ய வேண்டும்.

ஆட்சியில் இருக்கும் அரசுக்கு இருக்கக்கூடிய ஆகக் கூடுதல் காலமான ஒன்றரை ஆண்டுகளுக்குள்ளாவது அதனைச் செயற்படுத்துவதற்கான திட்டங்கள் மிக அவசியம் என்பதையும் கவனத்தில் கொள்ளவேண்டும்.




# தீர்மானிப்பவர் நீங்களானால் தீர்க்கமுடன் செயற்படுங்கள்!

அன்ரனி பீற்றர்

இலங்கையின் அரசியல் வரலாற்றுப் பார்வையிலே கடந்த காலங்களை எடுத்துநோக்கின், பெரும்பான்மை என்ற 'மாயை' சிறுபான்மையினரை ஆட்டிப்படைக்கும் செயற்பாடுகளே அரசியலில் இருந்து வருகின்றது. இன்றும் அது இல்லையென்று சொல்வதற்கில்லை. தமிழரை வசப்படுத்தி, வாக்குறுதிகளை வழங்கி, ஏமாற்றி, அடிமைப்படுத்தி தமது ஆட்சிக்காலங்களை நிறைவு செய்த அரசுகளையே நாம் காண்கிறோம்.

எதிரணியில் இருந்துகொண்டு எதையும் செய்யத் தீராணியற்றவர்களாகவே பெரும்பான்மையினர் தமிழ் அரசியல்வாதிகளைக் கணித்து வைத்திருக்கிறார்கள். முன்னாள் தலைமை அமைச்சர் பண்டாரநாயக்க காலம்தொட்டு முன்னாள் அரச தலைவர் மகிந்த ராஜபக்ச காலம் வரை, இந்தக் கணிப்பு நடைமுறையில் இருந்து வந்தது. எல்லாவற்றுக்கும் ஒரு எல்லையுண்டு. அதன்பின்னே மாற்றங்கள் நிகழ்ந்தே தீரும்.

**காலமாற்றத்தின் விளைவு!**

2015ஆம் ஆண்டு மாற்றமுடியாது என்று கருதப்பட்ட, தமிழர் உரிமைப் போராட்டத்தை முடிவுறுத்திய அரசு என்று புகழப்பட்ட முன்னாள் அரச தலைவர் மகிந்த ராஜபக்சவின் ஆட்சியை ஐ.தே.க.தலைமையில் தமிழ், முஸ்லிம், சிங்கள மக்கள் மற்றும் கட்சிகள் ஒன்றிணைந்து முடிவுக்குக் கொண்டுவந்தன.

பொதுவேட்பாளராக களமிறங்கிய மைத்திரிபால சிறிசேனவை அரச தலைவராக்கினர்.

தொடர்ந்து நாடாளுமன்றத் தேர்தலிலும் ஐக்கிய தேசியக் கட்சி வெற்றிபெற்று, சிறிலங்கா சுதந்திர முன்னணியும் இணைந்து நல்லாட்சி அரசு ஆட்சிக்கு வந்தது. இலங்கை அரசியல் வரலாற்றில் இரண்டாவது முறையாக, தமிழர் ஒருவர் எதிர்க்கட்சித் தலைவராக நியமனத்தைப் பெற்றுக்கொண்ட மாற்றம் நிகழ்ந்தது. தவிர, கடந்த ஒக்ரோபர் மாதம் 26ஆம் திகதிவரை நல்லாட்சி அரசு கட்டுக்கோப்பாகவே இயங்கி வந்தது.

ஆனாலும் இடம்பெற்ற 50 நாள் அரசியல் குழப்பங்கள் காரணமாக, "ஆட்சிமாற்றம், தலைமை அமைச்சராக மகிந்த ராஜபக்ச நியமனம், மகிந்த ராஜபக்ச தலைமையிலான அமைச்சரவை நியமனம், நாடாளுமன்றக் கலைப்பு, நீதிமன்றத் தடை உத்தரவுகள், நம்பிக்கையில்லாத் தீர்மானம், நம்பிக்கைத் தீர்மானம், நாடாளுமன்ற வன்முறைகள்" என எல்லாமும் நடந்தேறின. ஜனநாயகம் கேள்விக்கூறியானது.

வரலாற்றிலே அரச தலைவர் ஒருவரின் வேண்டத்தகாத செயற்பாடு நாடாளுமன்ற நடைமுறைகளில் இடர்பாடுகளை ஏற்படுத்தியதுடன், நாடாளுமன்ற நடைமுறைகளிலும் விரிசல்களை ஏற்படுத்தியது. ஆட்சி மாற்றத்தின் பின்பான நாடாளுமன்ற அமர்வுகள் அத்தனையும் கேலிக்கூத்தாக மாறியது. அரசியல் சூழ்ச்சியின் விளைவுகள் உச்சம் பெற்ற நிலையில் உயர்நீதிமன்றத் தீர்ப்புடன் இடைக்கால அரசு பதவி விலகியது. தற்போது மீண்டும் ஐக்கிய தேசிய முன்னணி சார்பில் தலைமை அமைச்சராக ரணில்விக்கிரமசிங்க ஆட்சிப் பொறுப்பேற்றுள்ளார்.


**வெற்றியின் இரகசியம்!**

ஜனநாயகத்துக்கு எதிரான இரு பெரும்பான்மைக் கட்சிகளிடையே ஏற்பட்ட முறுகல்நிலை இறுதியில் ஆட்சிமாற்றமாக பரிணமித்த போது மக்கள் செய்வதறியாது அந்தரித்தனர்.


இந்தவேளையிலே ஜே.வி.பி, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு மற்றும் ஏனைய ஐக்கிய தேசிய முன்னணியில் இணைந்திருந்த கட்சிகள் ஜனநாயக மீறலுக்கு எதிராகக் குரல்கொடுத்தன.

வரலாற்றிலே அரச தலைவர் ஒருவரின் வேண்டத்தகாத செயற்பாடு நாடாளுமன்ற நடைமுறைகளில் இடர்பாடுகளை ஏற்படுத்தியதுடன், நாடாளுமன்ற நடைமுறைகளிலும் விரிசல்களை ஏற்படுத்தியது. ஆட்சி மாற்றத்தின் பின்பான நாடாளுமன்ற அமர்வுகள் அத்தனையும் கேலிக்கூத்தாக மாறியது. அரசியல் சூழ்ச்சியின் விளைவுகள் உச்சம் பெற்ற நிலையில் உயர்நீதிமன்றத் தீர்ப்புடன் இடைக்கால அரசு பதவி விலகியது. தற்போது மீண்டும் ஐக்கிய தேசிய முன்னணி சார்பில் தலைமை அமைச்சராக ரணில்விக்கிரமசிங்க ஆட்சிப் பொறுப்பேற்றுள்ளார்.

**தேசியத் தலைவரின் வழிகாட்டலிலே அனைத்துத் தமிழ்க்கட்சிகளும் இணைந்து உருவகித்த கூட்டமைப்பு தமிழர்களின் குரல் என்பதில் எந்த ஐயப்பாடும் இருக்க முடியாது. கொள்கை முரண்பாடு என்றுகூறி ஒருசிலர் கூட்டமைப்பிலிருந்து பிரிந்து செயற்படுகிறார்கள். அவர்கள் மட்டில் அவர்கள் பிரிந்து செயற்படுவது சரியான செயற்பாடு எனக் காரணங்களை எடுத்துக்கூறினாலும், தமிழரின் ஒற்றுமையை உடைக்கும் அல்லது வலுவிழக்கச் செய்யும் செயலாகவே அது தென்படுகிறது.**



இதில் ஜனநாயக மீறலுக்கு எதிரான உச்சபட்ச எதிர்ப்புக் குரலை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு வெளிப்படுத்தியது. ஆட்சி மாற்றமுறை ஜனநாயக ரீதியில் இடம் பெறவில்லை! என்பதைச் சுட்டிக்காட்டி உயர்நீதிமன்றில் முதலில் வழக்குத் தாக்கல் செய்தது. அதுதவிர நாடாளுமன்றத்திலும் முன்னின்று ஜனநாயத்துக்கு எதிரான செயற்பாடுகளுக்கு எதிர்ப்பை வெளிக்காட்டியது. ஜனநாயகத்துக்கு ஆதரவான பெரும்பான்மையை நிரூபிக்கும் செயற்பாட்டிலும் வெற்றியைத் தீர்மானிக்கும் சக்தியாக தமிழ்க்கூட்டமைப்பே இருந்தது என்பது எல்லோரும் அறிந்த விடயமாகும்.



**வலையில் அகப்பட்ட யானையை சுண்டெலிதான் காப்பாற்றியுள்ளது!**

நல்லாட்சி அரசிலே இதுவரைகாலமும் எதிர்க்கட்சியாகச் செயற்பட்டு, நல்லாட்சி செயல்நிலை பெறுவதற்கு பலசந்தர்ப்பங்களில் ஆதரவுக்கரம் கொடுத்த தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு, பலவிதமான விமர்சனங்கள், வசைமாரிகள், கீழ்மைத்தனமான குற்றச்சாட்டுக்களுக்கு ஆளானது. எனினும் தமிழ்மக்களுக்குப் பாதகமில்லாத விமோசனம் தரக்கூடிய புதிய அரசியல் திருத்தம் ஒன்றை முன்னெடுப்பதிலே நம்பிக்கையீனங்கள் மத்தியில் நம்பிக்கையுடன் முன்னெடுத்த முன்மொழிவு அரசியல் திட்டவரைவு, நாடாளுமன்றில் முன்வைக்கப்பட இருந்த சூழலிலே, கூட இருந்து ஆலோசனைகள் அபிப்பிராயங்கள் வழங்கிய குழுவினராக ஆட்சிமாற்றத்துக்கு வித்திட்டார்கள். அரசியலமைப்புக்கு முரணான செயற்பாடுகள் அத்தனையும் தோற்கடிக்கப்பட்டன. இந்த வெற்றிகள் ஏற்படுவதற்கு தமிழ்க்கூட்டமைப்பினதும் தமிழ்சட்ட அறிஞர்களினதும் பங்களிப்பே முக்கிய காரணம் என்பதைப் பெரும்பான்மையினர் உணர்ந்துகொள்ளத் தலைப்பட்டுள்ளனர். பன்னாடுகள் கூட இதை அறிந்துகொண்டுள்ளன. காத்திரமான வெற்றிக்குக் காரணமாக இருந்த தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு ஐக்கிய தேசியக் கட்சி சார்ந்த தலைமைகளே நன்றி கூறியுள்ளார்கள். வலையில் அகப்பட்ட யானையை சுண்டெலி தான் காப்பாற்றியுள்ளது. இங்கு, மூலைக்கல் அகற்றப்பட்டால் அல்லது விலகினால் கட்டடம் ஆட்டம் காணும் என்பதும் தெளிவானதே.

**காற்றுள்ளபோதே தூற்றிக்கொள்ள வேண்டும்!**

தேசியத் தலைவரின் வழிகாட்டலிலே அனைத்துத் தமிழ்க்கட்சிகளும் இணைந்து உருவகித்த கூட்டமைப்பு தமிழர்களின் குரல் என்பதில் எந்த ஐயப்பாடும் இருக்க முடியாது. கொள்கை முரண்பாடு என்றுகூறி ஒருசிலர் கூட்டமைப்பிலிருந்து பிரிந்து செயற்படுகிறார்கள். அவர்கள் மட்டில் அவர்கள் பிரிந்து செயற்படுவது சரியான செயற்பாடு எனக் காரணங்களை எடுத்துக்கூறினாலும் தமிழரின் ஒற்றுமையை உடைக்கும் அல்லது வலுவிழக்கச் செய்யும் செயலாகவே அது தென்படுகிறது.

"ஒரு இடத்திலே நில்லாதவன் எந்த இடத்திலும் நில்லான்!" என்று அன்று சிறுபராயத்தில் எங்களைக் கற்பித்த ஆசிரியர் ஒருவர் குறிப்பிட்டதற்கான விளக்கத்தையும் தெளிவையும் இப்போது கண்டு கொள்ள முடிகிறது. "இருக்கும் இடத்தை விட்டு இல்லாத இடம்தேடி" என்ற சினிமாப்பாடல் வரிகள் முடிவில் "ஏதும் அறியாதவர்" என்று அமையும். மாற்றங்கள் வழியே சென்றால்தான் இலட்சியத்தை அடையலாம். காலத்தை நடைமுறைகளைக் கருத்தில் எடுத்து, எமது மக்களுக்கான நகர்வுகள் மேற்கொள்ளப்படும் பொழுது எமது மண்ணை, எமது கலாசாரத்தை, மொழியை, பண்பாட்டைச் சீர்குலைக்கும் முன்னெடுப்புக்களைக் கூட்டமைப்பினர் ஒருபோதும் விட்டுக் கொடுக்காமல் செயற்படவேண்டும். அரசோடு சேராவிட்டாலும் கூட்ட மைப்பின் ஆதரவு விலக்கிக் கொள்ளப்படும்போது நல்லாட்சி அரசைத் தொடரமுடியாது போகும். எனவே தமிழ்மக்கள் சார்ந்து பிரச்சினைகளை இடித்துரைத்து தீர்வுகளைப் பெறுவதற்கான சந்தர்ப்பம் கனிந்துள்ளது. கால இழுத்தடிப்புக்களுக்கு இடமளிக்காது, காற்றுள்ளபோதே தூற்றிக் கொள்ளும் கனகச்சிதமான செயற்பாடுகளே தமிழர்களுக்கு தேவையானது என்பதை உணர்ந்து இவர்கள் செயலாற்ற முன்வர வேண்டும். வாய் வார்த்தைகளில் மயங்கி ஏமாற்றமடையாது தீர்மானிப்பவர்களான நீங்கள் தீர்க்கமானசெயற்பாட்டுக்குமுன்வாருங்கள்.

**ஆளுக்கொரு பக்கம் சென்றால் தமிழர்களுக்கு இழுக்கு!**

இதுவரை மாறி மாறி ஆட்சிக்கு வந்த அரசுகளெல்லாம் தமிழ்மக்களை ஏமாற்றியே தப்பிப் பிழைத்துக்கொண்டன. தமிழர்களுக்கு உரித்தான அவிருத்திச் செயற்பாடுகளைத் தடைசெய்து வந்தன. காரணம் 'சுக்கான்' அவர்கள் கையிலேயே இருந்தது. தமது செல்வாக்கைப் பெற்றுக்கொள்ளும் நடைமுறைகளே இதுவரை பின்பற்றப்பட்டுவந்தன. இப்போது அந்தச் 'சுக்கான்' தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் கையில் அகப்பட்டுள்ளது. இனிவருங்காலங்களிலும் தமிழ்த் தரப்பின் ஆதரவு இல்லாமல் தனியாட்சி நடத்துவதென்பது கடினமான கைங்கரியம். எனவே ஆயுதத்தால் சாதிக்காததை காகிதத்தால் சாதிக்கலாம். மோதிச்சாதிக்க முடியாததை வாதிட்டுச் சாதிக்கலாம். தமிழர் ஆதரவு தேவையில்லை என்ற நிலை மாறி, தமிழர் ஆதரவே வெற்றியைத் தீர்மானிக்கும் என்ற நிலை மாற்றம் தமிழரின் திறமைக்கு எடுத்துக் காட்டாகும். அடம்பன் கொடியும் திரண்டால் மிடுக்கு! ஆளுக்கொரு பக்கம் சென்றால் தமிழர்களுக்கு இழுக்கு! மக்களை விலக்கி வாழ்ந்தால் அவர் விலை போவார். மக்களுக்காகவே வாழ்பவர் அவர்தம் மனக் கோவில்களில் இறையாய் நிலை பெறுவார்.

பண்டார வன்னியன் இருந்தால் காக்கை வன்னியனும் இருக்கவே செய்வான். கட்டப்பொம்மன் இருந்தால் எட்டப்பனும் இருக்கவே செய்வான். இதுவே தமிழர்களின் வரலாறு. எங்களுடைய திறமை மீது எங்களுக்கு நம்பிக்கை இருந்தால் எங்களை எவருமே வீழ்த்திவிட முடியாது. இது குடும்ப, சமூக, பொருளாதார மற்றும் அரசியல் சூழமைவுகளுக்கு ஏற்புடையது. சிறுவட்டத்துக்குள் நின்றுவிடாது பரந்துபட்டுச் சிந்திக்கவேண்டும். அறிஞர்கள், கல்விமான்கள், திறமையாளர்கள் இருந்தும் ஒன்றுபட்டுச் செயலாற்ற முடியாமல் பிரிந்துநின்று மல்லுக்கட்டுகின்றோம். இந்த நிலை மாற்றம் பெற வேண்டும். ஒன்றுபடும் காலமே உயர்வுக்கு வழியாகும். நாமக மாறி நமக்கொரு வழி சமைப்போம்.

## ஆசிரியருக்கான கடிதம்

# இளைஞர்களே! சலன புத்தி வேண்டாமே!

கட்டுக்கோப்புகளின் செழுமையில் திழைத்திருந்த,காத்திரம் செய்து சரித்திரமாய் மிளிர்ந்திருந்த தமிழ்ச் சமூகம் கதிகலங்கத் தொடங்கி வெகு நாள்கள் ஆகிவிட்டது.போரின் அழிவுகளில் இருந்து மீள்வதற்குள் திட்டமிட்ட போதையின் அழிவுகளுக்குள் அமிழ்ந்து திக்குமுக்காடி வருகிறோம். கட்டுப்பாட்டுடன் இருந்த சமூக விழுமியங்களின் எல்லைகளைக் கட்டுடைத்துவிட்ட துரித பாய்ச்சலாக, போதையின் விதைப்புகள் தமிழர் தாயகம் எங்கும் இன அழிப்பின் திணிப்பாக இடம் பெற்று வருகின்றன.

குறிப்பாக இளைய தலைமுறையினரை நோக்கி சத்தமற்று திட்டமிட்டு போதை தணிக்கையின்றி ஊட்டம் செய்யப்படுகின்றது. அதிலும் மதுப்பாவனை என்பது சட்டரீதியான அனுமதியுடனும், போதைவஸ்துக்கள் சட்டரீதியற்ற எல்லை கடந்த செறிவூட்டமாகவும் அழிவுநிலைகளை நிலைபெறச் செய்கின்றன.

அண்மையில் வட்டுக்கோட்டைப் பிரதேசத்தில் 85 கிராம் ஐஸ் போதைப் பொருளை உடைமையில் வைத்திருந்தார் என்ற குற்றச்சாட்டில் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார். யாழ்ப்பாணத்தில் முதன் முறையாக இந்தப் போதைப் பொருளுடன் ஒருவர் கைதுசெய்யப்பட்ட சம்பவமாக இது பதிவாகியுள்ளது. நாளிதழ்களில் அன்றாடம் இது போன்ற செய்திகளைக் காணமுடிகிறது. இதேபோன்று அறிந்தும் அறியாமலும் பலதரப்பட்ட சமூகச் சீர்கேடுகள் தமிழர் தாயகம் எங்கும் இடம்பெற்றுவருகின்றன. முக்கியமாக தமிழர் பிராந்தியங்கள் அரசின் பொருளாதாரமீட்டல் என்ற மறைமுகப் போர்வையினுள் அகப்பட்டு உருக்குலைந்து வருவதை அவதானிக்க முடிகிறது. இது குறித்து எவரும் கவலை கொள்வதாகத் தெரியவில்லை. அரச அதிகாரிகள் தூக்கக் கலக்கத்தோடே பணியாற்றி வருகின்றனர். சமூக ஆர்வலர்கள் வாய்மூடி மௌனம் காத்துவருகின்றனர். இந்த அடிமைத்தனங்களில் இருந்து மீண்டு வருவதற்கான வழி எது? உண்மையில் பணத்தால் பயனில்லை, ஒழுக்கம் ஒன்றுதான் துளைக்க முடியாத சுவர்களையெல்லாம் துளைத்து நம்மை முன்னேறச் செய்கிறது என்ற உன்னதமான சிந்தனையை இளைஞர்கள் பெற வேண்டும். சமுதாயத்தில் கொடுமைகளை அகற்ற வேண்டும். சமுதாயத்தில் கொடுமைகள் வேண்டாம் என்ற உணர்வை ஒவ்வொருவரும் பெறாதவரை எமக்கு விடிவில்லை.


***க.பாலச்சந்திரன், மானிப்பாய்***

## வாசகர்களே!

ஆசிரியருக்கான கடிதம் பகுதிக்கு வந்துசேர்கின்ற பல கடிதங்கள் எழுதுபவரின் சுயவிவரங்கள் இல்லாத காரணத்தால் பிரசுரிக்க முடியாத நிலையில் இருக்கின்றன. ஆகையால் தாங்கள் ஆசிரியருக்கு எழுதுகின்ற கடிதத்தில் உங்களுடைய பெயர், முகவரி, தொலைபேசி இலக்கம், மின்னஞ்சல் பயன்படுத்துபவராக இருந்தால் மின்னஞ்சல் முகவரி போன்றனவற்றைத் தவறாது குறிப்பிட்டு அனுப்பி வைக்கும்படி கேட்டுக்கொள்ளப்படுகி றீர்கள். தங்களின் பெயர் விவரங்களை வெளிப்படுத்த வேண்டாம் என்றால் அது குறித்துக் குறிப்பிடுங்கள். மேற்குறித்த விடயங்கள் இணைக்கப்படாத கடிதம் பிரசுரிக்கப்ப டாது என்பதைக் கவனத்தில் கொள்க! எழுதுகின்ற விடயத்தை உறுதிப்படுத்தும் வகையிலான ஆவணங்கள் ஏதும் இருந்தால் அவற்றை இணைத்து அனுப்புவதும் சிறந்தது.

# புதிய பாதை வகுப்போம்





ஒரு காட்டில் நரி ஒன்று பசியால் உணவு தேடி அலைந்தது. எங்கு தேடியும் உணவு கிடைக்கவில்லை. பசியும் தாகமும் நரியை வாட்டின. நரி அங்கும் இங்கும் அலைந்தது. கடைசியாக ஒரு திராட்சைப் பழங்கள் குலை குலையாகப் பந்தலில் தொங்கின.

நரி அண்ணாந்து பார்த்தது. ஆர்வத்துடன் பழங்களைப் பறிப்பதற்கு முயற்சி செய்தது. பழங்கள் எட்டவில்லை. எட்டி எட்டிப் பார்த்தது. எட்டவில்லை. நரியும் விடவில்லை. வேகமாக ஓடிவந்து துள்ளிப் பாய்ந்தது. அப்போது பழங்களுக்குக் கிட்டவாகத்தான் செல்ல முடிந்ததேயன்றி குலைகளைப் பறிக்க முடியவில்லை.

நரி மனம் தளர்ந்தது. பசி ஒருபுறம் நரியை வாட்டியது. துக்கத்துடன் நடந்துவரும் நரியை அவ்வழியே வந்த மான் கண்டது. "என்ன நரியாரே கவலையுடன் வருகிறீர்கள். என்ன நடந்தது" என்று கேட்டது மான். "அதோ பார் அந்தப் பந்தலில் எவ்வளவு திராட்சைப்பழங்கள் இருக்கின்றன. ஆனால் என்னால் பறித்துச் சாப்பிட முடியவில்லையே" என்று நரி கூறியது. ஏன் பறிக்க முடியவில்லை என்று மான் கேட்டது. "எட்டி எட்டிப் பார்த்தேன் துள்ளித் துள்ளிப் பார்த்தேன் சிறிய தூரத்திலிருந்தும் ஓடி வந்து பார்த்தேன். ஆனால் பழங்கள் எட்டவேயில்லை. சீ... சீ... இந்தப் பழம் புளிக்கும் என்று வந்துவிட்டேன்" என்று சோகமாகக் கூறியது நரி. "என்ன நரியாரே உங்களுக்குக் கிடைக்கவில்லை என்பதற்காக திராட்சைப்பழம் புளிக்குமா? என்ன உங்கள் மூதாதையார் போல் உடனே எட்டாத பழம் புளிக்கும் என்ற முடிவுக்கு வந்து விட்டீர்கள். நீங்கள் வேறு முயற்சிகள் செய்து பார்த்திருக்கலாமே" என்றது மான்.

"வேறு என்னதான் செய்வது" ஒன்றும் புரியாது கேட்டது நரி. சுற்றும் முற்றும் பார்த்த மான் "அதோ பாருங்கள் நரியாரே வெட்டிப் போட்ட ஒரு மரக்குற்றி. அதை எடுத்து வந்து அதில் ஏறி முயற்சி செய்து பாருங்கள் என்றது.

மான் சுட்டிக்காட்டிய இடத்தில் ஒரு மரக்குற்றி இருந்தது. தனக்கு இந்த யோசனை முன்பு வரவில்லையே என்று நரி நினைத்தது. "மானாரே நல்ல யோசனை என்று



சொன்னீர்கள் மிகவும் நன்றி" என்றது நரி. "சரிநான் அவசரமாகப் போகவேண்டும் வருகிறேன்" என்று கூறி மான் போய்விட்டது.

நரி மரக்குற்றியைப் பந்தலுக்கு அருகில் கொண்டு வந்து அதன் மீது ஏறியது. ஆஹா... என்ன மகிழ்ச்சி. நரியின் கையில் குலைகுலையாக இனிப்பான திராட்சைப் பழங்கள். நரி நன்றியுடன் மானை நினைத்துக் கொண்டது. நரியின் பசியும் தாகமும் தீர்ந்தன. அது மிகவும் மகிழ்ச்சியுடன் காட்டுக்குச் சென்றது.

**நீதி: தொடர்ச்சியான முயற்சி பயன் தரும்.**

# நற்பண்புகளை வளர்ப்போம்

- நற்பண்புகளே நல்லவர்களின் அடையாளம். நூல்களை வாசிப்பதன் மூலமாகவும் சிறுவயதிலிருந்தே பழகிக் கொள்வதாலும் நற்பண்புள்ளவர்களின் நடத்தைகளைக் கவனிப்பதாலும் நற்பண்புகளை வளர்த்துக்கொள்ளலாம்.
- எந்தப் பொருளையும் அதற்குரிய இடத்தில் வைக்கும் பழக்கத்தை வளர்த்துக்கொள்வதால் இருட்டிலும் கூட அந்தப் பொருளை சிரமமின்றி எடுக்க முடியும். பொருள்களை வேறெங்கோ வைத்துவிட்டு அவற்றைத் தேடுவதில் செலவிடப்படும் நேரத்தை இதனால் மீதப்படுத்திக் கொள்ளமுடிகிறது.
- வகுப்பறையிலோ, நூலகத்திலோ அல்லது முக்கியமான விடயமாக ஒருவருடன் பேசிக் கொண்டிருக்கும்போதோ தும்முவதும் கொட்டாவி விடுவதும் கண்ணியமற்ற செயல்கள். அப்படி அடக்கமுடியாமல் கொட்டாவியோ தும்மலோ வருமாயின் மற்றவர்களுக்கு இடைஞ்சல் இல்லாமல் கைக்குட்டையால் முகத்தை மறைத்துக் கொள்ளவேண்டும்.
- எப்போதும் ஒருவர் பேசிக்கொண்டிருக்கும் போது அவர் பேசிய விடயத்தைமுடிக்கும் முன் நாம் இடையே புகுந்து பேசக்கூடாது. தொடர்ச்சியாக நாம் பேசிக்கொண்டிருக்கவும் கூடாது. எம்முடன் பேசுபவரின் கருத்துக்களையும் நாம் நிதானமாகக் கேட்டபின் பேச வேண்டும்.
- இருவர் பேசிக் கொண்டிருக்கையில் மூன்றாம் நபராக நாம் இடையே புகுந்து பேசக்கூடாது. அப்படி அவசரமாகப் பேச வேண்டுமாயின் இருவரிடமும் மன்னித்து விடுங்கள் என்று கூறி விட்டு அவர்கள் அனுமதித்தால் மட்டும் பேசவேண்டும்.
- எம்மிடம் நெருங்கிப் பழகியவர்களாக இருந்தாலும் பெரியவர்களிடம் பேசும்போது மரியாதைக் குறைவாகப் பேசக்கூடாது. அதிக உரிமை எடுத்துக்கொள்ளாமல் அவர்களை மிகவும் மரியாதையாக நடத்த வேண்டும்.
- ஒருவரது கருத்துக்களைச் சுட்டிக்காட்டி அவர்களுக்குப் பின்னால் புறங்கூறக்கூடாது. பிறரைப்பற்றி இன்னொருவரிடம் குறைகூறுவதோ அல்லது அவரைப்பற்றிய அந்தரங்க விடயங்களையோ தெரிந்துகொள்ள முயற்சிக்கக்கூடாது.



- புகைப்பிடித்தல், மது அருந்துதல், போதைப் பொருள்களை உட்கொள்ளுதல் இவை ஒருவருடைய உடல். உள ஆரோக்கியத்தைக் குலைத்து விடுகிறது. இவற்றை முற்றிலுமாகத் தவிர்த்துவிட வேண்டும்.
- எண்ணங்களே ஒருவரை உருவாக்குகின்றன. ஆதலால் காலத்தால் போற்றப்படுகின்ற நல்ல பெரிய மனிதர்களின் வாழ்க்கை முறைகளையும், போதனைகளையும், செயல்களையும், உயர்ந்த எண்ணங்களையும் முதலில் தெரிந்து கொள்வது எம்மிடையே நம்பிக்கையையும், ஊக்கத்தையும் அவை சிறந்த முறையில் வளர்த்து விடுகின்றன.


# மிகச்சிறிய நகரம்

உலகின் மிகச்சிறிய நகரம் பாப்பரசரின் ஆட்சியின் கீழ் உள்ள வத்திக்கான் நகரம்.

இதன் பரப்பளவு 0.17சதுர மைல்களாகும். வத்திக்கான் நகரத்துக்கென்று தனியான கொடி, தபால் நிலையம் , தொடருந்து நிலையம், தொலைபேசி நிர்வாகம், வானொலி நிலையம் ஆகியன இருக்கின்றன. தனியான நாணயங்களும செலாவணியில் உள்ளன.

வத்திக்கான் நகரிலுள்ள மாளிகையில் பாப்பரசர் வசிக்கின்றார். மாளிகையைச் சுற்றி அழகான தோட்டங்கள், தேவாலயங்கள், அருங்கலைக் காட்சியகங்கள், நூல் நிலையங்கள் ஆகியவை உள்ளன. வத்திக்கான் நூல் நிலையம் உலகப் பெரும் நூலகங்களில் ஒன்றாகும்.





# விருந்தை மறந்த விஞ்ஞானி

ஒரு கிறிஸ்மஸ் தினத்தில் குறைப் பிரசவத்தில் பிறந்து கையும் காலும் சூம்பிய நோஞ்சானாக அருவருப்பான தோற்றத்தோடு வளர்ந்துவந்த அந்தச் சிறுவன் பிற்காலத்தில் அறிவியலின் தந்தை என அழைக்கப்பட்டான்.

இவர்தான் புவியீர்ப்பு விசையைக் கண்டுபிடித்த ஐசக் நியூட்டன். இரண்டு வயதிலேயே தந்தையை இழந்தார். தாயார் மறுமணம் செய்துகொண்டதால் பத்து வருடங்கள் பாட்டியுடன் வளர்ந்து பின்னர் தாய்வீடு சென்று பள்ளிப் படிப்பை முடித்துப் பட்டமும் பெற்றார். பின்பு அதே பல்கைலக்கழகத்தில் கணிதப் பேராசிரியராகப் பணி செய்யும் வாய்ப்பைப் பெற்றார். எப்போதும் ஆராய்ச்சி நோக்குடனேயே இருந்த அவர்தான் ஒரு மரத்திலிருந்து பழம் கீழே விழுவதைக் கண்டு தீவிர ஆராய்ச்சிசெய்து புவியீர்ப்பைப் கண்டறிந்து உலகப் புகழ்பெற்ற மேதையானார்.

மேலும் தொலைநோக்கி தயாரிப்பு மற்றும் புவியீர்ப்பு விதிகள் உருவாக்கம் மூலம் முப்பது வயதுக்குள்ளேயே பெயரும் புகழும் பெற்றார். நியூட்டன் சுறுசுறுப்பாக உழைக்கக்கூடியவர். ஒவ்வொருநாளும் பத்துமணி நேரத்துக்குக் குறையாமல் உழைத்துவந்த அவர் ஆராய்ச்சிப் பணியில் மூழ்கிவிட்டார். உலகத்தையே மறந்துவிடக் கூடியவர். ஒருமுறை நியூட்டன் தன் நண்பர்களுக்கு விருந்து ஒன்றை அளித்தார். நிறைய நண்பர்கள் வந்திருக்க வேலைக்காரர்கள் சிலர் பரிமாறிக்கொண்டிருந்தனர். விருந்தினர்களுக்குத் திராட்சைப் பழரசம் பரிமாறப்பட்டதைக்கண்ட நியூட்டன் தானே அதனை எடுத்துவரச் சென்றார். சமையலறைக்கு விரைந்தவருக்கு அதுவரை தீர்வு காணப்படாதிருந்த ஓர் அறிவியல் பிரச்சினைக்குரிய தீர்வுகாணும் முறை நினைவுக்கு வந்து. நண்பர்களையும் திராட்சை ரசம் எடுக்க வந்த பணியையும் மறந்தார். தனது ஆய்வுகூடம் சென்று கதவைமூடி ஆராய்ச்சியில் மூழ்கிவிட்டார். நடந்த விடயங்கள் நண்பர்களுக்குத் தெரியவர அவர் செயலைத் தப்பாக எண்ணாமல் மகிழ்ச்சியுடன் விருந்து முடித்துச் சென்றனர்.

# மானிப்பாயில்... ஹொண்டா காட்சியறையில்
# நஞ்சிற் மோட்டோர்ஸ்
# (RRSC MOTORS)

HONDA

ஹொண்டா மோட்டார் சைக்கிளினைக் கொள்வனவு செய்து
பண்டிகைக்கால சிறப்பு சலுகைகளைப் பெற்றிடுங்கள்

எம்மிடம்
குறைந்த ஆவணங்களுடன்
லீசிங்செய்யும் வசதி

எம்மிடம்
விசேட சலுகைகள்

அனைத்து வகையான
பழைய மோட்டார்
சைக்கிள்களைக் கொடுத்து
புதிய ஹொண்டா மோட்டார் சைக்கிள்களைப்
பெற்றிடும் வசதி

**முழுப் பணம் மூலமாக** Special OFFER

- ✓ சிறப்புப் பரிசில்
- ✓ காப்புறுதி (மூன்றாம் நபர்)
- ✓ யக்கெட்
- ✓ இலவச சேவைகள்
- ✓ இரண்டு வருட உத்தரவாதம்

**லீசிங் மூலமாக** Special OFFER

- ✓ சிறப்புப் பரிசில்
- ✓ பதிவுக் கட்டணம்
- ✓ காப்புறுதி
- ✓ தலைக்கவசம்
- ✓ யக்கெட்
- ✓ இலவச சேவைகள்
- ✓ இரண்டு வருட உத்தரவாதம்

நிபந்தனைக்குட்பட்டது

**எமது சேவைகள்**




rrscmanipay@gmail.com
Honda Ranjit

நஞ்சிற் மோட்டோர்ஸ்
(RRSC Motors)
இல.311/A. யாழ் வீதி, மானிப்பாய்.
(சுதுமலைச்சந்தி அருகாமை)

T.P: 021 492 7627 | 021 225 5228
077 310 7549 | 076 833 9898


# UNIVERSITY OF JAFFNA, SRI LANKA
# UNIT OF ALLIED HEALTH SCIENCES, FACULTY OF MEDICINE

## WALK-IN INTERVIEW

Walk –in Interview for the post of Temporary Demonstrator will be held on 04.01.2019 at 11.00 a.m at the Board room of the Faculty of Medicine, University of Jaffna.

Temporary Demonstrator
in
Nursing/Pharmacy/Medical Laboratory Sciences

**Qualifications:-**
A Degree in the relevant subject.

**Note-** Candidates who are awaiting for the results of the final examinations are expected to attend the interview.

SALARY SCALE –Rs.33,100/=p.m (fixed)

In addition to the above salary, the allowances approved by University Grants Commission will also be paid.


Candidates are requested to appear with relevant certificates, National Identity Card and <u>self-prepared applications.</u>

**Registrar,**
**University of Jaffna.**
**26.12.2018**
(IN 8883) (14.17)

# மரண அறிவித்தல்

## ஐயாத்துரை செளந்தரராசா

(ஓய்வுபெற்ற உப தபாலதிபர், சிவன்கோயிலடி, கிறீன் விஸ்வ நிறுவனத்தின் ஸ்தாபகரும் தலைவரும், வட்டுக்கோட்டை அபிவிருத்தி நிறுவனத்தின் செயலாளரும்)



தோற்றம் 09.01.1944 மறைவு 26.12.2018

வட்டுக்கோட்டை சிவன் கோயிலடியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட ஐயாத்துரை செளந்தரராசா 26.12.2018 புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான ஐயாத்துரை - மீனாட்சியம்மா தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்ற அப்பா முதலியின் பூட்டனும், காலஞ்சென்றவர்களான கந்தையா, தம்பு ஆகியோரின் பேரனும், இராசவைத்தியர் அ.க.குமாரசாமியின் சகோதரர் வைத்திய கலாநிதி அ.க. காசிப்பிள்ளை - குணபூசணம் தம்பதியரின் மருமகனும், மைத்திரேஜி (உப தபால் அதிபர், சிவன்கோயிலடி), அவர்களின் அன்புக் கணவரும், ஜனந்தன், சிவதனுசன், திவ்யா ஆகியோரின் பாசமிகு தந்தையும், காலஞ்சென்றவர்களான தியாகேஸ்வரியம்மா, மணிவாசகம்பிள்ளை மற்றும் மகேஸ்வரியம்மா ஆகியோரின் அன்பு சகோதரனும், சங்கமித்திரா, கா.சுமந்திரன், நளாயினி, வாசுகி, சுலபை, காலஞ்சென்ற சிவப்பிரகாசம் மற்றும் குணபாக்கியலக்ஷிமி, பண்டரி நாதன் ஆகியோரின் மைத்துனரும் ரவிச்சந்த்திரன் (வலயக் கல்வி பணிப்பாளர் - துணுக்காய்), சிவதாரணி, ஞானச்சந்திரன் (பிரான்ஸ்), சர்பநடராசன் (பிரானஸ்) ஆகியோரின் சகலனும், தயாளினி, காலஞ்சென்றவர்களான குகதாசன், வரதராஜன் மற்றும் கிரிஜா, சிவச்சந்திரன், சுவேந்திரன் ஆகியோரின் சிறிய தந்தையும், அபிநயா, சிவப்பிரியா, கிருஷிகா, அனோஜன், மைதிலி, விசாலினி, சுதநடேஷ், சுவேதினி, ராகுல் ஆகியோரின் பெரிய தந்தையும், விஜயலக்சுமி, சிவலக்சுமி, சிவகுமரன், சக்திதாசன் ஆகியோரின் அன்பு மாமனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (30.12.2018) ஞாயிற்றுக்கிழமை காலை 8.00 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக வழுக்கையாறு இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**சிவன் கோயிலடி,**
**வட்டுமேற்கு, வட்டுக்கோட்டை.**

தகவல்:
**குடும்பத்தினர்.**

**076 619 5280, 077 7709547, 077 123 3173**
(cs14355)(13.17)

# சாவகச்சேரிநகராட்சிமன்றம்
## 2019 ஆம் ஆண்டுக்கான ஆதனவரி அறிவித்தல்

◆ நகரசபைகள் கட்டளைச்சட்டத்தின் 255 ஆம் அத்தியாயத்தின் கீழ் உரிமையளிக்கப்பட்டுள்ள அதிகாரங்கள் சார்பில் பின் வருமாறு முடிவு செய்திருப்பதாக இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

01. கட்டளைச் சட்டத்தின் 160(3) ஆம் பிரிவின் நியதிப்படி சாவகச்சேரி நகராட்சிமன்றத்தின் பரிபாலன எல்லைக்குட்பட்டு அமைந்திருக்கும் நெற்காணிகள் தவிர்ந்த சகலஅசையாச் செத்துக்களிலிருந்தும் வருடாந்தப் பெறுமதியின் 10% மான வரியொன்றினை 2019 ஆம் ஆண்டு முறையே மார்ச் 31. யூன்30. செப்ரெம்பர் 30. டிசம்பர் 31 ஆகிய திகதிகளிலோ அல்லது அதற்கு முன்போ நான்கு கந்தாய தவணைகள் மூலம் செலுத்தப்படவேண்டும்.


02. 2019 ஆம் ஆண்டு ஜனவரிமாதம் 31 ஆம் நாளில் அல்லது அதற்குமுன் னர் வருடாந்த விகிதங்கள் முழுமையாகச் செலுத் தப்பட்டால் 10% கழிவு அனுமதிக்கப்படும் என்பதுடன் விகித வருமதியாகவுள்ள அக் கந்தாயத்திற்குரிய முதல் மாதத்திற்குள்ளாக கந்தாய விகிதம் செலுத்தப்பட்டால் 5% கழிவும் அனுமதிக்கப்படும்.

03. மேற்சொல்லப்பட்டபந்தி–1 இன் பிரகாரம் சொல்லப்பட்ட காலங்களில் விகிதங்கள் செலுத்தப்படாதவிடத்து வெற்றுக்காணிகள், வதிவிடங்கள் மீது 15%உம் மற்றும் ஏனைய இடங்கள் மீது 20%உம் விறாந்துக் கட்டணம் அறவிடப்படும்.

04. ஆதனவரிசார்பாக சகல ஆட்சேபனைகளும் ஒவ்வொரு ஆதனத் திற்கும் தனித்தனியாக 31.01.2019 ஆம் திகதிக்கு முன்னர் எழுத்து மூலம் இவ் அலுவலகத்தில் சமர்ப்பிக்கும்படி அன்புடன் வேண்டப்படுகின்றீர்கள்.

**கா.சண்முகதாசன்**
**செயலாளர்**
**நகராட்சிமன்றம் சாவகச்சேரி.**
**29.12.2018**
(in.8882) 913.17)

## மரணஅறிவித்தல்



### துரைச்சாமி ரவிச்சந்திரன் (சுவிஸ்)

கோண்டாவிலைப் பிறப்பிடமாகவும் சுவிஸை வசிப்பிடமாகவும் கொண்ட துரைச்சாமி ரவிச்சந்திரன் 26.12.2018 புதன்கிழமை சுவிஸில் காலமானார்.

அன்னார் கோண்டாவிலைச் சேர்ந்த துரைச்சாமி நாகேஸ்வரி தம்பதிகளின் அன்பு மகனும் திருநெல்வேலியைச் சேர்ந்த சற்குணநாதன் காலஞ்சென்ற சிவயோகம் தம்பதிகளின் அன்பு மருமகனும் சசிதாவின் அன்புக் கணவரும் றொசான், நிரோஜன், ஆதித்தியா ஆகியோரின் அன்புத் தந்தையும் கமல்ராஜ், நிமல்ராஜ், திருமதி அருள்ராஜன், திருமதி பிரபாகரன், தனுஜா ஆகியோரின் மைத்துனரும் பாலச்சந்திரன், ஜெகதீஸ்வரி, விமலாதேவி ஆகியோரின் அன்புச் சகோதரனும் ஆவார்.


அன்னாரின் இறுதிக்கிரியைகள் சுவிஸில் நடைபெறும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**ஞானவைரவர் வீதி,**
**கோண்டாவில் கிழக்கு.**

**தகவல்: க.சற்குணநாதன்**
**கலாசாலை வீதி, 2ஆவது ஒழுங்கை,**
**திருநெல்வேலி.**

(CS 22141) (14,17)

## மரணஅறிவித்தல்



### சுப்பிரமணியம் சண்முகநாதன்

திருகோணமலையைப் பிறப்பிடமாகவும் நீதிமன்ற வீதி மல்லாகத்தை வசிப்பிடமாகவும் கொண்ட சுப்பிரமணியம் சண்முகநாதன் 27.12.2018 வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சுப்பிரமணியம் தங்கநாச்சியார் தம்பதிகளின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான சிவசம்பு செல்லம்மா தம்பதிகளின் மருமகனும் கனகமலரின் அன்புக் கணவரும் சறோ, மலர், விஜயா காலஞ்சென்றவர்களான பாக்கியராஜா, ராஜ ராஜேஸ்வரி, செகராஜசிங்கம், லோகன் ஆகியோரின் சகோதரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (30.12.2018) ஞாயிற்றுக்கிழமை காலை 8.30 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று முற்பகல் 10.00 மணியளவில் பூதவுடல் தகனக்கிரியைக்காக மல்லாகம் அளவெட்டி இந்துமயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**பிரதேச சபை ஒழுங்கை,**
**நீதிமன்ற வீதி, மல்லாகம்.**

(CS 22142) (14,17)

**தகவல்:**
**குடும்பத்தினர்.**

**021 300 8168**

### விற்பனைக்கு

ஜேர்மன் சப்பேட், பொமேரியன் 35 நாள் குட்டிகள் விற்பனைக்கு உண்டு.

**077 961 8191 - மிது (மல்லாகம்)**

(CS 22136) (14,17)

### மணமகள் தேவை

யாழ். இந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த பல்கலைக்கழக விரிவுரையாளர், 09.11.1988 இல் பிறந்த மணமகனுக்கு மணமகள் தேவை

**076 181 4473**

### பணிப்பெண் தேவை

யாழ். நகரிலுள்ள சிறிய குடும்பம் ஒன்றிற்கு வீட்டில் தங்கியிருந்து பணிபுரிவதற்கு பணிப்பெண் தேவை. **- 077 2626944**

### வேலையாள்கள் தேவை

**எமது வாகன சுத்திகரிப்பு நிலையத்துக்கு**

வேலையாள்கள் தேவைப்படுவதால் உடன் தொடர்புகொள்ளவும்

**077 776 3533**
இந்த இலக்கத்திற்கு உடன் அழைக்கவும்




# 357, Kasthuriyar Road, Jaffna.

## பகிரங்க மீன் ஏல அறிவித்தல் - 2019.
## வலிகாமம் தென்மேற்கு பிரதேச சபை, மானிப்பாய்.

வலிகாமம் தென்மேற்கு பிரதேச சபையின் அதிகார எல்லைக்குட்பட்ட, கீழ் குறிப்பிடப்படும் சந்தைகள், இறைச்சிக்கடைகள், துவிச்சக்கர வண்டிப் பாதுகாப்பு நிலையம் என்பவற்றை 2019.01.01ஆம் திகதி தொடக்கம் 2019.12.31ஆம் திகதி வரையான காலப்பகுதிக்கு குத்தகைக்கு வழங்குவதற்கான பகிரங்க ஏலம் கோரப்படுகின்றது.

இடம் : வலி தென்மேற்கு பிரதேச சபை, தலைமை அலுவலகம்
திகதி : 2018.12.31 திங்கட்கிழமை.
நேரம் : பி.ப 2.30 மணி

**2019 ஆம் ஆண்டிற்கான மீன் ஏல அட்டவணை**

| இல | விவரம் | மீளளிக்கப்படும் கேள்வி வைப்புப் பணம் | ஏற்றுக்கொள்ளக் கூடிய ஆகக் குறைந்த தொகை N.B.T தவிர | மாதாந்த வாடகை N.B.T தவிர |
|---|---|---|---|---|
| | **மானிப்பாய் பட்டின உபஅலுவலகம்** | | | |
| 1 | மானிப்பாய் பொதுச் சந்தை ஆட்டிறைச்சிக்கடை (புதிய கட்டிடத் தொகுதி) | 5,000.00 | 100,000.00 | 600.00 |
| 2 | மானிப்பாய் பொதுச் சந்தை கோழி இறைச்சிக்கடை (புதிய கட்டிடத் தொகுதி) | 10,000.00 | 400,000.00 | 600.00 |
| | **மானிப்பாய் கிராம உபஅலுவலகம்** | | | |
| 1 | காக்கைதீவுப் பொதுச் சந்தையும் துவிச்சக்கர வண்டிப் பாதுகாப்பு நிலையமும் | 15,000.00 | 1,152,000.00 | |
| 2 | காக்கைதீவுப் பழைய மீன் சந்தை கட்டிடம் (கடலுணவுகள் களஞ்சியப் படுத்துவதற்கு மாத்திரம்) | 1,500.00 | 25,000.00 | |
| 3 | நவாலி பிரசாத் சந்தை ஆட்டிறைச்சிக்கடை | 1,500.00 | 45,875.00 | 300.00 |
| 4 | சாவற்கட்டு சந்தை | 5,000.00 | 220,000.00 | |
| | **பண்டத்தரிப்பு பட்டின உபஅலுவலகம்** | | | |
| 1 | பண்டத்தரிப்பு பொதுச் சந்தை கோழி இறைச்சிக்கடை | 10,000.00 | 392,490.00 | 1,500.00 |
| | **பண்டத்தரிப்பு கிராம உபஅலுவலகம்** | | | |
| 1 | மாகியப்பிட்டி பொதுச் சந்தை | 5,000.00 | 193,500.00 | |
| 2 | மாகியப்பிட்டி சந்தை மாட்டிறைச்சிக்கடை | 1,500.00 | 301,000.00 | 250.00 |
| 3 | மாகியப்பிட்டி சந்தை கோழி இறைச்சிக்கடை | 5,000.00 | 135,990.00 | 250.00 |
| 4 | இளவாலை பொதுச் சந்தை மாட்டிறைச்சிக் கடை. | 5,000.00 | 639,990.00 | |
| 5 | இளவாலை பொதுச்சந்தை கோழி இறைச்சிக்கடை | 5,000.00 | 83,700.00 | |
| 6 | மாதகல் பொதுச்சந்தை கோழி இறைச்சிக்கடை | 1,500.00 | 67,959.00 | 250.00 |

நிபந்தனைகள்-

01. மேற்படி ஏலத்தில் பங்குபற்ற விரும்புவோர் மீளளிக்கப்படாத கேள்விப் படிவக் கட்டணத் தொகை ரூபா 102.00 (NBT 2 % உள்ளடங்கலாக) இனையும், மேலே அட்டவணையில் காட்டப்பட்டவாறு மீளளிக்கப்படும் கேள்வி வைப்புப் பணத்தினையும் எமது சபை தலைமை அலுவலகத்தில் 2018.12.31ஆம் திகதி பி.ப 2.30 மணிக்கு முன்பாக செலுத்தி மேற்படி ஏலத்தில் பங்கு கொள்ளலாம்.
02. சித்தியடையும் கேள்விதாரர் கேள்வித் தொகையின் 1/3 பகுதியை 2019.01.03 ஆம் திகதி 3.00 மணிக்கு முன்பாகச் செலுத்தி சபையுடன் ஒப்பந்தம் ஒன்றினைச் செய்து கொள்ள வேண்டும்.
03. பிரதேச சபையின் மேலதிக நிபந்தனைகளுக்கு கட்டுப்படுதல் வேண்டும்.

திரு.அ.ஜெபநேசன்,
தவிசாளர்,
வலிகாமம் தென்மேற்கு பிரதேச சபை,
மானிப்பாய்

2018.12..29.

## ஆதன பெயர்மாற்றம் தொடர்பான அறிவித்தல்
## வலிகாமம் தெற்கு பிரதேச சபை
## உப அலுவலகம், உடுவில்.
## வட்டாரம்-04 சாமுவேல்மான் வீதி, ஆதன இல 220

வலிகாமம் தெற்கு பிரதேச சபையின் உடுவில் உப அலுவலகத்திற்குட்பட்ட வட்டாரம்-04 சாமுவேல்மான் வீதியில் 220 ஆம் இலக்க ஆதனமானது பிரதேசசபையின் ஆதனவரிப் பதிவேட்டில் . சின்னப்பிள்ளை உரிமை கோருபவர் சின்னத்தம்பி டில்லிமலர் என்னும் பெயரில் உள்ளது.

பிரசித்த நொத்தாரிசு தர்மலிங்கம் பிரதீபன் முகதாவில் வடமாகாணம் யாழ்ப்பாணம் மாவட்டம் வலிகாமம் தெற்கு பிரதேசசபை உடுவில் கோவிற்பற்று உடுவில் இறை, உடுவில் பிரதேசசெயலர் பிரிவு, J/187 கிராமசேவகர் பிரிவில் அமைந்துள்ள "பெந்திகோஸ்து வளவு" எனக்குறிப்பிடப்பட்டுள்ள நிலப்பரப்பு 8 இதில் வீடு கிணறு செய்பயிர் வான் பயிர்களும் உடைய நிலப்பரப்பு 6 குளி 15.94 ஆதனமானது 2017.09.17 ஆம் திகதிய 31 ஆம் இலக்க உறுதி மூலம் வல்லிபுரம் மகள் டில்லிமலர் என்பவரால் தில்லைநாயகம் தாமரைமணாளனிற்கு அறுதியாக விற்கப்பட்டுள்ளது.

மேலும் உத்தரவு பெற்ற நிலஅளவையாளர் S.பாலேந்திரன் அவர்களால் 2015.06.17 இல் அளந்து தயாரிக்கப்பட்ட 2015/01/95 ஆம் இலக்க வரைபடத்தில் துண்டு 01 எனக்குறிப்பிடப்பட்டுள்ள உடுவில் இறை "பெந்திகோஸ்து வளவு" நில.பர 6 குளி 15.94 உம் இதற்தெற்கெல்லைகளாக கிழக்கு மித்திரகிருஸ்ணன் இராசபாபதிக்குரிய ஆதனம் , வடக்கு அருளானந்தம் கிருஸ்ணவேணியின் ஆதனமும் மேற்கு மகேஸ்வரன் நாகேஸ்வரியின் ஆதனமும் தெற்கு பிரதான வீதியும் அமைந்துள்ளது.

இவ் ஆதனமானது பிரசித்த நொத்தரிசு கிருஸ்ணவேணி சந்திரலிங்கம் முகதாவில் 2011.04.06 ஆம் திகதிய 226 ஆம் இலக்க அறுதி உறுதி மூலம் வல்லிபுரம் மகள் டில்லிமலரால் கோவிந்தசாமி இரத்தினகுமார் பெண் துஸ்யந்திக்கு வழங்கப்பட்டு பின்னர் குறித்த நொத்தாரிசு முகதாவில் 2014.08.30 ஆம் திகதிய 1615 ஆம் இலக்க அறுதி உறுதி மூலம் கோவிந்தசாமி இரத்தினகுமார் பெண் துஸ்யந்தியால் வல்லிபுரம் மகள் டில்லிமலருக்கு வழங்கப்பட்டுள்ளது.

இவ்வாதனமானது 1978 ஆம் ஆண்டு பிரசித்த நொத்தாரிசு கந்தையாப் பிள்ளை சேனாதிராசா முகதாவில் நிறைவேற்றப்பட்ட நன்கொடை உறுதியால் சின்னப்பொடி வல்லிபுரம் பெண் இராசம்மா ஆகிய எனது பெற்றோரால் வல்லிபுரம் மகள் டில்லிமலராகிய தனக்கு வந்ததென்றும் அன்று தொட்டு இன்று வரை தனது ஆட்சியில் எதுவித தங்குதடையுமின்றி ஆண்டு அனுபவித்து வருகின்றேன் என்றும் இவ்வாதனத்தின் உறுதி நாட்டுப் போர் சூழ்நிலையின் போது தவறிவிட்டன என்றும் இதனால் குறித்த உறுதிகளின் பிரதிகளை காணிப்பதிவு அலுவலகத்தில் தேடிக் கண்டுபிடிக்க முடியவில்லை என்றும் வல்லிபுரம் மகள் டில்லிமலரால் பிரசித்த நொத்தாரிசு ஜெயரட்ணம் ஆரூரன் முகதாவில் 2010.09.11 ஆம் திகதிய 23 ஆம் இலக்க விளம்பல் உறுதி மூலம் வெளிப்படுத்தியுள்ளார்.

தற்போது மேற்குறித்த ஆதனத்தினை தில்லைநாயகம் தாமரைமணாளன் தனது பெயரில் பெயர்மாற்றம் செய்வதற்காக விண்ணப்பித்துள்ளார்.

எனவே இப்பெயர்மாற்றம் தொடர்பாக ஏதாவது ஆட்சேபனை தெரிவிப்பவர்கள் அல்லது உரிமை கோருபவர்கள் எவராவது இருந்தால் உரிய ஆவணங்களுடன் இன்றிலிருந்து 30 நாட்களுக்குள் எழுத்து மூலம் அறியத்தருமாறும் அவ்வாறு எவரும் ஆட்சேபனை தெரிவிக்கவோ உரிமைகோரவோ இல்லையெனின் குறித்த ஆதனமானது தில்லைநாயகம் தாமரைமணாளன் எனும் பெயரிற்கு பெயர்மாற்றம் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை அறியத்தருகின்றேன்.

மேலும் இப்பெயர் மாற்றத்தால் ஏற்படக்கூடிய எவ்விளைவுகளிற்கும் வலிகாமம் தெற்கு பிரதேச சபை பொறுப்பாளி அல்ல என்பதையும் தெரிவித்துக் கொள்கின்றேன்.

**க.தர்ஷன்.**
**தவிசாளர்,**
**வலிகாமம் தெற்கு பிரதேச சபை,**
**சுன்னாகம்.**

(CS 22146)(14,17)


# எமனாக நடிக்கும் யோகிபாபு



தமிழ் சினிமாவில் அனைவரையும் கவர்ந்த நகைச்சுவை நடிகராக மாறியிருக்கிறார் யோகி பாபு. அவர் தற்போது `தர்மபிரபு' என்கிற படத்தில் எமன் வேடத்தில் நடிக்கிறார். இந்தப் படத்தின் முதல் சுவரொட்டி வெளியாகி வரவேற்பை பெற்ற நிலையில், இந்தப் படத்தில் மற்றொரு முக்கிய பணியையும் யோகி பாபு மேற்கொள்கிறார். அதாவது முதன்முறையாக படத்தின் வசனங்களை யோகி பாபு எழுதுகிறார். விமல், வரலட்சுமி இணைந்து நடித்துள்ள `கன்னிராசி' படத்தை இயக்கிய முத்துகுமரன் இந்தப் படத்தை இயக்குகிறார்.

இந்தப்படம்தவிர்த்து `கூர்கா', `ஜாம்பி'உள்ளிட்டபடங்களிலும்யோகிபாபுநடித்து வருகிறார். அஜித்தின் `விஸ்வாசம்', சிம்பு நடிக்கும் `வந்தா ராஜாவாதான் வருவேன்', ஜீவாவின் `கொரில்லா' உள்ளிட்ட படங்கள் அடுத்தடுத்து வெளியாக உள்ளன. அட்லி இயக்கத்தில் விஜய் நடிக்கும் அடுத்த படத்திலும் யோகி பாபு ஒப்பந்தமாகியுள்ளார்.

என்னடா இது புதுசு புதுசா தண்டனையை யோசிக்கிறீங்க...😮😄😄



**'வயதுக்கான மரியாதை'** கிடைக்கிறதோ இல்லையோ **'வசதிக்கான மரியாதை'** நல்ல விதமாகவே கிடைக்கிறது

# இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?

**மேடம்:** முக்கிய பணி நிறைவேற தாமதம் ஆகலாம். நலம் விரும்புபவரின் ஆலோசனை நம்பிக்கை தரும். தொழில், வியாபாரம் செழிக்க சில மாற்றம் செய்வீர்கள்.

**இடபம்:** பணிகளில் அதிக கவனமுடன் செயல்படுவது நல்லது. தொழில், வியாபாரத்தில் வளர்ச்சி பெற புதிய வாய்ப்பு வரும். சராசரி பணவரவு கிடைக்கும்.

**மிதுனம்:** செயல்களில் நேர்த்தி நிறைந்திருக்கும். குடும்ப உறுப்பினர் பாராட்டி ஊக்கப்படுத்துவர். தொழில், வியாபார வளர்ச்சியில் திருப்திகர முன்னேற்றம் ஏற்படும்.

**கடகம்:** இடையூறு செய்தவர்களை அடையாளம் காண்பீர்கள். புதிய முயற்சி ஓரளவு நன்மை தரும். தொழில், வியாபாரம் தாமதகதியில் இருக்கும்.

**சிங்கம்:** புதிய விடயங்களை அறிவதில் ஆர்வம் கொள்வீர்கள். ஒதுக்கி வைத்த பணியை நிறைவேற்றுவீர்கள். தொழில், வியாபாரத்தில் இருந்த சிரமம் விலகும்.

**கன்னி:** சொந்தப் பிரச்சினை பற்றி பிறரிடம் பேச வேண்டாம். கூடுதல் உழைப்பு தொழில், வியாபாரத்தில் நல்ல வளர்ச்சி மாற்றத்தை உருவாக்கும்.

**துலாம்:** ஆன்மிக சிந்தனையுடன் செயல்படுவீர்கள். தாயின் அன்பும், ஆசியும் மனதில் ஊக்கம் தரும். தொழில், வியாபாரம் செழிக்க தேவையான பணிபுரிவீர்கள்.

**விருச்சிகம்:** மனதில் கூடுதல் தைரியம் ஏற்படும். எதிர்ப்புக்களை சாதுர்யமாக வெல்வீர்கள். தொழில், வியாபாரத்தில் அபிவிருத்திப் பணி சிறப்பாக நிறைவேறும். நிலுவைப்பணம் வசூலாகும்.

**தனுசு:** உறவினரின் பேச்சை தொந்தரவாக கருதுவீர்கள். தொழில், வியாபாரம் முன்னேற்றம் பெற புதிய வழிகளை சிந்திப்பீர்கள். கூடுதல் உழைப்பினால் பணவரவு சீராகும்.

**மகரம்:** போட்டி, பந்தயத்தில் ஈடுபடக்கூடாது. தொழிலில் உள்ள குளறுபடியை சரிசெய்வதால் ஓரளவு வளர்ச்சி கிடைக்கும்.

**கும்பம்:** தனித்திறமையை நண்பர் பாராட்டுவர். முயற்சிக்கு உரிய பலன் முழுமையாக வந்து சேரும். தொழில், வியாபாரம் செழித்து மனநிறைவை உருவாக்கும்.

**மீனம்:** இடையூறு விலகி நன்மை உண்டாகும். பொதுப்பணியிலும் ஆர்வமுடன் ஈடுபடுவீர்கள். தொழில், வியாபாரத்தில் புதிய வளர்ச்சி பரிமாணம் ஏற்படும்.

## ஜனநாயகக் காப்பாளர்கள்!







புன்னகை மன்னன்@Punnagaimannan



**கை ரேகையைப் பார்த்து உன் எதிர்காலத்தை தீர்மானிக்காதே! ஏனென்றால் கையே இல்லாதவனுக்கும் எதிர்காலம் உண்டு.**



புத்தகங்களை இழந்துவிட்டு அறிவைத் தேடுகிறோம்..

உறவுகளை இழந்துவிட்டு அன்பைத் தேடுகிறோம்..

நம்மை நாமே இழந்துவிட்டு நிம்மதியைத் தேடுகிறோம்..

இருப்பதைத் தொலைத்து விட்டு இல்லாததைத் தேடுவதையே 'வாழ்க்கை' என வாழ்கிறோம்.!!

# சுடோக்கு

எண் விளையாட்டு

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | 2 | | | | | 3 | | |
| 1 | | | 5 | | | | | |
| 9 | 5 | 7 | | | | | 6 | |
| 4 | | | | | 2 | | 9 | 5 |
| | | | 6 | | | | 1 | |
| 5 | 1 | | 7 | | | | | 2 |
| | 6 | | | | | 2 | | 1 |
| | | | | | 4 | | | 3 |
| | | 1 | | | 3 | | 7 | 6 |

நேற்றைய விடை


| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 8 | 5 | 1 | 9 | 4 | 3 | 6 | 7 | 2 |
| 4 | 3 | 9 | 6 | 7 | 2 | 5 | 1 | 8 |
| 6 | 7 | 2 | 1 | 8 | 5 | 9 | 3 | 4 |
| 1 | 2 | 3 | 7 | 9 | 4 | 8 | 6 | 5 |
| 7 | 6 | 5 | 2 | 1 | 8 | 4 | 9 | 3 |
| 9 | 4 | 8 | 3 | 5 | 6 | 7 | 2 | 1 |
| 5 | 9 | 6 | 4 | 2 | 1 | 3 | 8 | 7 |
| 2 | 8 | 7 | 5 | 3 | 9 | 1 | 4 | 6 |
| 3 | 1 | 4 | 8 | 6 | 7 | 2 | 5 | 9 |

# 31ஆம் நாள் நினைவுகளுடன்

## சின்னப்பு யோசவ் செல்வநாயகம்

(ஆசீர்வாதம் ஸ்ரோர்ஸ், ஆசீர்வணிக நிலைய உரிமையாளர்)

பிறப்பு 03 . 11 . 1945



இறப்பு 30 . 11 . 2018

அன்புக்கோர் அணிகலனாய்
தந்தைக்கோர் இலக்கணமாய்
உற்றாருக்கு உறுதுணையாய்
அண்டி வந்தோர்க்கு ஆதரவாய்
பெற்றோருக்கு பெருமை சேர்த்து
எளிமையாய் வாழ்ந்து காட்டி
தனிமனிதனாய் சரித்திரம் படைத்து
கடமையே கண்ணெனப் போற்றி
நன்றி மறவாத நல் ஊழியன்
ஊர் போற்ற வாழ்ந்த உத்தமர்
மறைந்தாலும் மறையாப் புகழோடு
வாழும் எமது அன்புத் தந்தையின்
ஆன்மா ஆண்டவன் பாகத்தில்
அன்னையுடன் இணைந்து
இளைப்பாற மன்றாடுகின்றோம்.


எமது தந்தையின் மறைவின்போது எமக்கு பல வழிகளிலும் உதவிபுரிந்து எமது துயரில் நேரிலும் வெளிநாடுகளிலிருந்தும் ஆறுதலும் தேறுதலும் தந்த அனைத்துள்ளங்களுக்கும் மலர்வளையம் வைத்து அஞ்சலி செலுத்தியோருக்கும் இறுதி நிகழ்வில் கலந்துகொண்டு திருப்பலியில் பங்குகொண்டோருக்கும் எமது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

16/3, கச்சேரி நல்லூர் வீதி,
யாழ்ப்பாணம். (ACO 325/15/17)

**யோ. செ. அலெக்ஸ் நிக்ஸன் (மகன்)**
**கி. சே. அனிற்ரா சுபோஜினி (மகள்)**
**யோ. செ. ரஜீவ் (மகன்)**

## மரண அறிவித்தல்

# கணவதிப்பிள்ளை நடனசிகாமணி



இன்பர்சிட்டி பருத்தித்துறையைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட கணவதிப்பிள்ளை நடனசிகாமணி நேற்று (28.12.2018) வெள்ளிக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற யோகமலரின் அன்புக் கணவரும் காலஞ்சென்ற கணவதிப்பிள்ளை - கனகம்மா தம்பதிகளின் அன்பு மகனும் காலஞ்சென்ற முருகேசு ஆழியவளையைச் சேர்ந்த சிவகாமிப்பிள்ளை பூமணி தம்பதிகளின் அன்பு மருமகனும் கதிரமலை, திருநாவுக்கரசு, இராமச்சந்திரன், சோதிலிங்கம், காலஞ்சென்ற அன்னலிங்கம் மற்றும் இரத்தினேஸ்வரி, அழகம்மா, கருணாநிதி ஆகியோரின் அன்புச் சகோதரரும் அருள்ஜோதி, தெய்வஜோதி, அருளாளன் காலஞ்சென்றவர்களான சீராளன், இளவரசி மற்றும் பகீரதி ஆகியோரின் தந்தையாரும் விஜயகுமார், இராசவேல், பிரபாகரன் யோகராணி ஆகியோரின் மாமனாரும் கோமதி, அருள்மதி, கரிகரன், கலைமதி, சங்கவி, லக்கியா, டனுஸ்ரன், காலஞ்சென்ற சஜீவன் மற்றும் கற்பகன், கார்த்திக் இராஜமோகன், திவாகர் ஆகியோரின் பேரனும் ஸமிதா, தசாந்தன், கீர்த்தி ஆகியோரின் பூட்டனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (30.12.2018) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10.00 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக சுப்பர்மட இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
குடும்பத்தினர்.

அல்வாய் வடமத்தி, வேல்க் கோவிலடி, இன்பர்சிட்டி.

# பிஸ்தா பாயாசம்

**தேவையான பொருள்கள்**

பிஸ்தா : கால் கிலோ
ரவை : 50 கிராம்
சர்க்கரை : தேவைக்கு
பால் : 1லீற்றர்
கன்டென்ட் மில்க் : 2 மேசைக்கரண்டி
ஏலக்காய்த்தூள் : சிறிதளவு
பிஸ்தா எசன்ஸ்: சிறிதளவு
நெய் :தேவைக்கு

**செய்முறை:**

பாதி அளவு பிஸ்தாவைப் பிரித்தெடுத்து அதில் பால் சேர்த்து விழுதாக அரைத்துக்கொள்ளவும்.
மீதமுள்ள பிஸ்தாவைப் பொடியாக நறுக்கிக்கொள்ளவும்.
சட்டியில் நெய் ஊற்றி அது உருகியதும் நறுக்கிய பிஸ்தாவை கொட்டி வறுத்தெடுக்கவும்.
பின்பு அதனுடன் ரவையைச் சேர்த்து கிளறவும்.
பின்னர் பாலில் அரைத்துள்ள பிஸ்தா விழுதைக் கொட்டிக் கிளறவும்.
அதனுடன் சர்க்கரை சேர்த்து கொதிக்க விடவும்.
நன்றாக வெந்ததும் கன்டென்ட் மில்க், ஏலக்காய் தூள் சேர்த்துக் கிளறி இறக்கிப் பரிமாறலாம்.

## ரணிலை...

தெரிவித்ததாவது:
மகிந்தராஜபக்சவுடன் கூட்டமைப்புக்கு என்ன விரோதம் என்பது எங்களுக் குத் தெரியவில்லை. ரணிலை மீண் டும் ஆட்சிக்கு கொண்டு வருவதற்கு கூட்டமைப்பு படாதபாடுபட்டது.
ஆனால் வடக்கில் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்களை உடனடியாகச் சென்று பார்வையிடுவதிலும், அவர்க ளுக்குத் தேவையான உதவிகளை வழங்குவதிலும் கூட்டமைப்பு அக் கறை காட்டவில்லை.
தமிழ்த் தேசியக் கூட்டமைப்பால் செய்ய முடியாத உதவிகளை, அவர் களால் தினமும் விமர்சிக்கப்படுகின்ற இராணுவத்தினரே செய்தார்கள்.
அம்பாறை மாவட்டத்தின் திருக்கோ வில் பிரதேசத்தில் இராணுவ முகாம் களை அகற்றக் கூடாது என்று மக்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டுள்ளார்கள். கூட்டமைப்பு முகாம்களை அகற்ற வேண்டும் என்கிறது. மக்கள் முகாம் களை அகற்றக் கூடாது என்கிறார்கள் - என்றார். (5.31)

## டெங்கு...

காச்சலினால் பீடிக்கப்பட்ட சிறுமியை நேற்று முன்தினம் காலை 8.30 மணியளவில் மருத்துவமனையில் உறவினர்கள் சேர்ப்பித்ததாக மருத் துவமனை வட்டாரங்கள் தெரிவித் தன.
சிறுமி விடுதியில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சையளிக்கப்பட்ட நிலையில் டெங்கு என்ற சந்தேகத்தின் அடிப்ப டையில் இரவு அவசர சிகிச்சைப் பிரி வுக்கு மாற்றம் செய்யப்பட்டுள்ளார். அங்கு மாற்றம் செய்யப்பட்ட சிறுமி நேற்று அதிகாலை 4.30 மணியள வில் சிகிச்சை பலனின்றி பரிதாபகர மாக உயிரிழந்துள்ளார். (5.105)

## வடக்கு...

டும். இவ்வாறு தலைமை அமைச்ச ரும், தேசிய கொள்கைகள், பொருளா தார அபிவிருத்தி, மீள்குடியேற்றம், மறுவாழ்வு, வடக்கு மாகாண அபிவி ருத்தி, தொழிற்பயிற்சி திறன் மற்றும் இளைஞர் விவகார அமைச்சருமான ரணில் விக்கிரமசிங்க தெரிவித் துள்ளார்.
அடைமழையால் வடக்கில் ஏற்பட்ட வெள்ளப் பேரிடரை நேரில் பார்வை யிடவும், பாதிக்கப்பட்டவர்களின் கருத் துக்களைக் கேட்டறிவதற்காகவும் ரணில் நேற்று உலங்குவானூர்தியில் வடக்கு க்கு வந்து சென்றார். அவர் உலங்கு வானூர்தியில் வடக்குக்கு வரும்போதே வானத்தில் பறந்தவாறு பொது நிர்வாகம், இடர் முகாமைத்துவ அமைச்சர் ரஞ்சித் மத்தும பண்டாரவி டம் மேற்கண்டவாறு கூறியுள்ளார்.
இதன்போது கைத்தொழில், வர்த்தக அலுவல்கள், இடம்பெயர்ந்தோரின் மீள்குடியேற்றம் மற்றும் கூட்டுறவு அமைச்சர் ரிஷாத் பதியுதீன், தொழில், தொழிற்சங்க உறவுகள் மற்றும் சமூக வலுவூட்டல் அமைச்சர் தயா கமகே ஆகியோரும் ரணிலுக்கு அருகில் இருந்தனர்.
'வெள்ளத்தால் வடக்கு மாகாண மக் கள் மோசமாகப் பாதிக்கப்பட்டுள்ள னர். தினந்தோறும் வரும் இடர் முகா மைத்துவ நிலையத்தின் அறிக்கை யைப் பார்க்கும்போது பாதிக்கப்பட் டோரின் எண்ணிக்கை அதிகரித்த வாறு இருக்கின்றது. வடக்கு - தெற்கு என்ற வேறுபாடு இல்லாமல் வெள்ளத்தால் மோசமாகப் பாதிக் கப்பட்டுள்ள வடக்கு மக்களுக்கான அனைத்து உதவிகளையும் நாம் விரைவாக வழங்க வேண்டும். அவர்களின் குறைநிறைகளை நாம் நேரில் கேட்டறிய வேண்டும்' என்று ரணில் மேலும் தெரிவித்துள் ளார். (5)

**வேலையாள் தேவை**
உணவகத்துக்கு வேலையாள் தேவை. மாநகரசபை எல்லைக்குள் வசிப்பவர்கள் விரும்பத்தக்கது.
- 075 777 6597, 077 80[illegible] 8991
(CS 22152/15/18)

**காணி விற்பனைக்கு**
கல்வியங்காட்டில் நல்ல சுற்றாடலில் இரண்டு பரப்பு விற்பனைக்கு உண்டு.
தொடர்பு - 075 693 8550

நியத ஜய Niyatha Jaya
சீட்டிழுப்பு வாரம்: 732 வர்ணம்: நீலம்
திகதி: 2018.12.28
வெற்றி இலக்கங்கள் 13 15 48 57 ஆங்கில எழுத்து G
அடுத்த வெள்ளிக்கிழமைக்கான ஜக்பொட் ரூ. 19,922,832/-
web: www.dlb.lk

SUPER BALL
சீட்டிழுப்பு வாரம் 900
சீட்டிழுப்பு திகதி 2018.12.27 வியாழக்கிழமை
S 15 35 39 71
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 42,675,476/-
தொ.பே: 0112 333 546/47 Web: www.dlb.lk
SMS: DLB<space>LOT<space>SB என டைப் செய்து 1919 இற்கு அனுப்பவும்
நீல நிற டிக்கட்டுகள் 2018.12.29ம் திகதி சனிக்கிழமை சீட்டிழுப்புக்கு செல்லுபடியாகும். வெற்றி பெறும் டிக்கட்டுகள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

ராசி அதிர்ஷ்டம்
திகதி 28.12.2018 வெற்றி வாரம் 2425 வர்ணம் சிவப்பு
மீனம் வெற்றி இலக்கங்கள் 04 28 48 57
ஞாயிற்றுக் கிழமை வெற்றிப் பொதி ரூ. 2.000.000 /=
2018.12.30ம் திகதி ஞாயிற்றுக் கிழமை ஊதா நிற டிக்கட்டுக்களாகும்
வெற்றி பெற்ற சீட்டுக்கள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்
தொ.பே: 011 4824824 Web: www.dlb.lk
SMS: DLB<space>LOT<space>LW என டைப் செய்து 1919 இற்கு அனுப்பவும். அல்லது துரித அழைப்பு 1919

கோடிபதி சனிதா KOTIPATHI SHANIDA
சீட்டிழுப்பு வாரம்: 386
வர்ணம் : செம்மஞ்சள்
சீட்டிழுப்பு திகதி: 2018.12.28
அடுத்த ஞாயிற்றுக்கிழமைக்கான ஜக்பொட் ரூ. 107,540,238/-
ஆங்கில எழுத்து மற்றும் இலக்கங்கள் T 09 10 13 72
தொ.பே: 011 4062002 / 0114062062 Web: www.dlb.lk
அல்லது துரித அழைப்பு - 0114 824 824, 0112 333 778

அத கோடிபதி
சீட்டிழுப்பு வாரம்: 478
வர்ணம் : செம்மஞ்சள்
சீட்டிழுப்பு திகதி: 2018.12.28
இன்றைய ஜக்பொட் பரிசு ரூ. 55,068,715/-
வெற்றி இலக்கங்கள் 38 39 46 51 ஆங்கில எழுத்து J
தொ.பே: 011 4062002 / 0114062062 Web: www.dlb.lk
அல்லது துரித அழைப்பு - 0114 824 824, 0112 333 778

# கண்ணீர் அஞ்சலி



மன்ற முன்னாள் பொருளாளரும்
தற்போதைய நிர்வாகசபை
உறுப்பினருமான
**திருமதி ராதிகா சுதாகரன்**
அவர்களின் அன்புக் கணவர்
**ஈஸ்வரன் சுதாகரன்**
அவர்கள் 26.12.2018 இறைவனடி சேர்ந்தார். அன்னாரின் மறைவுக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்வதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடையவும் பிரார்த்திக்கின்றோம்.
**தலைவர், செயலாளர், உறுப்பினர்கள்**
(AC 317) (14.17)

# பாராட்டி வாழ்த்துகின்றோம்




எமது கல்வி நிலையத்தின் ஆசிரியர்களான
**திரு. A. தராகுலன்** **திரு. S. சுசீந்திரன்**
ஆகியோர் 16.12.2018 அன்று BMICH இல் இடம்பெற்ற 15ஆவது பட்டமளிப்பு விழாவில் உயர் தேசிய ஆங்கில டிப்ளோமா பட்டத்தை பெற்றுக் கொண்டதனை பாராட்டி மேலும் பல பட்டங்கள் பெற வாழ்த்துகின்றோம்.
வாழ்த்துவோர், **நிர்வாகி, ஆசிரியர்கள், மாணவர்கள்**
**குமரன் கல்வி நிலையம், கைதடி.**

# 29 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



**அமரர் நடராஜா சந்திரராஜா**
**(போஸ்)**
(முன்னாள் குகன் ஸ்ரோர் - உரிமையாளர் தலவாக்கலை)
பிறப்பு 20.02.1948
இறப்பு 19.12.1989
திதி: 29.12.2018

அன்பும் பண்பும் நிறைந்த எமது அன்புத் தெய்வமே!
எம்மை உருவாக்கி உலகிற்கு அளித்த தெய்வமே!
என்றும் நீங்காது தங்கள் நினைவு எம் நெஞ்சைவிட்டு
தங்கள் ஆசீர்வாதம் கிடைத்துப் பேறடைய வாழ்த்துங்கள்
உங்கள் ஆத்மா சாந்தியடைய என்றென்றும்
இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

பலாலி வீதி,
கோண்டாவில் கிழக்கு, (in.5427) (13.17)
என்றும் தங்கள் நினைவுடன்
**குடும்பத்தினர்.**

# அந்தியேட்டி சபிண்டீகரண அழைப்பு



கடந்த 01.12.2018 சனிக்கிழமை
இறைபதமடைந்த
எமது குடும்பத் தலைவர்
**அமரர் இரத்தினம் தமிழ்ச்செல்வன்**
**(செல்வம்)**
அவர்களின் அந்தியேட்டிக் கிரியைகள் இன்று (29.12.2018) சனிக்கிழமை காலை 8.00 மணியளவில் கீரிமலை புனித தீர்த்தக்கரையிலும், 31.12.2018 திங்கட்கிழமை முற்பகல் 11.30 மணியளவில் எமது இல்லத்திலும் இடம் பெறும் சபிண்டீகரண கிரியையிலும், மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

குமாரசாமி வீதி,
புத்தூர் கிழக்கு, புத்தூர்.
**குடும்பத்தினர்.**
(CS 22083) (14.17)

# வலி.வடக்கு பிரதேச சபை, காங்கேசன்துறை ஆதனவரி மீள் மதிப்பீடு தொடர்பானது

வலிகாமம் வடக்கு பிரதேசசபைக்குட்பட்ட மயிலிட்டி உப அலுவலக எல்லைக்குள் அமைந்துள்ள சகல ஆதனங்களையும் (காணிகள்) மீள் மதிப்பீடு செய்யும் நடவடிக்கை 28.12.2018 ஆம் திகதி முதல் விலை மதிப்பீட்டுத் திணைக்களத்தினால் மேற்கொள்ளப்படவுள்ளது.

எனவே இவ் எல்லைக்குள் வதியும் ஆதனங்களின் உரிமையாளர் விலை மதிப்பீட்டு திணைக்கள உத்தியோகத்தர்கள் மீள் மதிப்பீட்டு நடவடிக்கைக்கு சமுகமளிக்கும் போது தங்கள் ஆதனங்களுக்குரிய ஆவணங்களை பார்வைக்கு சமர்ப்பிக்குமாறும், தங்களது ஆதனத்திற்குள் நுழைந்து ஆதனங்களை பார்வையிட்டு மீள் மதிப்பீடு செய்வதற்கு ஒத்துழைப்பு வழங்குமாறும் கேட்டுக்கொளகின்றேன்.

1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் சட்டம் பிரிவு 139 (1) இன் பிரகாரம் மீள் மதிப்பீட்டாளர் தங்கள் ஆதனத்திற்குள் பிரவேசிக்கவும், ஆதனங்கள் ஆவணங்களை பரிசீலிக்கவும் ஆதன மதீப்பீடுகளை மேற்கொள்வதற்கும் உரித்துடையவர்கள் என்பதோடு உரிய விபரங்களை அவர்களுக்கு வழங்கி தங்களது ஆதனங்களின் உரிமைகளை உறுதிப்படுத்திக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றேன்.

**சோ.சுகிர்தன்,**
**தவிசாளர்,**
**வலிகாமம் வடக்கு பிரதேச சபை, காங்கேசன்துறை.** (in.8877) (13.17)

## கண்ணீர் அஞ்சலி

எமது மன்ற உறுப்பினர்

### தர்மலிங்கம் கைலாயபிள்ளை

(உரிமையாளர் - கைலாயபிள்ளை களஞ்சியம் சந்தை - சாவகச்சேரி)
அவர்கள் 28.12.2018 அன்று காலமானார்.
அன்னாரின் பிரிவினால் துயருறும் குடும்பத்தினருக்கு மன்றம் தனது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்கின்றது.

(ech.8881) (13.17) **சாவகச்சேரி கைத்தொழில் வணிகர் மன்றம்**

## மரண அறிவித்தல்

### மடுத்தின்சிறில்



"என்னை விசுவாசிக்கிறவன் மரித்தாலும் பிழைப்பான்" - யோவான் 11:25

தாய் மடியில் 09.04.1935 இறைவன்மடியில் 28.12.2018

ஆவரங்கால் கிழக்கு, புத்தூரைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட மடுத்தின்சிறில் நேற்று (28.12.2018) வெள்ளிக்கிழமை காலமானார்.


அன்னார் காலஞ்சென்ற லூர்த் தம்மாவின் கணவரும் அன்ரன், ஜெசிந்தா (அமெரிக்கா), மரியராணி, யேசுராஜா (ஜேர்மனி), டேவிட், விக்ரர் (ஜேர்மனி), ராணி ஆகியோரின் தந்தையாரும் இந்திராணி, அமல நாயகம், ஜீவானந்தம் (அமெரிக்கா), செபமாலை, சாந்தா (ஜேர்மனி), அஞ்சலா, கௌரி (ஜேர்மனி), லெனாட் ஆகியோரின் மாமனாரும் விஜி, ஜெனிதா, யசோ, சலிஸ்ரா, மதுசன், சுகந்தன், சுஜீவன், சுயித்தா, சுகைலா, டெல்வினா, சகானா, டெனுசியா, லிக்சாயினி, நிமேஸ், சிமோதினி, கம்ஷாயினி, கிபிர்த்தா, பிருத்திகன், வினுஜன், யதுசா, துஷாந்தன், லூர்த்திகா, எலிசா, கம்ஷாயினி, பிருஷாயினி, டனுஷாயினி ஆகியோரின் பேரனும் பூரணம், பாக்கியம், வலன்ரின் ஆகியோரின் சகோதரனும் றினேஸ், வக்சனா, கஜானா, டிசானி, டிலக்சன், தமிழினி, கம்ஷாயினி, செறின், டெல்சன், சந்தோஸ், சதுர்சன், கஸ்றோன் ஆகியோரின் பூட்டனும் ஆவார்.

அன்னாரின் இறுதி நல்லடக்க ஆராதனை இன்று (29.12.2018) சனிக் கிழமை பி.ப. 2.00 மணியளவில் இருபாலை N.L.M சேர்ச்சில் நடைபெறும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**தகவல்:**
**குடும்பத்தினர்.**

## மரண அறிவித்தல்

பிறப்பு 16 04 1947



இறப்பு 28 12 2018

### கைலாசபிள்ளை கணேசையா

(கணேஸ்)

மண்கும்பான் கிழக்கு, 4ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் கொக்குவில் மேற்கு, சிவகுரு லேன், முதலாம் ஒழுங்கையை வசிப்பிட மாகவும் கொண்ட கைலாசபிள்ளை கணேசையா நேற்று (28.12.2018) வெள்ளிக் கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கைலாசபிள்ளை - பூரணம் தம்பதிகளின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான நடராசா - சிவக்கொழுந்து தம்பதிகளின் அன்பு மருமகனும் பால சரஸ்வதியின் அன்புக் கணவரும் காலஞ்சென்ற வர்களான கனகசுந்தரம், கனகலிங்கம் மற்றும் கெங்காதேவி, யோகேஸ்வரி, காலஞ்சென்றவர்களான கருணாகரன், தயாநிதி மற்றும் கருணாநிதி (கண்ணப்பா), கனகநாயகம் (குஞ்சன்) ஆகியோரின் அன்பு சகோதரனும் தர்சினி, சுதர்சினி (சுவிஸ்), கஜந்தினி (சுவிஸ்), பாலரிஷி (ஆஸ்திரேலியா), ஜங்கரன் (பிரான்ஸ்) ஆகியோரின் அன்புத் தந்தையும் சண்முகதாசன் (தாசன் - லக்ஷன் றேடர்ஸ் ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்), சிவசங்கரன் (சுவிஸ்), சிவசுதன் (சுவிஸ்), சதீஸ்குமார் (ஆஸ்திரேலியா), பிறேமினி (பிரான்ஸ்) ஆகியோரின் அன்பு மாமனாரும் யசோதா, காலஞ்சென்ற கமலநாதன் மற்றும் கமலாம்பிகை (கனடா), விமலாம்பிகை (சுவிஸ்), விமலநாதன் (ஜேர்மனி), நவநாதன் (கனடா), காலஞ்சென்ற நந்தினிதேவி மற்றும் சிவகேந்தினி, பவனீதரன் (ஜேர்மனி) ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஸலக் ஷனா, டிலக்சன், கிஷாயினி, ரிஷிபன், சியானுகா (சுவிஸ்), சாரங்கி (சுவிஸ்), ருத்வின் (பிரான்ஸ்) ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (30.12.2018) ஞாயிற்றுக்கிழமை அவரின் கொக்குவில் இல்லத்தில் நடைபெற்று நண்பகல் 12.00 மணியளவில் தகனக் கிரியைக்காக பூதவுடல் சாட்டி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**ச. தாசன் சிவகுருலேன், உப ஒழுங்கை 01,**
**கொக்குவில் மேற்கு, 077 959 5142**

**தகவல்:**
**குடும்பத்தினர்.**

## மரண அறிவித்தல்கள்

### திருமதி வசந்தா ராமச்சந்திரன்



காரைநகர், பயிரிக் கூடலைப் பிறப்பிடமாகவும் வவுனியாவை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி வசந்தா ராமச்சந்திரன் கடந்த (27.12.2018) வியாழக் கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் கந்தையா ராமச்சந்திரனின் (சாயி கொமினிக்கேசன், வவுனியா) அன்பு மனைவியும் காலஞ் சென்றவர்களான சுப்பிரமணியம் - மதங்கசூடாமாணி தம்பதிகளின் அன்பு மகளும் காலஞ்சென்றவர்களான கந்தையா - லோகநாயகி தம்பதிகளின் அன்பு மருமகளும் வசந்தகுமார் (ஆசிரியர் வெஸ்லி கல்லூரி), விஜயகுமார் (லண்டன்), வனயா (கனடா), வனயகுமார் (T.O. NHDA கிளிநொச்சி) ஆகியோரின் அன்புச் சகோதரியும் சுசிலாதேவி (இளைப்பாறிய ஆசிரியை), சுலோசனாதேவி, ஜெயதேவி, பாலச்சந்திரன், ரவிச்சந்திரன் (லண்டன்), நவமலர்தேவி (பிரான்ஸ்) ஆகியோரின் மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (30.12.2018) ஞாயிற்றுக் கிழமை காலை 8.30 மணியளவில் காரைநகர் பயிரிக்கூடலில் உள்ள அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக சாம்பலோடை இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**தகவல்:**
**குடும்பத்தினர்.**

(CS 22151) (15.18)



மலர்வு - 19.06.1977 உதிர்வு - 21.12.2018

### சுப்பிரமணியம் சுதர்சன் (சுதா)

யாழ். பன்னாலையைப் பிறப்பிடமாகவும் பிரான்ஸ் Paris ஐ வசிப்பிடமாகவும் கொண்ட சுப்பிரமணியம் சுதர்சன் 21.12.2018 வெள்ளிக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார், சுப்பிரமணியம் சாரதாதேவி(இலங்கை) தம்பதிகளின் மூத்தப் புதல்வரும், காலஞ்சென்ற ஞானபண்டிதன் - தங்கேஸ்வரி(பிரான்ஸ்) தம்பதிகளின் அன்பு மருமகனும், நிசாந்தியின் அன்புக் கணவரும், சபிதா, வாமிகா ஆகியோரின் பாசமிகு தந்தையும், மயூரன் (இலங்கை), அகிலன்(பிரித்தானியா), நிரோஜன்(இலங்கை) ஆகியோரின் பாசமிகு சகோதரரும், வாமதேவன் மயில்வாகனம், அம்பிகாதேவி, வாமதேவன்(சுவிஸ்) ஆகியோரின் ஆசை மருமகனும் அருன், சிந்து, கிஷ்னா(சுவிஸ்), துசா, சஞ்சுதா, திவ்வியா(பிரித்தானியா) ஆகியோரின் அன்பு மைத்துனரும் ரவி, தீபன்(பிரித்தானியா) ஆகியோரின் அன்புச் சகலனும் பவீஷ், வர்ஷா, அனீஷ், அஷ்வினா, அத்விக்(பிரித்தானியா) ஆகியோரின் பாசமிகு பெரியப்பாவும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 31.12.2018 திங்கட்கிழமை பிரான்சில் நடைபெறும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**இல.138/04, முதலாம் ஒழுங்கை,**
**குட்செட் வீதி, வவுனியா.**

**தகவல்:**
(CS 00449) (14.17) **குடும்பத்தினர்.**

**024 222 5180**

உ
சிவமயம்

## தசாஹ கிருஹயக்ஞ அழைப்பு



கடந்த 21.12.2018 வெள்ளிக்கிழமை சிவபதம் அடைந்த எமது குடும்பத்தலைவர்

பிரம்மஸ்ரீ
**இரத்தினசாமிக் குருக்கள் சண்முகநாத சர்மா**

அவர்களின் ஆத்மசாந்திக் கிரியைகள் பின்வரும் தினங்களில் நடைபெறும்.

**தசாகம் : மார்கழி 15 (30.12.2018) ஞாயிற்றுக்கிழமை**
**ஏகோதிஷ்டமாசிகம் : மார்கழி 16 (31.12.2018) திங்கட்கிழமை**
**சபீண்டிகரணம் : மார்கழி 17 (01.01.2019) செவ்வாய்க்கிழமை**
**கிருஹயக்ஞம் : மார்கழி 18 (02.01.2019) புதன்கிழமை**

மேற்படி ஆத்மசாந்திக் கிரியைகளில் தாங்களும் தங்கள் குடும்பத்தினரும் கலந்து அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் 02.01.2019 புதன்கிழமை நண்பகல் 12.00 மணியளவில் எமது இல்லத்தில் நடைபெறும் மதிய போசன நிகழ்விலும் கலந்து சிறப்பிக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

இதனை தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளவும்.

**171/3, மனோன்மணி அம்மன் கோவில்,**
**நல்லூர். 021 205 4060**

**மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.**



## குளிர்கால சருமப் பராமரிப்பு

குளிர்காலம் தொடங்கி விட்டது. இதிலிருந்து சருமத்தைப் பாதுகாப்பது தான் பலரின் கவலையாக இருக்கும். இந்தசமயத்தில்சருமத்தின் தன்மையும் மாறும். அதற்கேற்றபடி சில பராமரிப்புகளைப் பின்பற்றினால், முகத்தை எப்போதும் பொலிவுடன்வைத்துக் கொள்ளலாம்.

**தேங்காய் எண்ணெய்**
உடலைத் தேங்காய் எண்ணெய்யால் மசாஜ் செய்த பின்பு குளிப்பது மிகவும் நல்லது. இதன் மூலம் உடல் வறட்சி, வெடிப்பு போன்றவற்றைதடுக்கலாம். பனிக் காலத்தில் வாரத்தில் இரண்டு முறையாவது எண்ணைதேய்த்துக்குளிக்கலாம்.


**வாழைப்பழ பேக்**
வாழைப்பழத்தில்சரும வறட்சியைத் தடுக்கும் தன்மை அதிகம் உள்ளது. அதனால் மசித்த வாழைப்பழத்தை முகத்தில் தடவி 10-15 நிமிடம் ஊற வைத்து, பின்தேன்பயன்படுத்தி மசாஜ்செய்து10நிமிடம் ஊற வைத்து, இறுதியில் முகத்தைக் குளிர்ந்த நீரில்கழுவவேண்டும்.

**கற்றாழை**
சுத்தமான கற்றாழையை 15 நிமிடம் முகத்தில் தடவி பின் கழுவலாம்.

**தண்ணீர்**
குளிர்காலம்என்பதால் தண்ணீரைதவிர்க்கக் கூடாது. வெயில்காலத்துக்குசமமாகஅதிகளவு தண்ணீர் குடிக்கவும். இல்லையெனில் சரும வறட்சி அதிகரிக்கும்.

**உணவு**
நிறைய பச்சைக் காய்கறிகள், பழங்களை உணவில் சேர்த்துக் கொள்ளவும்.

இ.மயூரநாதன்




# தாழ்வு மனப்பான்மையைத் தகர்ப்போம்!

இன்றைய சமுதாயத்தில் மக்கள் மத்தியில், குறிப்பாக இளைஞர்கள் மத்தியில் பெரிதாக வளர்ந்து நின்று, அவர்களது முன்னேற்றத்துக்கும், முன்னேற்றச் செயல்பாட்டுக்கும் முட்டுக் கட்டை போடுவது எது? அவர்கள் மனதில் அடிவரை சென்று ஒட்டிக் கொண்டுள்ள தாழ்வு மனப்பான்மையென்னும் தடைக்கல்லே.

தன் உணர்வுகளுக்குத் தானே அரணிட்டுக் கொண்டு, தன் திறமையையும், அறிவாற்றலையும் தானே குறைத்துக் கணித்துக் கொண்டு, தனக்குத் தானே தடையாக, முன்னேற்ற எண்ணங்களை மூலையில் வீசிவிட்டு, சராசரி வாழ்க்கைக்கும் கீழான வாழ்க்கையை சத்தேயில்லாமல் வாழ்ந்து கொண்டிருக்கின்றது இன்றைய இளைய சமுதாயம்.

**தாழ்வு மனப்பான்மைக்கான காரணங்கள்!**

ஒரு மனதில் தாழ்வு மனப்பான்மையென்னும் மாயப் பிசாசு குடி கொள்வதற்கு பல்வேறு காரணங்களுண்டு. அவற்றுள் முக்கியமானதாகச் சில உண்டு.

முதலாவதாக மூத்தோர்களைக் காரணமாகக் குறிப்பிடலாம். தங்கள் முன்னோர்களையும், தங்களையும் மட்டுமே மனத்தில் கொண்டு, அடுத்தடுத்து வரும் சந்ததியினரின் அறிவையும், திறமையையும் குறைத்து மதிப்பிட்டு போதிய கல்வியறிவையும், பொது அறிவையும் வளர்க்கத் தவறுவதால் தங்கள் வாரிசுகள் மனத்தில் தாழ்வு மனப்பான்மை விசம் தாராளமாகப் பரவுவதற்கு அவர்களே காரணமாகின்றனர்.

இரண்டாவதாக பொருளாதாரச் சூழ்நிலையைக் குறிப்பிடலாம். பொதுவாகவே அவமானத்திலும், ஏளனத்திலும் வளரும் குழந்தைகளுக்குக் குற்ற உணர்வும், தாழ்வுணர்ச்சியும் இயற்கையாகவே வந்து விடுகின்றது. பொருளாதார ஏற்றத்தாழ்வானது மேல் மட்டத்திலிருப்பவன் கீழ் மட்டத்திலிருப்பவனிடம் சற்று ஆக்கிரமிப்புடனும், அவமானப்படுத்தும் நோக்கத்துடனுமே இருக்கச் செய்கின்றது.

அங்ஙனம் ஆக்கிரமிப்பும், அதிகாரத் தோரணையும் பாயும் போது கீழ் மட்டத்திலிருப்பவன் அவமானத்தை உணர்கின்றான். அந்தச் சூழ்நிலையில் தன்னைப் பற்றிய தாழ்வு எண்ணங்களே அவனுக்குள் விரிகின்றன. அதன் உடனடி விளைவு தாழ்வு மனப்பான்மையின் பிறப்பாகும்.

> ஒரு மனதில் தாழ்வு மனப்பான்மையென்னும் மாயப் பிசாசு குடி கொள்வதற்கு பல்வேறு காரணங்களுண்டு. அவற்றுள் முக்கியமானதாகச் சில உண்டு. முதலாவதாக மூத்தோர்களைக் காரணமாகக் குறிப்பிடலாம். தங்கள் முன்னோர்களையும், தங்களையும் மட்டுமே மனத்தில் கொண்டு, அடுத்தடுத்து வரும் சந்ததியினரின் அறிவையும், திறமையையும் குறைத்து மதிப்பிட்டு போதிய கல்வியறிவையும், பொது அறிவையும் வளர்க்கத் தவறுவதால் தங்கள் வாரிசுகள் மனத்தில் தாழ்வு மனப்பான்மை விசம் தாராளமாகப் பரவுவதற்கு அவர்களே காரணமாகின்றனர்.



மூன்றாவதாக சுய மனத்தடைகளைக் குறிப்பிடலாம். அதாவது, "நம்மால் முடிந்தது இவ்வளவுதான், இதற்கும் மேல் நமக்கு வேண்டாம்", " நம் தலையெழுத்து இதுதான்", " வேறு வழியில்லை எல்லாவற்றையும் சகித்துக் கொண்டு வாழ்க்கையை ஓட்ட வேண்டியதுதான்." போன்ற சுய மனத்தடைகள் இடப்படும் உரங்களாகும்.

நான்காவதாக முந்தைய தவறுகளின் தாக்கம். இங்கு தவறுகள் என்பது தனக்கு மட்டுமே சொந்தமானது. தன்னைத் தவிர யாருமே தவறு செய்வதில்லை. தான் எது செய்தாலும் தவறாகவே முடிகின்றது என்று நினைத்துக் கொண்டு, அந்தத் தவறுகளின் தாக்கத்தால் அடுத்த அடி எடுத்து வைப்பதில் ஏற்படும் சஞ்சலங்களும், தயக்கங்களும் தாழ்வு மனப்பான்மை குணம் பிறக்க வழி வகுக்கின்றன. ஐந்தாவதாக கல்வியறிவு பற்றிய கவலை அதாவது, "மற்றவர்களைவிட நாம் குறைந்த அளவே படித்திருக்கின்றோம்.

அதனால் நம் கருத்துக்களும், செயல்பாடுகளும் நிச்சயம் சிறப்பு வாய்ந்தவைகளாக இருக்காது" என்ற எண்ணம் தாழ்வு மனப்பான்மையின் சின்னம். அனுபவ அறிவிலும் கூட அவ்வாறே. அனுபவசாலிகள் முன்பு தான் கூறும் எந்தக் கருத்தும் நிறைவானதாக இருக்காது என்ற தவறான எண்ணம் சிறந்த செழுமையான எண்ணங்களின் உற்பத்தியையே முடக்கி வைக்கிறது.

ஆறாவதாக ஊக்க வார்த்தைகளின் தட்டுபாட்டைக் குறிப்பிடலாம். சுற்றியுள்ளவர்களின் பேச்சும், செயல்பாடுகளும் ஊக்குவிக்கும் விதத்தில் அமைந்திருப்பின் ஒருவன் செயல் வெற்றியை எளிதில் அடைந்து விடுகின்றது. அதை விடுத்து அவன் ஒய்ந்து சாயும் தருணம் பார்த்து அதைச் சாதகமாக்கிக் கொள்ள முனையும் சிலரிடமிருந்து வெளிப்படும் எதிர்வினை ஊக்குவிப்புகள் தாழ்வு மனப்பான்மை விதையை விதைத்து தோல்விப் பயிரை அறுவடை செய்கின்றது.

**தாழ்வு மனப்பான்மையைத் தகர்க்கும் வழிகள்!**

பெற்றோர்களின் வார்த்தைகளில் நேர்வினை ஊக்குவிப்பு மட்டுமே நிறைந்திருக்க வேண்டும். அது பிள்ளைகளை நேர்வழிப்படுத்தி நிமிர வைக்கிறது. தங்களுக்குக் கிடைக்காத பல அரிய சந்தர்ப்பங்களைத் தம் சந்ததியினருக்கு ஏற்படுத்தித் தருவதன் மூலம் அவர்கள் தம் எதிர்காலச் சந்ததியினரை இமயத்தின் உயரத்திற்கு ஏற்றி வைக்கின்றனர். அடுத்து, பொருளாதார நிலைமைகளைப் பொருட்படுத்தாது உயரிய எண்ணங்களையும், செயல்களையும் அதன் போக்கில் செல்ல வழி விடும்போது தாழ்வு மனப்பான்மையானது தவிடுபொடியாகிறது.

எல்லாச் சூழ்நிலைகளிலும் நாம் செய்கின்ற காரியங்களும் சரி, செய்யப் போகின்ற காரியங்களும் சரி, நமது திறமைக்கும் அறிவுக்கும் மிகச் சாதாரணமானவை என்ற எண்ணம் அந்தவேலையைச் சுலபமாக்கி விடுவதோடு தாழ்வு மனப்பான்மையையும் குழி தோண்டிப் புதைத்து விடுகின்றன.

தவறு என்பது பொதுவான ஒன்று. அது எல்லோருக்கும் இயல்பாக ஏற்படுகின்ற ஒன்று என்ற எண்ணம் மேலோங்க வேண்டும். ஒரு தவறானது அடுத்து வரவிருக்கும் வெற்றிக்கு வழிவகுக்கிறது என எண்ணினால் தவறுகளின் தாக்கத்தினால் ஏற்படும் தாழ்வு மனப்பான்மை தாக்கப்பட்டு விடும்.

கல்வியறிவும் அனுபவ அறிவும் நமது எண்ணங்களையும் செயல்பாட்டையும் கட்டுப்படுத்தும் ஒரு கருவியாக இருப்பது தவறாகும். "கல்வியறிவு மட்டுமே சீரிய சிந்தனைகளைத் தரும். அனுபவ அறிவு மட்டுமே அறிவார்ந்த செயல்களைத் திட்டமிடும்" என்பது ஏற்றுக் கொள்ள முடியாத கூற்று. எல்லா மனத்திலிருந்தும் ஏற்றச் சிந்தனைகள் உரிய காலத்தில் தாமாக வெளிப்படும்.

மற்றவர்களின் வார்த்தைகள் நமது செயல்பாட்டை எதிர்வினையாகப் பாதிக்கா வண்ணம் சாமர்த்தியமாகத் தவிர்ப்பது தாழ்வு மனப்பான்மையைத் தாக்கி வெற்றித் திலகத்தை நெற்றியில் சூட்டும்.

மொத்தத்தில் இளைய சமுதாயத்தினரின் போக்கையும், வெற்றியையும் தீர்மானிப்பதில் தாழ்வு மனப்பான்மை எண்ணங்களே முதலிடம் பெறுவதால், அவற்றை மேற்கூறிய வழிகளில் முறியடித்து வெற்றிக் கொடியை சிகரத்தின் உச்சியில் ஏற்ற முனைந்தால், நமக்கு அடுத்து வரும் சந்ததியினர் சிகரத்தின் மேல் சிம்மாசனம் இடுவர் என்பதில் சிறிதும் சந்தேகமேயில்லை.

***தாழ்வு மனப்பான்மையைத் தகர்ப்போம்! வெற்றிக்கு வழி வகுப்போம்!***



வன்னி மாவட்டத்தில் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு வடமராட்சி மாலுசந்தி விளையாட்டுக் கழகத்தால் உதவிப் பொருள்கள் வழங்கப்பட்டன. கடந்த செவ்வாய்க்கிழமை முதல் நேற்றுமுன்தினம் வரை இந்த உதவிகள் வழங்கப்பட்டன என்று தெரிவிக்கப்பட்டது. (ற)

# முல்லை. சென். யூட் கிண்ணம் வென்றது



யாழ்ப்பாணம், டிசெ. 29

புதுக்குடியிருப்பு விடியல் விளையாட்டுக் கழகம் நடத்திய கால்பந்தாட்டத் தொடரில் முல்லைத்தீவு சென். யூட் விளையாட்டுக் கழக அணி கிண்ணம் வென்றது.


புதுக்குடியிருப்பு விடியல் விளையாட்டுக் கழக மைதானத்தில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற இறுதியாட்டத்தில் முல்லைத்தீவு சென். யூட் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து உடுப்புக்குளம் அலையோசை அணி மோதியது.

முதல் பாதியில் சென். யூட் அணியின் முதலாவது கோலை சிறி பதிவுசெய்தார். ஸ்ராலின் மற்றொரு கோலைப் பதிவுசெய்ய முதல் பாதியின் முடிவில் 2:0 என்ற கோல் கணக்கில் முன்னிலை பெற்றது சென். யூட்.

இரண்டாவது பாதியில் சென். யூட்டின் சார்பாக நான்கு கோல்கள் பதிவாகின. ஸ்ராலின் மூன்று கோல்களையும், சிறி ஒரு கோலையும் பதிவுசெய்தனர். ஆட்டம் முடிவடைய ஐந்து நிமிடங்கள் இருக்கையில் அலையோசையின் சார்பாகக் கோலொன்று பதிவானது. முடிவில் 6:1 என்ற கோல் கணக்கில் கிண்ணம் வென்றது சென். யூட்.

ஆட்டநாயகனாக சிறி, தொடராட்ட நாயகனாக ஸ்ராலின், சிறந்த கோல் காப்பாளராக சென். யூட் அணியின் விவேக் ஆகியோர் தெரிவாகினார்கள்.

பரிசளிப்பு நிகழ்வுக்கு முதன்மை விருந்தினராக நாடாளுமன்ற உறுப்பினர் காதர் மஸ்தான் கலந்து கொண்டார். சிறப்பு விருந்தினர்களாக புதுக்குடியிருப்பு பிரதேச செயலக கணக்காளர் திருமதி சுதர்ஜினி சிவசிறிதரன், வலைஞர் மடப் பங்குத்தந்தை லியோ ஆம்ஸ்ரோங் ஆகியோர் கலந்து கொண்டனர். (ம-23)



## மேசைப்பந்தாட்டம் இன்று ஆரம்பம்

யாழ்ப்பாணம், டிசெ. 29

இலங்கை மேசைப்பந்தாட்டச் சங்கம் நடத்தத் திட்டமிட்ட தேசிய ரீதியிலான இருபாலாருக்குமான தொடரின் ஆட்டங்கள் யாழ்ப்பாணம் மத்திய கல்லூரியில் இன்றும் நாளையும் இடம்பெறவுள்ளன. (ம-23)

## தேசிய மட்ட மேசைப்பந்தில் வடக்கு கல்வித் திணைக்களம் வெள்ளிப்பதக்கம் வென்றது

யாழ்ப்பாணம், டிசெ. 29

அரச திணைக்கள சம்மேளனம் நடத்திய தேசிய ரீதியிலான மேசைப்பந்தாட்டத்தில் வடமாகாண கல்வித் திணைக்கள அணி வெள்ளிப்பதக்கம் வென்றது.

அரச திணைக்கள உத்தியோகத்தர்களுக்கான தேசிய மட்ட மேசைப்பந்தாட்டத் தொடர் யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி உள்ளக விளையாட்டரங்கில் நேற்றுமுன்தினம் நடைபெற்றது. ஆண்கள் பிரிவு இறுதியாட்டத்தில் வடமாகாண கல்வித் திணைகள அணியைப் பிரதிநிதித்துவம் செய்த குமரேசன், கிங்ஸ்லி, வினோகாந் ஆகியோரை எதிர்த்து கண்டி சுகாதார திணைக்கள அணி மோதியது. இதில் வடமாகாண கல்வித் திணைகள அணி நேர்செற் கணக்கில் தோல்வியடைந்து வெள்ளிப்பதக்கம் வென்றது. (ம-23)



## இன்றைய மோதல்கள்

யாழ்ப்பாணம், டிசெ. 29

**பூநகரி லீக்கின் கால்பந்தாட்டம்**

பூநகரி கால்பந்தாட்ட லீக்கில் அங்கம் வகிக்கும் கழகங்களுக்கு இடையிலான தொடரின் ஆட்டங்கள் முழங்காவில் விநாயகர் விளையாட்டுக் கழக மைதானத்தில் இடம்பெற்று வருகின்றன. இந்தத் தொடரில் இன்று சனிக்கிழமை காலை 8.30 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் கலைமகள் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து ஜின்னா விளையாட்டுக் கழக அணி மோதவுள்ளது. காலை 10.30 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் இளங்கதிர் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து நாச்சிக்குடா சென். மேரிஸ் விளையாட்டுக் கழக அணி மோதவுள்ளது. பிற்பகல் 2.30 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் சென். செபஸ்ரியன் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து கலையொளி விளையாட்டுக் கழக அணி மோதவுள்ளது. மாலை 4.30 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் செந்தாரகை விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து அண்ணா விளையாட்டுக் கழக அணி மோதவுள்ளது.

**ஆசிரியர் சங்க கால்பந்தாட்டம்**

வடக்கு மாகாண உடற்கல்வி டிப்ளோமா ஆசிரியர் சங்கம் நடத்தும் அழைக்கப்பட்ட அணிகளுக்கு இடையிலான தொடரின் ஆட்டங்கள் உரும்பிராய் இந்துக் கல்லூரி மைதானத்தில் இடம்பெற்று வருகின்றது. இந்தத் தொடரில் இன்று சனிக்கிழமை மாலை 4 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் மயிலங்காடு ஞானமுருகன் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து நாமகள் விளையாட்டுக் கழக அணி மோதவுள்ளது. மாலை 5 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் இளவாலை யங்ஹென்றிஸ் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து ஆனைக்கோட்டை யூனியன் விளையாட்டுக் கழக அணி மோதவுள்ளது.

**யாழ்ப்பாண மாவட்ட ரி20 துடுப்பாட்டம்**

அரியாலை சுதேசிய நூற்றாண்டு விழாவை முன்னிட்டு யாழ்ப்பாண மாவட்ட ரீதியாக நடத்தத்திட்டமிட்ட ரி20 தொடரின் ஆட்டங்கள் சில யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி மற்றும் கொக்குவில் இந்துக் கல்லூரி ஆகியவற்றின் மைதானங்களில் இன்று இடம்பெறவுள்ளன.

யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி மைதானத்தில் காலை 8.30 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் மானிப்பாய் பரிஸ் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து ஸ்ரான்லி விளையாட்டுக் கழக அணி மோதவுள்ளது. நண்பகல் 11.30 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் நியூஸ்ரார் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து திருநெல்வேலி கிரிக்கெட் கழக அணி மோதவுள்ளது. பிற்பகல் 2.30 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் அரியாலை மத்திய விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து ஏபி விளையாட்டுக் கழக அணி மோதவுள்ளது.

கொக்குவில் இந்துக் கல்லூரி மைதானத்தில் இன்று காலை 8.30 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் விங்ஸ் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து றெயின்போ விளையாட்டுக் கழக அணி மோதவுள்ளது. நண்பகல் 11.30 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் றிபொக்ஸ்ரார் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து ஜொலிஸ்ரார் விளையாட்டுக் கழக அணி மோதவுள்ளது. பிற்பகல் 2.30 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் ஓல்ட் கோல்ட்ஸ் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து ஹாட்லி யைட்ஸ் விளையாட்டுக் கழக அணி மோதவுள்ளது. (ம-23)







கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்டங்களில் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு வடமராட்சி, புலோலி இளைஞர் விளையாட்டுக் கழகம் உதவிப் பொருள்களை வழங்கியது. தமது ஊரில் உதவிப் பொருள்கள் சேகரிக்கப்பட்டு, பாதிக்கப்பட்ட மக்களுக்குக் கடந்த செவ்வாய்க்கிழமை கையளிக்கப்பட்டது என்று தெரிவிக்கப்பட்டது. (ற)

# முன்னிலை பெற்றது இந்தியா







ஆஸ்திரேலியாவுக்கு எதிரான மூன்றாவது டெஸ்ட் ஆட்டத்தில் இந்திய அணி முன்னிலை பெற்றது. அந்த அணி தனது வெற்றிக்கு இயலுமான அத்தனை வழிகளையும் ஏற்படுத்தியுள்ளது.

இந்திய அணி ஆஸ்திரேலியாவுக்குச் சுற்றுப் பயணம் மேற்கொண்டு விளையாடி வருகிறது. தொடரின் மூன்றாவது ஆட்டம் உலகின் மிகப்பெரிய மைதானமான மெல்போர்ணில் கடந்த புதன்கிழமை ஆரம்பமானது.

நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற இந்திய அணி முதலில் துடுப்பெடுத்தாடத் தீர்மானித்தது. அந்த அணி 7 இலக்குகளை இழந்து 443 ஓட்டங்களைப் பெற்றிருந்த நிலையில் ஆட்டத்தை இடைநிறுத்தினார் கோக்லி. அதிகபட்சமாக புஜாரா 106 ஓட்டங்களையும், கோக்லி 82 ஓட்டங்களையும்பெற்றனர். ரோகித் 76 ஓட்டங்களுடன் ஆட்டமிழக்காதிருந்தார். பந்துவீச்சில் கம்மின்ஸ் 3 இலக்குகளையும், ஸ்ராக் 2 இலக்குகளையும், ஹசில்வூட், லயன் இருவரும் தலா ஓர் இலக்கையும் கைப்பற்றினார்கள்.

பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய ஆஸ்திரேலிய அணி நேற்றுமுன்தின நாள் முடிவில் இலக்குச் சரிவில்லாமல் 8 ஓட்டங்களைப் பெற்றிருந்தது. ஹரிஸ் 5 ஓட்டங்களுடனும், பின்ஞ் 3 ஓட்டங்களுடனும் மூன்றாம் நாளுக்காக நேற்றுக் களமிறங்கினார்கள். இந்திய அணியின் வேகப்பந்து வீச்சில் நேற்று கடும் எழுச்சி இருந்தது. 8 ஓட்டங்களுடன் பின்சை வெளியேற்றி இலக்குச் சரிவை ஆரம்பித்து வைத்தார் இசாந் சர்மா. அடுத்த சில நிமிடங்களில் ஹரிஸை வெளியேற்றினார் பும்ரா. கவாயா 21 ஓட்டங்களுடன் ஜடேயாவின் சுழலில் சிக்கினார். சோன் மார்ஷ், ட்ராவிஸ் ஹெட் இருவரும் அடுத்தடுத்து ஆட்டமிழந்தனர். அணித் தலைவர் பெய்ன் மத்திய வரிசையில் ஓரளவு தாக்குப்பிடித்தார். எனினும் மறுமுனையால் இலக்குகள் சரிந்து கொண்டிருந்தன. 151 ஓட்டங்களில் சகல இலக்குகளையும் இழந்தது ஆஸ்திரேலிய அணி. பந்துவீச்சில் பும்ரா 6 இலக்குகளையும், ஜடேயா 2 இலக்குகளையும், இசாந் சர்மா, சமி இருவரும் தலா ஓர் இலக்கையும் கைப்பற்றினார்கள்.

ஆஸ்திரேலிய அணியை பலோ ஒன்னுக்குப் பணிக்கக்கூடிய வாய்ப்பு இருந்த போதிலும், இரண்டாவது இன்னிங்ஸுக்காகத் தொடர்ந்து துடுப்பெடுத்தாடத் தீர்மானித்தது இந்திய அணி. அந்த அணி முதலாவது இன்னிங்ஸைப் போன்றல்லாமல் இரண்டாவது இன்னிங்ஸில் பெரும் தடுமாற்றத்தை வெளிப்படுத்தியது. குறிப்பாக புஜாரா 0, கோக்லி 0, ராகானே 1 என்று அடுத்தடுத்து வீழ்ந்தனர். நாள் முடிவில் இந்திய அணி 5 இலக்குகளை இழந்து 54 ஓட்டங்களைப் பெற்றுள்ளது. அகர்வால் 28 ஓட்டங்களுடனும், பன்ட் 6 ஓட்டங்களுடனும் களத்தில் உள்ளனர். ஆட்டத்தின் நான்காம் நாள் இன்றாகும். (ம)

## ரோகித் விரித்த வலையில் வசமாக மாட்டினார் மார்ஷ்

இந்தியாவுக்கு எதிரான மூன்றாவது டெஸ்ட் ஆட்டத்தில் ரோகித் சர்மா வகுத்த வியூகத்தால் சோன் மார்ஷ் ஆட்டமிழந்தமை ஊடகங்களின் கவனத்தை மிகையாகப் பெற்றுள்ளது.

ஆஸ்திரேலிய அணி துடுப்பெடுத்தாடிய போது சோன் மார்ஷ் வலுவான போராட்டத்தை வெளிப்படுத்த எத்தனித்தார். அவரை வீழ்த்திவிட்டால் ஆஸ்திரேலியாவின் துடுப்பாட்ட வரிசை ஏறக்குறைய முடிவுக்கு வரும் என்ற நிலை இருந்தது. இதனால் மார்ஷுக்கு பும்ரா மற்றும் ஜடேயா ஆகியோரைக் கொண்டு தொடர்ச்சியாக வீசினார் கோக்லி. பும்ரா திடீர் மேலெ மும்பல் பந்துவீச்சுக்கு அடுத்ததாக தாழ்வான பந்தொன்றை வீசினார். வேகம் குறைந்த, தாழ்வான பந்து அது. இதை சற்றும் எதிர்பாராத மார்ஷ் கால் காப்பில் வாங்கி எல்.பி.டபிள்யு. ஆனார். "இது ரோகித்தின் வியூகம்" என்று தெரிவித்துள்ளார் பும்ரா.

"நான் பந்துவீசிக் கொண்டிருந்த போது ஆடுகளம் மந்தமாக இருந்தது. பந்தும் சற்றே மென்மையடைந்து விட்டது. ஒன்றும் பெரிதாக நடக்கவும் இல்லை. அப்போதுதான் கடைசிப் பந்தை வீச வந்தேன். ரோகித் சர்மா என்னிடம், "நீ ஒரு வேகம் குறைந்த தாழ்வான பந்தை முயற்சி செய்து பார்க்கலாமே, நீ ஒருநாள் ஆட்டங்களில் வீசுவது போல" என்றார். எனக்கும் அது சிறந்த யோசனையாகப் பட்டது. ஏன் முயற்சி செய்யக் கூடாது என்று வீசினேன். பந்து சரியாக அமைந்தது. மார்ஷ் பவிலியனுக்குச் சென்றார்" - என்று பும்ரா மேலும் தெரிவித்தார். (ம)

## பும்ரா சில சாதனைகள்

இந்திய அணியின் வேகப்பந்து வீச்சாளர் பும்ரா, நேற்றையதினம் ஆறு இலக்குகளை வீழ்த்தியதை அடுத்து சில சாதனைகளைப் படைத்துள்ளார்.

பும்ரா இந்த ஆண்டிலேயே அறிமுகமானார். இதுவரை 9 ஆட்டங்களில் 45 இலக்குகளை வீழ்த்தியுள்ளார். இதன் மூலம் அறிமுகமான ஆண்டில் அதிக இலக்குகளைக் கைப்பற்றிய வீரர் என்ற சாதனையை அவர் நிலைநாட்டினார். அத்துடன் ஆஸ்திரேலியா, தென்னாபிரிக்கா மற்றும் இங்கிலாந்து ஆடுகளங்களில் ஐந்து இலக்குகளைக் கைப்பற்றி புதிய அடைவையும் அவர் நிலைநாட்டினார். (ம)

## கலைமதி ரெட்றோசஸ் அணி 'பிளே ஒவ்' ஆட்டத்துக்குத் தகுதி

யாழ்ப்பாணம், டிசெ. 29

கலைமதி ரெட்றோசஸ் அணிக்கும் கலைமதி ரைகர்ஸ் அணிக்கும் இடையிலான ஆட்டத்தில் கலைமதி ரெட்றோசஸ் அணி 6:2 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்று பிளே ஒவ் ஆட்டத்துக்குத் தகுதி பெற்றது.

நவிண்டில் கலைமதி விளையாட்டுக்கழக வீரர்களுக்கிடையே நடத்தப்படும் கலைமதி பிறீமியர் கால்பந்தாட்ட தொடர் நவிண்டில் கலைமதி விளையாட்டுக் கழக மைதானத்தில் இடம் பெற்று வருகின்றது. இந்தத் தொடரில் நேற்று முன்தினம் புதன்கிழமை இடம் பெற்ற ஆட்டத்தில் கலைமதி ரெட்றோசஸ் அணியை எதிர்த்து கலைமதி ரைகர்ஸ் அணி மோதியது.

முதற் பாதி ஆட்டத்தின் 10 ஆவது நிமிடத்தில் கலைமதி ரெட்றோசஸ் அணிக்கான முதலாவது கோலைப் பில்லா பதிவு செய்தார். பதிலுக்கு கலைமதி ரைகர்ஸ் அணிக்கான முதலாவது கோல் 13ஆவது நிமிடத்தில் ரஜனிகாந்தினாலும் இரண்டாவது கோல் 15ஆவது நிமிடத்தில்; சிந்துஜனினாலும் பதிவு செய்யப் பட்பட்டது.

கலைமதி ரெட்றோசஸ் அணி பதிலடியாக 18ஆவது நிமிடத்தில் இரண்டாவது கோலைப் பதிவு செய்தது. இந்தக் கோலை பில்லாவே அடித்தார். முதல்பாதி ஆட்டம் 2:2 என்று சமநிலையில் நிறைவுக்கு வந்தது.

இரண்டாவது பாதி ஆட்டம் விறுவிறுப்பாகியது. கலைமதி ரெட்றோசஸ் அணி ஆக்ரோசமாக ஆடியது. இரண்டாவது பாதியில் 2ஆவது மற்றும் 8 ஆவது நிமிடங்களில் பில்லா அதிரடியாக கோல்களைப் பதிவு செய்தார். 4:2 என்ற கணக்கில் ரெட்றோசஸ் அணி முன்னிலை பெற்றது.


இதன் பின்னரும் சிறப்பாக ஆடியது கலைமதி ரெட்றோசஸ் அணி. இரண்டாவது பாதி ஆட்டத்தின் 13ஆவது நிமிடத்தில் ராயு ஓர் கோலையும், 18ஆவது நிமிடத்தில் ரஜிவ் அடுத்த கோலையும் பதிவு செய்தார்கள். ஆட்டநேர நிறைவில் 6:2 என்ற கோல் கணக்கில் ரெட்றோசஸ் அணி வெற்றி பெற்றது. (5.23)

## பும்ராவின் பந்துவீச்சு எழுச்சியாக இருந்தது

### ஹரிஸ் புகழாரம்

இந்திய அணியின் வேகப்பந்து வீச்சாளர் பும்ராவின் பந்துவீச்சு பேரெழுச்சியாக இருந்தது என்று புகழ்ந்துள்ளார் ஆஸ்திரேலிய அணியின் ஆரம்பத் துடுப்பாட்ட வீரர் ஹரிஸ். ஆட்டம் முடிந்த பின்னர் நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பிலேயே இவ்வாறு தெரிவித்தார் அவர்.

"பும்ராவின் பந்துவீச்சு மிகவும் எழுச்சியாக இருந்தது. அவர் அபாயகரமான வீரர். அவரின் பந்துவீச்சை எதிர்கொள்வதற்குச் சிரமப் பட்டோம். ஆடுகளத்தில் ஏற்பட்ட திடீர் மாற்றமும் பும்ராவுக்குச் சாதகமாக அமைந்தது" என்று ஹரிஸ் மேலும் தெரிவித்தார். (ம)



# இலங்கை அணிக்கு இமாலய இலக்கு தொடரை வெல்லும் நிலையில் நியூசி.





PHYSICS
ENGLISH & TAMIL MEDIUM
GROUP & PERSONAL CLASSES
G.C.E. (A/L) 2019, 2020
By : Mr. M. Jeya Bsc, PGDE
Contact No : 076 294 3565
CAPS No. 52, Palaly Road, Thirunelvely-Junction. (Near Sampath Bank)
Contact No : 021 205 2240

நியூசிலாந்துக்கு எதிரான இரண்டாவது டெஸ்ட் ஆட்டத்தில் இலங்கை அணிக்கு 660 ஓட்டங்கள் இலக்காக நிர்ணயிக்கப்பட்டது.

இரண்டு நாள்கள் மீதமுள்ள நிலையில் மேலதிகமாக 636 ஓட்டங்களைப் பெற்றால் இலங்கைக்கு வெற்றி. 8 இலக்குகளை வீழ்த்தினால் நியூசிலாந்துக்கு வெற்றி என்ற நிலை உள்ளது.

இலங்கை அணி நியூசிலாந்துக்குச் சுற்றுப் பயணம் மேற்கொண்டுள்ளது. இந்த இரண்டு அணிகளுக்கும் இடையிலான முதலாவது ஆட்டம் சமநிலையில் முடிவடைந்ததை து ஆட்டம் கடந்த புதன்

நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற இலங்கை அணி முதலில் களத்தடுப்பைத் தீர்மானித்தது. நியூசிலாந்து அணி 178 ஓட்டங்களில் சகல இலக்குகளையும் இழந்தது. அதிகபட்சமாக சவுத்தி 68 ஓட்டங்களையும், வற்லிங் 46 ஓட்டங்களையும், ரெய்லர் 27 ஓட்டங்களையும் பெற்றனர். பந்துவீச்சில் லக்மல் 5 இலக்குகளையும், குமார 3 இலக்குகளையும், பெரேரா ஓர் இலக்கையும் கைப்பற்றினார்கள்.

பதிலுக்குக் களமிறங்கிய இலங்கை அணிக்கு முன்வரிசை முழுவதுமாக ஏமாற்றியது. அந்த அணி 104 ஓட்டங்களில் சகல இலக்குகளையும் இழந்தது. மத்தியூஸ் 33 ஓட்டங்களையும், சில்வா 21 ஓட்டங்களையும், குசல் மெண்டிஸ் 15 ஓட்டங்களையும் பெற்றனர். இவர்களைத் தவிர வேறு எவரும் பதின்மத்தை எட்டவில்லை.

பந்துவீச்சில் போல்ட் 6 இலக்குகளையும், சவுத்தி 3 இலக்குகளையும், கிராண்ட்ஹோம் ஓர் இலக்கையும் கைப்பற்றினார்கள்.

இரண்டாவது இன்னிங்ஸுக்காகக் களமிறங்கிய நியூசிலாந்து அணி நேற்றுமுன்தின நாள் முடிவில் 2 இலக்குகளை இழந்து 231 ஓட்டங்களைப் பெற்றிருந்தது. லாதம் 74 ஓட்டங்களுடனும், ரெய்லர் 25 ஓட்டங்களுடனும் மூன்றாம் நாளுக்காக நேற்றுக் களமிறங்கினார்கள். 40 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார் ரெய்லர். லாதத்துடன் இணைந்து சிறந்த ஆட்டத்தை வெளிப்படுத்தினார் நிக்கொல்ஸ். சதம் கடந்தார் லாதம். சிறந்த சராசரியில் நிக்கொல்ஸும் சதத்தைப் பதிவுசெய்தார். 176 ஓட்டங்களுடன் லாதம் ஆட்டமிழுந்தார். கிராண்ட்ஹோம் 45 பந்துகளில் 71 ஓட்டங்களைக் குவித்தார். நியூசிலாந்து அணி 4 இலக்குகளை இழந்து 585 ஓட்டங்களைப் பெற்றிருந்த நிலையில் ஆட்டத்தை இடைநிறுத்தியது. நிக்கொல்ஸ் 162 ஓட்டங்களுடனும், கிராண்ட்ஹோம் 71 ஓட்டங்களுடனும் ஆட்டமிழக்காதிருந்தனர். பந்துவீச்சில் குமார 2 இலக்குகளையும், சமீர, பெரேரா இருவரும் தலா ஓர் இலக்கையும் கைப்பற்றினார்கள்.

இரண்டாவது இன்னிங்ஸுக்காகத் துடுப்பெடுத்தாடிய இலங்கை அணி 2 இலக்குகளை இழந்து 24 ஓட்டங்களைப் பெற்றிருந்தபோது நாள் முடிவுக்கு வந்தது. சந்திமல் 14 ஓட்டங்களுடனும், குசல் மெண்டிஸ் 6 ஓட்டங்களுடனும் களத்தில் உள்ளனர்.

முதலாவது ஆட்டத்திலும் இலங்கை அணி இவ்வாறு படுதோல்வியடையக்கூடிய நிலையில் இருந்தபோது மத்தியூஸ் மற்றும் மென்டிஸ் இணைந்து அணியை மீட்டெடுத்தமை குறிப்பிடத்தக்கது. (ம)

SPOKEN ENGLISH
WITH DIPLOMA CERTIFICATE
O/L எழுதியோர், இளைஞர் யுவதிகள், மாணவர்களுக்கான 3 மாத உரையாடல் மூலமான ஆங்கிலப்பயிற்சிநெறி.
இறுதிப்பதிவுத்திகதி : 31.12.2018 திங்கள் மாலை : 4.30
முன்பதிவு செய்வோருக்கு ரூ 1800 பெறுமதியான 16 புத்தகங்கள் கொண்ட Study pack இலவசம்
சனி, ஞாயிறு பிரிவுகள் ஆரம்பம் - 05.01.2019 சனி
1. காலை : 08-10 3.மதியம் : 01-03
2. காலை : 10-12 4.மாலை : 03-05
ஒரு பிரிவில் 20 பேர் மட்டும்.
ஆங்கிலத்தில் ஓரெழுத்துத்தெரியாதவர்களும் தமிழ்போல சரளமாக மூன்றே மாதங்களில் சரளமாக ஆங்கிலம்பேசமுடியும்.
3 மாதங்களில் சரளமாக ஆங்கிலம் பேசமுடியுமென நிரூபிக்கப்பட்ட பாடநெறி
SAAMSON Experts in English Training
403, வெலிங்டன் சந்தி, பெருமாள் கோவிலடி, யாழ்நகர்.
077 621 4567 222 4282

31ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்



தோற்றம் 18 . 09 . 1987
மறைவு 29 . 11 . 2018

இராஜ்குமார் விஜெய்

29.11.2018 வியாழக்கிழமை இறைபதம் அடைந்த எங்கள் அன்புச் செல்வத்தின் பிரிவுச் செய்தி அறிந்து நேரில் வந்து ஆறுதல் தெரிவித்து எமக்கு வேண்டிய சகல உதவிகளையும் புரிந்து துயரில் பங்கு கொண்ட உற்றார், உறவினர், அயலவர்கள், நண்பர்கள் தொலைபேசி மூலம் தொடர்பு கொண்டு ஆறுதல் தெரிவித்தவர்களுக்கும் பீப்பிள்ஸ் லீசிங் அன்பர்களுக்கும், வைத்திய உதவி புரிந்த யாழ் போதனா வைத்தியசாலை வைத்தியர்கள், தாதியர் அனைவருக்கும் எமது மனம் நிறைந்த நன்றியைத் தெரிவிக்கின்றோம்.

எமது அன்புச் செல்வத்தின் ஆத்மா சாந்திபெற மனமுருகி பிரார்த்திக்கின்றோம்.

37, சந்தை ஒழுங்கை,
மானிப்பாய். (CS 22144)(14.17)
குடும்பத்தினர்.

# செல்டாவை வென்றது பார்சிலோனா அணி!

ஸ்பானியக் கழகங்களுக்கு இடையிலான லா லிகா தொடரில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற ஆட்டத்தில் பார்சிலோனா அணி வெற்றிபெற்றது.

பார்சிலோனாவை எதிர்த்து செல்டா அணி மோதியது. ஆட்டத்தின் 18ஆவது நிமிடத்தில் பார்சிலோனாவின் முதலாவது கோலைப் பதிவுசெய்தார் மெஸ்ஸி. அந்த அணியின் ஆதிக்கத்துடன் முடிவுக்கு வந்தது முதல் பாதி. இரண்டாவது பாதியில் பார்சிலோனாவின் இரண்டாவது கோலைப் பதிவுசெய்தார் டெம்பிலி. முடிவில் 2:0 என்ற கோல் கணக்கில் பார்சிலோனா வெற்றிபெற்றது . (ம)






இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 29.12.2018 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.